இருபது · Registered as a News paper

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:6 வள்ளுவர் ஆண்டு2028 ஐப்பசி29 சனிக்கிழமை (15-11-1997) SANJEAVY–Regenerative Tamil Weekly சிகரம்:24

# களனி திஸ்ஸ மின்நிலைய எண்ணெய்த் தாங்கிகள் குண்டுவெடிப்பில் சேதம்!

## படையினர் தீயைக் கட்டுப்படுத்தினர்

கொழும்பு, நவம்பர் 15

கொழும்பு களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் நான்கு எண்ணெய்த் தாங்கிகள் சேதம் அடைந்தன. குண்டுகள் காந்தம் மூலம் எண்ணெய்த் தாங்கிகளில் பொருத்தப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை 4.45 மணி அளவில் நடத்தப்பட்ட இத்தாக்குதல் காரணமாக எவரும் உயிர் இழந்ததாகவோ அல்லது காயமடைந்ததாகவோ தகவல் இல்லை. எனினும் எண்ணெய்த் தாங்கிகளில் தீ பரவி ஒன்றரை பவுஸர் அளவு டீசல் வரை வெளியேறி இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மொத்தம் 9குண்டுகள் எண்ணெய்த் தாங்கிகளில் வைக்கப்பட்டன என்றும் —

அவற்றில் 7 குண்டுகள் வெடித்தன என்றும் — பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நான்கு எண்ணெய்த் தாங்கிகளும் மொத்தம் ஒரு கோடியே 30 லட்சம் லீற்றர் டீசல் கொள்ளக் கூடியவை.

ஆனால், சம்பவ தினம் 30 லட்சம் லீற்றர் டீசல் மட்டுமே அவற்றில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

டீசல் தாங்கிகளைத் தாக்கி அதன் மூலம் தீயைப் பரவச் செய்து மின் உற்பத்தி நிலையத்தை அழிப்பதே தாக்குதல் காரர்களின் திட்டம் என்று பொலீ

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் சோமு விபத்தில் மரணம்!

## இராணுவ ஹெலி வீழ்ந்தது

புதுடில்லி, நவ. 15

திராவிட முன்னேற்றக்கழகத்தின் மூத்த பிரமுகரும் மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சருமான என். வீ. என். சோமு (வயது 60) நேற்றுக் காலை இடம்பெற்ற ஹெலிக்கொப்ரர் விபத்தில் உயிரிழந்தார்.

அருணாச்சல் பிரதேசத்தில் இந்திய இராணுவத்தின் மலைப் பகுதிப் பிரிவுப் படையினர் மத்தியில் உரையாற்றுவதற்காக இராணுவ ஹெலி ஒன்றில் சென்று கொண்டிருந்த சமயமே இவ் விபத்து நேர்ந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)


# சென்றல் முகாமில் 8 பொலீஸார் பலி!

மட்டக்களப்பு, நவ. 15

அம்பாறை சென்றல் முகாமில் நேற்று காலை விடுதலைப் புலிகளுக்கும் பொலீஸாருக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் 8 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை 7.15க்கு வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)



வடக்கின் புதிய படைத் தளபதியாக மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாகப் பதவியேற்ற வைபவத்தில் எடுக்கப்பட்ட படம் இது.

மேஜர் ஜெனரல் பலகல்ல குத்துவிளக்கு ஏற்றுகிறார். அருகில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், யாழ். சிவில் நிர்வாகப் பொறுப்பாளர் பிரிகேடியர் திலகரட்ண ஆகியோர் காணப்படுகின்றனர். (ஐ)

# பாதுகாப்பு வலய கம்பிகளை துண்டித்து ஊடுருவினர்

கொழும்பு, நவ. 15

களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தின் எண்ணெய்க் குதங்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியவர்கள் மின் உற்பத்தி நிலைய எல்லைப் பாதுகாப்பு வலயக் கம்பிகளைத் துண்டித்துவிட்டு உள்ளே ஊடுருவியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2 அல்லது 3 பேர்தான் உள்ளே ஊடுருவி இருக்கின்றார்கள் என சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பவ நேரம் மின் உற்பத்தி நிலையத்தில் 30 ஊழியர்கள் கடமையில் இருந்த

[8 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

காரைநகர் பகுதி நேற்றுக் காலை 6 மணியளவில் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

காரைநகர் கலாநிதி தியாகராசா வித்தியாலயம், காரைநகர் யாழ்ரன் கல்லூரி ஆகியவற்றுக்கு மக்கள் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

ஒரு சிலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதேவேளை — பருத்தித்துறை தும்பளைப் பகுதியும் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

(இ-9-173)

## பதுளையில் மின்மாற்றி சேதம்

கொழும்பு, நவ. 15

பதுளையில் மின் மாற்றி ஒன்று நேற்று இனந்தெரியாதவர்களால் குண்டு வைத்து சேதமாக்கப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதலை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-3)

# கொழும்பில் 40பேர் கைது!

கொழும்பு, நவ. 15

கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து தேடுதல் மேற்கொண்ட படையினர் 40 பேரைக் கைதுசெய்து மேல்விசாரணைக்கு உட்படுத்தி உள்ளனர்.

கிராண்ட்பாஸ் உட்பட, குண்டு வெடிப்பு இடம்பெற்ற பகுதிக்கு அருகில் உள்ள கிராமங்கள் சுற்றிவளைத்துத் தேடுதல் இடம்பெற்றது.

தனியார் வானொலியில் வீட்டை விட்டு வெளியேறக் கூடாது என அறிவித்துத் தேடுதல் பரவலாக இடம் பெற்றது.

குண்டு வெடித்த இடத்தில் நேற்று நண்பகல் வரை தீச்சுவாலை காணப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

[இ-3]

# பெருமாள்கோயில் முன்றலில் நேற்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், நவ. 15

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் தமது மூன்றாம் கட்ட உண்ணாவிரதத்தை நேற்றுக்காலையாழ். பெருமாள் கோயில் முன்றலில் அனுஷ்டித்தனர்.

நேற்றுக்காலை பெருமாள்

[8 ஆம் பக்கம் பார்க்க]

# இனந்தெரியாதோரினால் இருவர் சுட்டுக்கொலை!

## பண்டத்தரிப்பு, சாவகச்சேரி பகுதிகளில்

யாழ்ப்பாணம், நவ.15

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் இருவர் உயிரிழந்தனர்.

சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பில் வீதியில் சென்று கொண்டிருந்த எஸ். பத்மசீலன் (வயது-28) என்பவர் நேற்று இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வைக்கோல் லொறியில் வந்து பொலீஸார் மீது தாக்குதல்

## திருமலைப் பகுதியில் சம்பவம்

மட்டக்களப்பு, நவ. 15

திருகோணமலை மாவட்டம் மூதூர் — தோப்பூர் பாலத்தில் உள்ள பொலீஸ் சோதனைச் சாவடி மீது நேற்று நண்பகல் 12.30 மணி அளவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 3 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

வைக்கோல் ஏற்றி வந்த லொறி ஒன்றில் மறைந்து வந்த விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் ஓர் ஊர்காவல்படை வீரர் காணாமல் போயுள்ளார்.

ரி 56ரக துப்பாக்கிகள் இரண்டு மற்றும் வோக்கிரோக்கி என்பன புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸார் திருப்பித் தாக்கியதில் 3 புலிகள் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-21)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

# 'உதயன்' பல்கலைக்கழக சமூகத்தை சமுதாயத்தில் இருந்து பிரிக்கின்றதா?

''யாழ். 'பல்கலைக்கழக மாணவரின் நிலைப்பாடு'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவரால் ஒப்பமிடப்பட்டு கொழும்புத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கை ஒன்று எந்த வித அடித்தல் திருத்தலுமின்றி இங்கு பிரசுரமாகியுள்ளது.

இந்த அறிக்கை 'உதயன்' அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படா விட்டாலும் கூட-அந்த அறிக்கையில் உதயன் பத்திரிகை குறித்து பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டிருப்பதாலும் —

யாழ். பல்கலைக்கழகமாணவர்களின் சார்பில் 'உதயன்' பத்திரிகைக்கு எதிராக அண்மைக் காலத்தில் உத்தியோக பூர்வமாகக் குற்றம் சுமத்தப் பட்டு வெளிவந்த முதலாவது ஆவணமாக அது இருப்பதாலும்-

தற்போது எழுந்துள்ள சர்ச்சையின் அடிப்படை எங்குள்ளது என்பதைப் பொது மக்கள் புரிந்து கொள்வதற்காகவும்-

அந்த அறிக்கையை அப்படியே பிரசுரிக்கின்றோம். இந்த அறிக்கை குறித்து பின்வரும் விடயங்களையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

1. ''அண்மைக்காலங்களில் 'உதயன்' நாளிதழில் வெளியாகும் யாழ் பல்கலைக்கழகம் சம்பந்தமான செய்திகள் பல உண்மைக்குப் புறம்பானதாயும் திரிபுபடுத்தப்பட்டவையாகவும், பல்கலைக்கழக சமூகத்தை ஏனைய சமூகத்திலிருந்து பிரிக்கும் நோக்குடனும் எழுதப்படுகின்றன'' —என்பது முதலாவது குற்றச்சாட்டு.

'ராகிங்' விவகாரம் தவிர்ந்த ஏனைய விடயங்கள் எதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்களா? அப்படியானால் அதைப் பட்டியலிட அவர்களால் முடியுமா?

'ராகிங்' பற்றிய செய்திகளைப் பொறுத்தவரை அண்மைக் காலத்தில் உதயனில் வெளியானவை மூன்று வகைகளைச் சேர்ந்தவை

ஒன்று— பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் வரப்பிரகாஷ் படுகொலையை அடுத்து பொதுவாக 'ராகிங்' தொடர்பாக யாழ். மக்களின் உணர்வலைகளை வெளிப்படுத்துகின்ற கருத்துக்கள் தொடர்ந்து உதயனில் வெளிவருகின்றன. அவை எவையும் தனியாக யாழ் பல்கலைக்கழகத்தையோ அங்கு பயிலும் மாணவர்களையோ சுட்டுவனவல்ல. அவை 'ராகிங்' என்ற சமூக விரோதச் செயலைப் புரியும் அனைவரையும் — அவர்கள் எந்தப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் — அவர்களைக் கண்டிப்பவையாகவே பொதுவாக உள்ளன. அதுவே 'ராகிங்' தொடர்பாக எமது சமூகத்தின் பிரதிபலிப்பு என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அதனை தங்களுக்கு தொப்பி அளவாக இருக்கின்றது என்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தூக்கிப் போட்டுக் கொண்டால் அதற்கு 'உதயன்' பொறுப்பல்ல. அது தான் 'உதயன்' மீதான குற்றச்சாட்டு என்றால், 'ராகிங்' என்ற சமூக விரோதச் செயலுக்கு எதிராகப் போராட வேண்டிய கடப்பாடு, சமூகத்தின் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் பத்திரிகைக்கு உள்ளது என்ற அடிப்படையில் அந்தக் 'குற்றத்தை' உதயன் இன்றும் — என்றும் — தொடர்ந்து புரிவான் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம். 'ராகிங்' என்ற சமூக விரோதச் செயலை ஒழிக்க வேண்டும்; அதில் 'உதயன்' முன்னிற்கவேண்டும் என்பது தான் சமூகத்தின் எதிர்பார்ப்பு என்பதும் உதயனுக்குத் தெரியும்.

பல்கலைக்கழக மாணவர்களையோ, நிர்வாகத்தையோ, பல்கலைக்கழக சமூகத்தையோ தவறான முறையில் சாடுவதோ சமூகத்திலிருந்து பிரித்து விடுவதோ உதயனின் நோக்கமல்ல.

இரண்டாவது — வேறு பல்கலைக்கழகங்கள், கல்வியியல் கல்லூரிகள் போன்றவற்றில் இடம் பெறும் ராகிங் பற்றிய செய்திகள். அவற்றுக்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 'உதயன்' மீது குற்றம் ஏதும் சுமத்தியதாக இல்லை.

மூன்றாவது — யாழ். பல்கலைக்கழகத்தில் அல்லது யாழ். பல்கலைக்கழக மாணவரால் மேற்கொள்ளப்படும் 'ராகிங்' பற்றிய செய்தி. இந்த வகையில் அண்மைக் காலத்தில் ஒரேயொரு செய்தி மட்டும் 11-11-1997 ஆம் திகதியன்று உதயனில் வெளியாகி இருந்தது. வாசகர்களின் நினைவுக்காக அந்தச்செய்தி இப்பக்கத்தில் தனியாக மீண்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

அச்செய்தியும் அதனைத் தொடர்ந்து 'உதயன்' அலுவலகம் கல்வீச்சுக்கு இலக்கானது குறித்து வெளியான செய்தியும் முற்றிலும் உண்மையானவை என 'உதயன்' மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றான். அதனை மறுக்க விரும்புபவர்கள் உரிய சட்ட வழியில் அதனை மறுக்க முயன்றால் எதிர் கொள்ள 'உதயன்' தயார்.

இது தவிர, யாழ். பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு பற்றிய செய்தி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. அது மாணவர்களின் சார்பிலான உத்தியோக பூர்வ தகவல் அல்ல என்பதையும், சில மாணவர்கள் மூலம் திரட்டப்பட்ட தகவல்களே அதில் இடம் பெற்றிருந்தன என்பதையும் அச்செய்தியிலேயே குறிப்பிட்டிருந்தோம்.

ஆகவே இவற்றில் எவை உண்மைக்குப் புறம்பானவை? எவை திரிபுபடுத்தப்பட்டவை? எவை பல்கலைக்கழக சமூகத்தை ஏனைய சமூகத்திலிருந்து பிரிக்கும் நோக்குடன் எழுதப்பட்டவை? மாணவர் ஒன்றியத் தலைவர் தெளிவுபடுத்துவாரா?

2. ''குறித்த பத்திரிகை தற்சமயம் குடாநாட்டிலிருந்து வெளியாகும் ஒரே பத்திரிகையாதலால் எதிர்க்கருத்துக்கு இடமின்றி மக்களைச் சென்றடையும் இந்தச் செய்திகள் மக்களைத் தவறாகச் சிந்திக்கத் தூண்டுகின்றன'' என்பது அடுத்த குற்றச்சாட்டு.

குடாநாட்டிலிருந்து வெளி வரும் ஒரே பத்திரிகை 'உதயன்' என்பது உண்மையே. [illegible] அல்லல்கள் அச்சில் வடிக்கக் கூடியவை அல்ல. அவை இங்கு பொருத்தமற்றவை.

ஆனால், எதிர்க்கருத்துக்கு உதயனில் இடமில்லை என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கருதுமானால் அது முற்றிலும் தவறானது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம். அண்மைக் காலத்தில் மாணவர் ஒன்றியமோ, மாணவர் பிரதிநிதிகளோ இதுவரை இவ்விவகாரம் குறித்து தகவலோ, அறிக்கையோ, செய்தியோ, மறுப்போ, ஏதேனும் உதயனுக்கு அனுப்பி அவை ஏதும் பிரசுரமாகாமல் உள்ளனவா? நீங்கள் அனுப்பவே இல்லையே! உங்கள் பிரதிநிதிகள் யாரேனும் நேரில் ஆசிரிய பீடத்துக்கு வந்து வாய் மூலமேனும் கருத்துக் கூறவில்லையே? எதிர்க்கருத்து சமர்ப்பிக்கப்படாமல், பிரசுரமாகவில்லை என்றால் அது யாருடைய தவறு?

உங்களின் 14-11-1997 (நேற்றைய) திகதியிடப்பட்ட அறிக்கை கூட நாமாகத் தேடிப் பெற்றதே தவிர, நீங்கள் சமர்ப்பித்ததல்லவே?

ஆர்ப்பாட்டம், கல்வீச்சுடன் சில பல்கலைக்கழக மாணவர்களினால் 'உதயன்' சுவரில் ஒட்டப்பட்ட போஸ்டர்களில் கூட மொட்டையான குற்றச்சாட்டுக்களைத் தவிர பிரசுரிக்கக்கூடியவினக்கங்கள், கருத்துக்கள் ஏதும் இருக்கவில்லையே? அத்தோடு யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உத்தியோக பூர்வப் பிரதிநிதிகளாக அந்த வன்முறை ஆர்ப்பாட்டக்காரர்களை நாம் ஏற்றுக்கொள்ளாததால் அதைக் கூட ஒரு கருத்தாகவே எம்மால் எடுக்க முடியவில்லையே!

'ராகிங்' தொடர்பாக வந்த பொதுமக்களின் உணர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உதயனில் வெளியான செய்தி

'யாழ்ப்பாணத்திலும் ராகிங் சூடு பிடிக்கிறது? என்ற தலைப்பில் 11-11-97 அன்று உதயனில் வெளியான செய்தி வருமாறு:-

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். பல்கலைக்கழக வர்த்தகப்பிரிவைச்சேர்ந்த முதலாமாண்டு மாணவர் ஒருவர் பல்கலைக் கழக உணவு விடுதியில் வைத்து சிரேஷ்ட மாணவர்கள் சிலரால் தாக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

சிரேஷ்ட மாணவர்களின் 'ராகிங்' நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்காமல் முரண்டு பிடித்த முதலாண்டு மாணவர் ஒருவரே தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக ஊழியர் ஒருவருக்கும் சிரேஷ்ட மாணவர்களுக்கும் இடையிலும் பின்னர் வாக்குவாதம் இடம் பெற்றதாகவும் தெரியவந்தது. (உ-9)

## மற்றொரு பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி

''யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை'' என்ற தலைப்பில் கொழும்புப் பத்திரிகை ஒன்றில் 11-11-1997 அன்று வெளியான செய்தி வருமாறு:

யாழ். நகரிலும் பல்கலைக்கழக மாணவர்களின் பகிடிவதைச் சம்பவங்கள் குறித்துச் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரேஷ்ட மாணவர்களின் பணிப்பின் பேரில் சுடு தண்ணீர்ப் பாத்திரத்தைக் கையில் ஏந்திய ஒரு மாணவன் காயங்களுக்கு உள்ளானதாகவும், கொக்குவில் பகுதியில் பகிடி வதையில் ஈடுபட முனைந்த சிரேஷ்ட மாணவன் ஒருவன் ஊரவர்களால் தாக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

மாணவிகள் சம்பந்தப்பட்ட பகிடிவதைச் சம்பவங்களும் குறித்துச் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

பகிடி வதைச் சம்பவத்தின் போது ஒரு மாணவியின் உடை கிழிக்கப்பட்டு அவர் அவமானப்படுத்தப் பட்டதாகவும், இன்னுமொரு சம்பவத்தில் பகிடிவதை பொறுக்கமுடியாமல் தப்பியோடிய ஒரு மாணவி தேவாலயம் ஒன்றில் தஞ்சம் புகுந்ததாகவும், அவரைக் காப்பாற்றிய அத்தேவாலயப் பங்குத்தந்தை அவரைப் பாதுகாப்பாகப் பெற்றோரிடம் கையளித்ததாகவும் தெரியவருகிறது.

— இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

ஆசிரியர் குறிப்பு:- இச்செய்தியை இந்த இடத்தில் மறுபிரசுரம செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதற்காக அப்பத்திரிகையிடம் மன்னிப்புக் கோருகின்றோம். யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மேற்படி பத்திரிகைக்கும் இடையில் கருத்து வேற்றுமையை ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல. 'ராகிங்' தொடர்பாக யாழ். மக்கள் முன்னிலையில் ''ராகிங்'' போக்குள்ள சக்திகளால் மேற்கொள்ளப்படக் கூடிய தவறான பிரசாரத்தை அம்பலப்படுத்தவே குறிப்பிட்ட செய்தியை இங்கு பிரசுரிக்க நேர்ந்தது குறித்து வருந்துகிறோம்.

## மாணவர் ஒன்றிய அறிக்கை

''யாழ் பல்கலைக்கழக மாணவரின் நிலைப்பாடு'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்றைய திகதியிடப்பட்டு 'உதயன்' அல்லாத பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போது பல்கலைக்கழக மாணவர் பற்றி சமூகத்தின் சில பிரிவினரிடையே நிலவுகின்ற அசாதாரண கருத்துக்கள் தொடர்பான எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

எவ்வகையான செய்தியையும் எந்த நேரத்திலும் வெளியிடுவதற்கு எந்தவொரு பத்திரிகைக்கும் உரிமையுண்டு. இதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. அதேபோல சமூகத்தின் சமநிலை குழம்பாமலும், சமூகத்தை ஒரு முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லத்தக்கதாகவும் உண்மைச் செய்திகளைப் பிரசுரிப்பது ஒரு பத்திரிகையின் தார்மீகக் கடமையாகும். இந்தக் கடமையிலிருந்து விலகும் எந்தப் பத்திரிகையும் பத்திரிகையாகக் கணிக்கப்பட முடியாதவை.

அண்மைக் காலங்களில் உதயன் நாளிதழில் வெளியாகும் யாழ். பல்கலைக்கழகம் சம்பந்தமான செய்திகள் பல உண்மைக்குப் புறம்பானதாயும், திரிபு படுத்தப்பட்டவையாகவும், பல்கலைக்கழக சமூகத்தை ஏனைய சமூகத்திலிருந்து பிரிக்கும் நோக்குடனும் எழுதப்படுகின்றன. குறித்த பத்திரிகை தற்சமயம் யாழ். குடாநாட்டிலிருந்து வெளியாகும் ஒரே பத்திரிகையாதலால் எதிர்க் கருத்துக்கிடமின்றி மக்களைச் சென்றடையும் இந்தச் செய்திகள் மக்களைத் தவறாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. இதனால் பல்கலைக்கழக மாணவர்கள் சமூகத்தில் முகங்காட்ட முடியாத சூழ்நிலை உருவாகிவருகிறது. இது அமைதியாகத் தமது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் எமது மாணவர்களின் மனங்களில் ஆறாத வேதனையையும், விசனத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலைக்கு ஒரு முடிவுகட்டும் வகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் சில விடயங்களை சமூகத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் தெளிவு படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம்.

★ சமூகத்தில் புற்றுநோய் போல் வேரூன்றிவிட்ட 'பகிடிவதை' என்னும் இழிசெயலை எப்போதும் எமது ஒன்றியம் கண்டித்து வந்துள்ளது. அதை மீண்டும் வற்புறுத்திக்கூற விரும்புகிறது.

★ யாராவது அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாயின் அது ஏனைய மாணவர்களாலேயே இனம் காட்டப்படுவதுடன், பல்கலைக்கழக நிர்வாகத்தினால் அவர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

★ பொதுமக்களில் யாரேனும் இவ்வாறான 'பகிடிவதைச்' சம்பவங்கள் பற்றி அறிந்தால் அது பற்றிய பூரண விவரங்களை பல்கலைக்கழக நிர்வாகத்திடம் தெரியப்படுத்த வேண்டும். பூரண விசாரணையொன்றின் பின் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்க அது வழிசமைக்கும். இதை விடுத்து, பல்வேறு புனைபெயர்களுடன் பத்திரிகைகளுக்கு எழுதிக் கொண்டிருப்பதில் பயனேதும் கிட்டப்போவதில்லை.

மேற்படி விடயங்களைத் தெளிவுபடுத்தும் அதே வேளை யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் யாழ். பல்கலைக்கழக மாணவர் சார்பில் கோரிக்கையொன்றையும் முன்வைக்கவிரும்புகிறோம்.

★ பத்திரிகையில் வெளியாகும் எமது பல்கலைக்கழகம் பற்றிய உண்மைக்குப் புறம்பான செய்திகள் பல்கலைக்கழக மாணவ சமூகத்தை மட்டுமன்றி பல்கலைக்கழக சமூகத்தையே தலைகுனிவுக்குள்ளாக்குகிறது என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். இவ்வாறு வெளிப்படையாக, உண்மைக்குப் புறம்பாக வரும் செய்திகளை இனம் கண்டு அதன் மீது சட்ட நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் அத்தகைய செய்திகள் எழுந்தமானமாக வெளிவருவது தடுக்கப்பட வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிற்கான புதிய படைத் தளபதி பலகல்ல

# புலிகளுக்கு விடுக்கும் சமாதான அழைப்பு!

"மகிழ்வாரோடு மகிழுங்கள்; அழுவாரோடு அழுங்கள். நீங்கள் ஒரு மனத்தவராய் இருங்கள்; உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுங்கள். நீங்கள் உங்களையே அறிவாளிகள் எனக் கருதிப் பெருமிதம் கொள்ள வேண்டாம்

"தீமைக்குப் பதில் தீமை செய்யாதீர்கள்; எல்லா மனிதரும் நலம் எனக்கருதுபவை பற்றியே எண்ணுங்கள். இயலுமானால் உங்களால் முடிந்தவரை எல்லோரோடும் அமைதியுடன் வாழுங்கள்; அன்பார்ந்தவர்களே! பழிவாங்காதீர்கள்; அதைக்கடவுளின்சினத்திற்கு விட்டு விடுங்கள். ஏனெனில், மறைநூலில் எழுதியுள்ளவாறு 'பழிவாங்குவதும் கைம்மாறு அளிப்பதும் எனக்கு உரியன' என்கின்றார் ஆண்டவர்.

"உன் எதிரி பசியோடு இருந்தால் அவனுக்கு உணவு கொடு; அவன் தாகத்தோடு இருந்தால் அவனுக்குக் குடிக்க ஏதாவது கொடு. இவ்வாறு செய்தால் அவன் தலைமேல் எரிதழலைக் குவிப்பாய்."

"தீமை உங்களை வெல்ல விடாதீர்கள்; நன்மையால் தீமையை வெல்லுங்கள்."

(12:15-21)

புனித பைபிளில் உள்ள இந்த இறைமொழி நேற்றுக் காலை பலாலியில் உள்ள— பாதுகாப்புப் படைகளின் வடபகுதித் தளபதியின்— அலுவலகத்திலே கம்பீரமாக— அழுத்தமாக— ஒலித்தது.

தூய பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் இடம்பெற்றிருக்கும் இந்த இறைமொழியை நமது யாழ். ஆயர் அதிவந்தனைக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அவர்கள் தமக்கேயுரிய சாந்தத்துடன் எடுத்தியம்பினார்.

பாதுகாப்புப் படைகளின் வடக்கிற்கான புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் லயனல்பி. பலகல்ல நேற்றுக் காலை உத்தியோக பூர்வமாகப் பதவியேற்றதை ஒட்டி வைபவரீதியாக நடந்த சமயச் சடங்குகளின் போது புதிய தளபதிக்கு தமது ஆசிகளை வழங்கிய சமயமே புனித பைபிளின் மேற்படி வாசகங்களை நமது ஆயர் குறிப்பிட்டார். மிகப் பொருத்தமான வாசகங்கள்!

புதிய தளபதிக்கு இறை ஆசி வழங்கிய நல்லை குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் "மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்.." என்ற தேவாரத்தைப் பாடி தமது வாழ்த்தை நிறைவு செய்ததும் மிகப் பொருத்தமாக இருந்தது.

புதிய தளபதி பதவியேற்கும் வைபவம் பலாலி படைத் தலைமையகத்தில் மிக எளிமையாக நடைபெற்றது.

புதிய தளபதிக்கு உதவியாகப் பணியாற்றப் போகும் இராணுவ அதிகாரிகள், கடற்படை - விமானப்படை - பொலீஸ் ஆகிய மூன்றையும் சேர்ந்த வடபகுதி அதிகாரிகள், யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், யாழ். ஆயர், நல்லை குருமகா சந்நிதானம் ஆகியோர் இந்த வைபவத்தில் பங்குபற்றினர்.

அதன் பின்னர் சங்கானை முருகமூர்த்தி கோயிலில் நடைபெற்ற விசேட பூசையில் மேஜர் ஜெனரல் பலகல்லவும் அவர் குழுவினரும்கலந்து கொண்டார்கள்.

மேஜர் ஜெனரல் பலகல்ல வடபகுதிக்கான புதிய தளபதியாகப் பதவியேற்கும் இச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ளஇராணுவக் கட்டமைப்பை சற்று திரும்பிப் பார்ப்பது பொருத்தமானது.

1995 ஒக்ரோபர் மாதத்து புலம்பெயர்வுக்குப் பின்னர் வலிகாமத்துக்கு மக்கள் திரும்பியபோது, பலாலியைத் தமது தலைமையகமாகக் கொண்டு இயங்கியவர் வடபகுதி இராணுவத் தளபதி மேஜர்ஜெனரல் கருணரதிலக. அவரின் இடத்துக்கே தற்போது மேஜர் ஜெனரல் பலகல்ல நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தை ஸ்ரீலங்காப் படைகள் மீண்டும்




கைப்பற்றி சொற்ப காலமே ஆகியிருந்த அவ்வேளையில் யாழ். நகரில் நிலை கொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தின் 512 பிரிக்கேட் படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்தவர் பிரிகேடியர் ஆனந்த ஹமாங்கொட. அவருக்கு மேலே— மேஜர் ஜெனரல் கருணாதிலகவுக்கு அடுத்தபடியாக — 51ஆவது டிவிஷன் படையணியின் தளபதியாக அச்செழுவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா.

யாழ். நகரக் கமாண்டராக இருந்த ஆனந்த ஹமாங்கொட குருநாகலைச் சேர்ந்தவர். இனத்துவேஷம்கிஞ்சித்தும் இல்லாதவர்.

புலம் பெயர்ந்த மக்கள் வலிகாமத்துக்குத் திரும்பிய சமயம் தமது படையணியால் செய்யக் கூடிய அனைத்து உதவிகளையும் மக்களுக்கு வழங்க முயற்சித்தவர். அதன் மூலம் குறுகிய காலத்துக்குள் யாழ். மக்களின் மனதில்நல்ல இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

அவ்வேளையில்தான் யாழ். ஸ்ரான்லி வீதியில் 1996 ஜூலை 4 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பிரிகேடியர் ஹமாங்கொட பலியானார்.

அன்று யாழ். ஸ்ரான்லி வீதியில் கட்டடப் பொருள்கள் கூட்டுத் தாபனத்தின் கிளை ஒன்றைத் திறந்து வைப்பதற்காக அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா வந்திருந்தார். அவரைக் கூட்டி வந்த பிரிகேடியர் ஹமாங்கொட மீண்டும் அவரைக் கூட்டிச் செல்வதற்காக தமது வாகனத்தில் ஏறிய போது தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலுக்கு இலக்கானார்.

அமைச்சருக்கு வைக்கப்பட்ட இலக்கில் பிரிகேடியர் ஹமாங்கொட சிக்கிக் கொண்டது போலவும்—

அமைச்சர் தெய்வாதீனமாகத் தப்பிவிட்டார் என்பது போலவும்—

தென்பகுதியில் பத்திரிகைகள் விழுந்தடித்துக் கொண்டு பரபரப்புச் செய்திகளை வெளியிட்டன.


ஆனால் உண்மை அதுவல்ல என்கின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்.

சம்பவம் நடந்த சமயம் வாகனத்தின் இடது புறக் கதவைத் திறந்து வாகனத்திற்குள் ஏறி அமர்ந்தார் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா. அவர் வாகனத்துக்குள் ஏறியதும் சாரதியின் இருக்கையில் அமரும் நோக்குடன் வலதுபுற — சாரதிப் பக்க — கதவை பிரிகேடியர் ஹமாங்கொட திறந்த போது அவரை நெருங்கி வந்து தற்கொலைத் தாக்குதல் நபர் (யுவதி) குண்டை வெடிக்க வைத்து, தானும் பலியாகி, பிரிகேடியரின் உடலையும் சின்னாபின்னமாக்கினார்.

தற்கொலைத் தாக்குதல் நபரின் இலக்கு அமைச்சராக இருந்திருக்குமானால்—

வாகனத்தின் வலது பக்கமாக வந்து பிரிகேடியருக்கு அருகில் சென்று குண்டை வெடிக்க வைத்த தற்கொலைத் தாக்குதல் நபரினால் வாகனத்தின் இடது புறத்துக்குச் சென்று அமைச்சர் வாகனத்தில் ஏறும் போது அவர் பக்கத்தில் குண்டை வெடிக்க வைத்திருக்க முடியாமல் போயிருக்குமா?

அமைச்சர் கலந்துகொண்ட அன்றைய நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் கட்டுப்பாடின்றி நடமாட அனுமதிக்கப்பட்டனர் என்பதுபின்னர் விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.



மேஜர் ஜெனரல் பலகல்லவுக்கு ஆசி கூறும் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகள்.

எனவே தற்கொலைக் குண்டுதாரியின் இலக்கு அமைச்சராக இருந்திருக்குமானால் — அன்று இருந்த பலவீனமான பாதுகாப்பு ஏற்பாட்டில் — அவரை நெருங்கியிருப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமான காரியமாக இருந்திருக்காது.

எனவே தற்கொலைக் குண்டுதாரியின் இலக்கு பிரிகேடியர் ஹமாங் கொடவாகத்தான் இருந்திருக்கும் என்று ஓரளவு தெளிவு.

சதி தற்கொலைத் தாக்குதல் இலக்காக பிரிகேடியர் ஹமாங் கொடவை ஏன் தேர்ந்தெடுத்திருப்பார்கள் என்ற கேள்வி ஒரு புறமிருக்க —

அமைச்சர் கலந்து கொள்ளும் — வழமையை விட பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகம் உள்ள — சந்தர்ப்பத்தை இத்தாக்குதலுக்கு ஏன் தேர்ந்தெடுத்திருப்பார்கள் என்ற மற்றொரு கேள்வியும் எழுகின்றது.

பிரிகேடியர் ஹமாங்கொட தளக் கமாண்டராக இருந்தாலும் அவர் பொது இடங்களுக்கு எப்போது வருவார் எங்கு நிற்பார், எப்படி பயணம் செய்வார் என்பதை வெளியார் யாரும் முன்கூட்டியே உறுதிப்படுத்த முடியாது. எனவே தற்கொலைத் தாக்குதல் நபர் ஒருவரைத் தயார் செய்தாலும் பிரிகேடியர் ஹமாங்கொடவை அந் நபர் நெருங்குவதற்கு வாய்ப்புக் கிடைப்பது இயலாத காரியமாகவே இருக்கும்.

ஆனால் 1995 ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் எந்த அமைச்சர் யாழ்ப்பாணம் வந்தாலும் யாழ். நகரில் அவர்களை பல்வேறு இடங்களுக்கும், கூட்டங்களுக்கும் அழைத்துச் சென்று நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பாளராக—இணைப்பாளராக —தவறாது செயற்பட்டவர் ஹமாங்கொட. பல சமயங்களில் யாழ்ப்பாணத்தில் அவர் ஓட்டிச் செல்லும் வாகனங்களில்தான் அமைச்சர்கள் பயணம் செய்தார்கள்.

எனவே யாரேனும் அமைச்சர் யாழ்ப்பாணம் வந்தால் அவர் பங்குபற்றும் நிகழ்ச்சிக்கு பிரிகேடியர் ஹமாங்கொட உடன் வருவார் என்பது தாக்குதலுக்குத் திட்டமிட்டோருக்கு நன்கு தெரிந்திருக்கும்.

ஜூலை 4 ஆம்திகதி அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா யாழ்ப்பாணத்தில் நிற்பதும்—

பொது மக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடும் பொது நிகழ்ச்சியில் அவர் பங்கு கொள்வதும் —

நேரத்துடனேயே யாழ்ப்பாணத்தில் அம்பலமாகியிருந்தது. கட்டடப்பொருள்கள் கூட்டுத்தாபனக்கிளையைத் திறந்து வைக்க வரும் அமைச்சரை வரவேற்று அக்கிளை அமைந்துள்ள பகுதியில் முதல்நாளே ஒரு பதாகை தொங்கவிடப்பட்டிருந்தது.

எனவே அமைச்சர் வரும் போது, பிரிகேடியர் ஹமாங் கொடவும் நிச்சயம் அங்கு வருவார் என எதிர்பார்த்து தற்கொலைத் தாக்குதலுக்குத் திட்டமிட்டோர் தாக்குதல் நபரை அங்கு அனுப்பியிருப்பார்கள்.

சரி. பல மூத்த படை அதிகாரிகளும் இருக்க பிரிகேடியர் ஹமாங் கொடவை தாக்குதலுக்கு இலக்காக ஏன் தேர்ந்தெடுத்தார்கள்?

அதிலும் ஒரு சூட்சுமம் உள்ளது.

பிரிகேடியர் ஹமாங்கொட யாழ்.நகரப் பகுதியில் படையினர்— பொதுமக்கள் நல்லுறவை வளர்த்தெடுப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தவர்; அதில் கணிசமான வெற்றியும் கண்டவர். படையினர்— பொதுமக்கள் பிணக்குகள் வரும்போது பெரும்பாலும் பொதுமக்கள் சார்பாக முடிவுகளை எடுத்து யாழ். நகர மக்களின் அபிமானத்தைப் பெறுவதிலும் முன்னின்றவர்.

இந்த நிலைமை நீடித்தால் பொதுமக்களை படையினர் கையில் போட்டுக் கொள்வார்கள் என்று கருதியே அவருக்கு இலக்கு வைக்கப்பட்டதாகக் கருதப்பட்டது.

அவரைக் கொல்வதன் மூலம் இரண்டு இலக்குகளை அடைவதற்கு அதற்கு திட்டமிட்டோர் முயற்சித்தனர். அந்த முயற்சியில் அவர்கள் முழு வெற்றியடைவதற்கு பாதுகாப்புப் படையினரே தெரிந்தோ தெரியாமலோ உதவியதுதான் மிக வேடிக்கையான— மிகப்பரிதாபகரமான— நிலையாகும்.

பிரிகேடியர் ஹமாங்கொடவைக் கொல்வதன் மூலம் பொதுமக்களுடன் நல்லுறவைப் பேணும் ஓர் இராணுவ அதிகாரியைத் தீர்த்துக்கட்டுவது முதலாவது நோக்கம்.

அதன் மூலம் படையினர்— பொதுமக்கள் நல்லுறவைச் சீரழிப்பது இரண்டாவது நோக்கம்.

## பாகுபதன்

தற்கொலைத் தாக்குதல் மூலம் அதனைத் திட்டமிட்டோர் முதலாவது நோக்கத்தைநிறைவுசெய்து கொண்டனர்.

அதன் பின்னர் படையினர் தாங்கள் நடந்து கொண்ட— சட்ட முறையற்ற— சரியான வழி நடத்தலற்ற— குழப்பகரமான— நடவடிக்கைகளினால் இரண்டாவது இலக்கை அதற்கு திட்டமிட்டோர் அடைவதற்கு பெரிதும் உதவினார்கள்.

பிரிகேடியர் ஹமாங்கொட உயிரிழந்ததை அடுத்து குடாநாடு எங்கும் கண்மண் தெரியாமல் சுற்றி வளைப்புகள், தேடுதல்கள்; கைதுகள் என அராஜகம் தொடர்ந்தது. கூட்டம் கூட்டமாகக் கைது செய்யப்பட்டோர் காணாமற் போனதும், பொதுமக்களைப் படையினர் கேவலமாகக் கையாண்டதும் தொடர்ந்து நிகழ்ந்தன.

இந்தக் காலகட்டத்திலும் பலாலியில் படைத் தளபதியாக மேஜர் ஜெனரல் கருணாதிலகவும், 51 ஆவது டிவிஷன்படையணியில் அதன் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜானகப் பெரேராவும் இருந்தனர்.

அக்கால கட்டத்தில் இடம்பெற்ற ஆள்கள் காணாமற் போன நிகழ்வுகள், சித்திரவதைகள், அழிவுகள் போன்றவற்றுக்கு இத்தகைய மூத்த அதிகாரிகளே நேரடியாகப் பொறுப்பு என்ற பரவலான குற்றச்சாட்டு எழுந்தது. அது

(ஆறாம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும், தாமோதரம் பிள்ளை வீதிக்கும் சமீபத்தில் பலா, தென்னை வருமானமுள்ள 10 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- ச. பாலகிருஷ்ணமூர்த்தி, சிவகங்கை, தாமோதரம் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (51169)

சொனி 20'' (இஞ்சி) ரி. வி. இரண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 310 பலாலிவீதி, ஆலடிச் சந்தி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (51179)

இரண்டு ஆட்டோ வாகனங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: V. கிருஷ்ணபிள்ளை, காட்டுவளவு கந்தசாமி கோயிலடி, மீசாலை கிழக்கு, மீசாலை. [51162]

மட்டுவில் வேரக்கேணி கந்தசாமி கோயில் கிழக்குப் பக்கமாக 15 பரப்பு தென்னங்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சபாநாயகம், 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். அல்லது N. R. தனரத்தினம், யாழ். மத்திய பேருந்து நிலையம், யாழ்ப்பாணம். [51127]

சுன்னாகம உடுவில் கிழக்கு உதய சூரியன் வீதியில், 4 பரப்புக் காணியும், நாகம்மாள் கோயில் வீதியில் 4 பரப்பும், 1½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. (K. K. S வீதி றெட்டியாலடிச் சந்தியில் இருந்து 400 மீற்றர் தூரம்) தொடர்பு: திருமதி எஸ். சோமசுந்தரம், ஆண்டியாவளவு, பெருந்தெரு, புலோலி தெற்கு, புலோலி. (சி/2056)

## விண்ணப்பப்படிவம்

தொழில் நுட்பக் கல்லூரிக்கான அ, ஆ படிவங்கள் விற்பனையாகின்றன. விலை ரூபா 2.- நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (49843)

## தவறிவிட்டது

வசாவிளான் திக்கம்புரையைச் சேர்ந்த கதிரவேலு யதீசன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை இருபாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். வ. கதிரவேலு, விளையாட்டரங்கு வீதி, கோப்பாய் தெற்கு. கட்டப்பிராய், அல்லது வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், உரும்பிராய். [51176]

துன்னாலை தெற்கு கலிகை, கரவெட்டியைச் சேர்ந்த சின்னையா சிவராசா என்பவரது தேசிய அடையாள அட்டை 12-11-97 அன்று நெல்லியடி- யாழ். 750 மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மொடேன் ஸ்ரோர்ஸ், நெல்லியடியில் ஒப்படைக்கவும். [51164]

## SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலம் பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), வண்ணை சிவன் சந்தி, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். (இது அரசால் அங்கீகரிக்கப்பெறற தனியார் ஆங்கிலப் பாடசாலை). [51161]

## வாய்க்கால் திருத்தம்

அச்சுவேலி, நவ. 15

அச்சுவேலி வடக்கு பெரிய தம்பிரான் வெள்ளவாய்க்கால் சிரமதானம் மூலம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி வடக்கு கிராம முன்னேற்றச் சங்கமும் கிராம முன்னேற்ற சங்க பிரதேசத்தில் செயற்படும் சன சமூக நிலையங்களும் இணைந்து இந்த சிரமதானப் பணியை மேற்கொண்டன. (ஐ-11)

## புலமைப்பரிசில் – 1998

ஆண்டு 4 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை - 4 வினாத்தாள்கள் விடைகளுடன் றோணியோ செய்யப்பட்டு 16-11-97 ஞாயிறு வெளியிடப்படும். புதியநாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [51168]

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் பின்வரும் நிலையங்களிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். கடித மூலமும் விண்ணப்பிக்கலாம். (1)75(109), அரசடி வீதி, யாழ்ப்பாணம் (2)958/4, காங்கேசன்துறைவீதி. யாழ்ப்பாணம் (3) 312, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [51177]


விரைவில் ஆரம்பமாகின்றன

**பிரத்தியேக இசை, நடன, சித்திர வகுப்புக்கள்.**

★ க. பொ. த. (சா. த.) மாணவருக்கு விசேடமான சங்கீத சித்திர வகுப்புக்கள்.

**கலையகம் உயர் கல்வி நிறுவனம்,**
ஆவரங்கால் (61085)

# 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



வையகம்: 05 — 08 — 1939

வானகம்: 16 — 10 — 1997

அமரர்

**ஞானப்பிரகாசம் ஆனந்தஈஸ்வரன் [J. P]**

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.


இன்று 15 - 11 - 1997 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது பிரிவால் துன்புறும்:
அம்மா, மனைவி, பிள்ளைகள்,
மாமா, உற்றார், உறவினர்கள்.

''இரத்தின மஹால்''
சங்கானை.

[51167]

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 10 — 08 — 1950

விண்ணில்: 26 — 10 — 1996

**முருகுப்பிள்ளை செல்வராசா**
(அனுஷன் லொறி உரிமையாளர்)

திதி: 15 – 11 - 1997

எம்குடும்ப விருட்சத்தை
தாங்கி நின்ற விழுதே!
எமக்கு நல்லறிவூட்டி, நல் வழிகாட்டி
நின்ற கலங்கரை விளக்கே அப்பா!
கண்ணெதிரே நின்ற உங்கள் முகம்
எம் நெஞ்சில் ஊசலாடுகிறது.
நீங்கள் கதைகள் கூறி மகிழ்ந்தது
எம் கண்ணில் தோன்றுகின்றது.
பொல்லாத காலனால் நீங்கள் காலமாகி
ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது எம் இதயம்!

மனைவி, மகன்,

தற்காலிக முகவரி:
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

நிரந்தர முகவரி:
குருத்து வீதி,
[illegible]

[illegible]

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கதிரவேலு குழந்தைவேலு**
(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம்: 28 — 06 — 1910

மறைவு; 08 — 11 — 1995

திதி: 15 — 11 — 97

அன்புத் தெய்வமே! எங்கள் இதயத்தின் ஜோதியே...!
பாசமுடன் எம்மை வளர்த்தீர்...!
பாங்காய் நல் வாழ்வு அமைத்தீர்...!
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்,
ஐயா...! உங்கள் நினைவு என்றும் மாறாது...!
ஆத்ம சாந்தி வேண்டி
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி...! சாந்தி...! சாந்தி...!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கு. குலேந்திரன்,
மகேசன் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(சி/2041)

பரராஜசேகர விநாயகன் திருத்தாள் போற்றி

# 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் கார்த்திகேசு சிவபாலசிங்கம்**
(பதிவாளர், நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

மண்ணகம்: 20–04–1941

விண்ணகம்: 06–10–1997

அத்தா என் அமுதே எனக்(கு) ஆர் துணை
நீயன்றேல்?
- மனைவி

கனவிலும் நினைவிலும் நாம் வணங்கும் கடவுளே
– எம் கதி இதுவோ?
- பிள்ளைகள்

உறவிலும் உயிரிலும் ஒன்றான
எம் செல்லக்கிளியே சென்றது எங்கே?
- சகோதரிகள்

ஆற்றல் மிகு அலுவலராய், நண்பனாய்
அறமன்றை அலங்கரித்த சிங்கம் எங்கே?
- உடன் பணி செய்தோர்

வணங்குகின்றோம்.

அமரரின் ஆத்மசாந்திக் கிரியைகள் 15-11-1997 மு. ப. 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

திருமதி கலாவதி சிவபாலசிங்கம்,
(மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்.

மானிப்பாய் வீதி,
இணுவில்.

(சி/2068)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Branch Library

## சைக்கிள் உரிமத் தகடு; வீதியில் திடீர் சோதனை

நவாலி, நவ .15

யாழ். மாநகரசபைப் பகுதியினரால், கடந்த செவ்வாயன்று காலை கண்டிவீதியால் சென்ற சகல சைக்கிள்களும் சோதனை செய்யப்பட்டன.

அப்போது இந்த ஆண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடுகளைப் பலர் இன்னமும் பெற்றுக்கொள்ளாமல் இருந்தது தெரிய வந்தது.

சுண்டுக்குளிப் பகுதியிலுள்ள மாநகர சுகாதார அலுவலகத்திற்குச் சென்று உரிமத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு உரிமத் தகடு பெறாதவர்கள் பணிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

நல்லூரில் உள்ள யாழ். மாநகரசபை அலுவலகத்துக்கு முன்பாகவும் கடந்த சில நாள்களாகச் சைக்கிளில் செல்வோரை வழிமறித்து சைக்கிள் உரிமத் தகடுகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. (ஐ-5-100)


# பட்டப்படிப்பு பாட நெறிகள்

**17-11-97 இல் ஆரம்பமாகின்றன.**

இடம்: **உருவில் மகளிர் கல்லூரி**

வகுப்புகள்: **G. A. Q.**
**B. A. Part I**
**B. A. Final**

உங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

பாடங்கள்:

தமிழ்
கிறிஸ்தவ நாகரிகம்
மெய்யியல்
பொருளியல்
அரசியல் விஞ்ஞானம்
இந்து நாகரிகம்.

இணைப்பாளர்,
உடுவில் மகளிர் கல்லூரி.

[சி/2067]


# எம்மீதான களங்கத்தை துடைக்க
# 'ராகிங்'கை முற்றாக விலக்குவோம்

## பேராதனை பல்கலை. மாணவர்கள் அறிக்கை

கொழும்பு, நவ. 15

''ராகிங்'' என்னும் பகிடிவதைக் கொடூரத்தினால் தமிழ் மாணவர் சமுதாயம் அனைத்திற்கும் ஏற்பட்டுள்ள என்றும் நீங்க முடியாத களங்கத்தில் இருந்து மாணவர் சமுதாயம் விடுபட வேண்டுமானால் எதிர்காலத்தில் பகிடிவதை என்னும் உயிர்க் கொலைஞனில் இருந்து முற்றாக நீங்கிக் கொள்வதே தலை சிறந்தது — என்று பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத் தமிழ் மாணவர்கள் ஒன்றித்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:

பேராதனைப் பல்கலைக் கழக பகிடிவதை சம்பவத்தின் காரணமாக மக்கள் மத்தியிலும், புதியமாணவர்கள் மத்தியிலும் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாக நிலவும் தப்பபிப்பிராயங்களையும், அச்சப்போக்கையும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்கவும் புதியமாணவர்களுக்கும் சிரேஷ்ட மாணவர்களுக்குமிடையே நல்லெண்ணத்தை உருவாக்க வேண்டுமானால் இப் பகிடிவதைக் கொடூரம் ஒழிக்கப்படல் வேண்டும்.

நாட்டில் தற்போது நிலவுகின்ற எத்தனையோ கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் தங்களது கடின முயற்சியும், ஊக்கமும் காரணமாகவே பல்கலைக்கழகங்களுக்குத் தமிழ் மாணவர்கள அனுமதி பெறுகின்றனர். இவ்வாறு அனுமதி பெற்று பல கனவுகளுடன் பல்கலைக்கழகங்களுக்குள் காலடி வைக்கும் போது 'பகிடிவதை' என்ற கலாசாரத்தினால் அவர்கள் உடல், உளவியல் ரீதியாக மிகவும் பாதிப்புறுகின்றனர். தம்மைப் பெற்றெடுத்த பெற்றோர்களின் அரவணைப்பில் இருந்து விடுபட்டு உலக வாழ்வுக்குள் அவர்கள் தம்மை ஈடுபடுத்தும் போதே இவ் வேதனையும் அவர்களைப் பீடித்துக் கொள்கின்றது.

இத்தகைய பகிடிவதை எவ்வளவு தூரம் கொடுமையானது என்பதை மாணவர் சமுதாயம் உணர்ந்து கொள்ள ''வரப்பிரகாஷ்'' என்ற எம் சக மாணவனின் உயிர் விலையாகக் கொடுக்கப்பட வேண்டியிருந்தது. சகல பல்கலைக்கழக மாணவர் சமுதாயத்தினரதும் வரலாற்றில்மிகவேதனைக்குரிய, வெட்கப்பட வேண்டிய கறை படிந்த ஒரு செயலாக இது அமைந்துவிட்டது.

பகிடிவதையினால் வைத்திய சிகிச்சைபெற வேண்டியிருந்த சந்தர்ப்பங்கள் நாட்டின் பல பல்கலைக்கழகங்களில் நடந்திருந்தும் அவை ஏற்படுத்தத் தவறியிருந்த விழிப்புணர்வை எமது சகோதரனின் மரணம் ஏற்படுத்திச் சென்றுள்ளது. வரப்பிரகாஷின் மரணத்திற்கான பொறுப்பை நேரடியான பகிடிவதையில் ஈடுபட்டவர்கள் மட்டுமல்ல உடலியல் ரீதியான பகிடிவதையைத் தொடங்கியவர்கள் முதற்கொண்டு இங்கு கல்விகற்று வெளியேறிய, கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களும், பகிடிவதை மரபை வளர்த்தவர்கள்; வளர்க்க உதவியவர்கள், அதைத் தடுக்க முடியாது வாழாதிருந்தவர்கள் என்ற அடிப்படையில் தமக்குரிய பங்கை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

இனிவரும் ஆண்டுகளில் வரப்போகும் புதிய மாணவர்களே!

மேற்கூறிய தீர்மானத்திற்கமைய உடல், உளவியல் ரீதியில் துன்பம் தரக்கூடிய எந்தவிதமான செயல்களிலும் உங்களது சிரேஷ்ட மாணவர்கள் ஈடுபடமாட்டார்கள். இவற்றை மீறி சிரேஷ்ட மாணவர்கள் யாரேனும் நடக்க முற்பட்டால் அவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டிய அவசியமேயில்லை. இதில் நீங்கள் உறுதியாக இருங்கள்! ஏனெனில் அனைத்து மாணவர்களும் உங்கள் பக்கமே — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரீ)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ .15

யாழ். உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவகத்தின் பகல், மாலை நேர கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்போர் எதிர் வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப் படிவங்களை ''பயிற்சி இயக்குநர், உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம், கலாசாலை வீதி, திருநெல்வேலி'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-5)


## பெற்றோர் தினம்

யாழ்ப்பாணம் ,நவ.15

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் பெற்றோர்தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் அதிபர் திருமதி தனரஞ்சனிதுரைசிங்கம்தலைமையில் நடைபெறும்.

யாழ். வலயம்-1 கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா, திருமதி யோகேஸ்வரி இரத்தினராசா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஐ-5)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் சின்னத்துரை சுப்பிரமணியம்
(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

மலர்வு: **13 — 06 — 1921**
உதிர்வு: **16 — 10 — 1997**

திங்களொன்று ஆனதே
இருந்த இடமோ வெறுமையானதே
சென்ற இடமோ தெரியவில்லை
எதிலும் தோல்வி கண்டதில்லை
தோற்று விட்டீரே காலனிடம்.

எமது தந்தையின் இன்னுயிர்ப் பிரிவு கேட்டு துயரில் பங்குகொண்டு உதவி புரிந்தவர்களுக்கும், மலர் வளையம் சாற்றி, கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட நாவற்குழி மகாவித்தியாலயம், கோப்பாய் கந்தவேள் பாடசாலை, மது கல்வி நிறுவனம் ஆகியவற்றின் அதிபர், ஆசிரியர்களுக்கும், மலர் அஞ்சலி செலுத்திய மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தந்தையின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வி. எச். லேன்,
இருபாலை, கோப்பாய். (51165)



# கண்ணீர் அஞ்சலி

## செல்லப்பா குலசேகரம்

(பேராதனை பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவன்)

எமது நண்பனின் அகால மரணச் (14-11-97) செய்தி கேட்டு சொல்லொணாத் துயரம் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எம் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

பேராதனை
பட்டப்படிப்பு சக மாணவர்கள்.

(51185)



# தேவை

**PLATEN MACHINE MINDER**
தேவை

அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

(51103)



# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 05 — 10 — 1935
உதிர்வு: 27 — 10 — 1996

அமரர்
உயர்சைவ குமாரசாமி கோபாலசிங்கம்

திதி: 15- 11- 1997

அன்பும் அறனும் திறனும் நிறைந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி விட்ட உங்கள் ஆத்மா சாந்தியடைய எமது குல தெய்வமாம் ஸ்ரீசந்திர சேகர விநாயகக் கடவுளை மனமார இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்'' — குறள்

மனைவி, மக்கள், மைத்துனர்,
மருமக்கள், உற்றார், உறவினர்.

இல. 20, நாலாம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(51178)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிற்கான புதிய படைத் தளபதி...

(மூன்றாம் பக்கத் தொடர்)
உண்மையோ, பொய்யோ தெரியாது ஆனால் இத்தகைய சம்பவங்கள் நிகழாமல் தடுத்து நிறுத்தத் தவறியது அவர்களின் பொறுப்பில் ஏற்பட்ட தவறே என்பது மட்டும் நிச்சயம்.

தென்பகுதியில் 1980களின் கடைசிக்காலத்தில் ஜே. வி. பி. இயக்கத்தை அடக்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது ஆயிரக் கணக்கான அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் படுகொலையுண்டார்கள்; அல்லது காணாமற் போனார்கள்.

அவ்வேளையில் தமது கைகளில் இரத்தக்கறைகளை பெற்றுக்கொண்ட மூத்த அதிகாரிகளே, பிரிகேடியர் ஹமாங்கொடவின் படுகொலைக்குப் பின்னர் குடாநாட்டில் ஆட்கள் காணாமற் போனதற்குக் காரணமாக இருந்தார்கள் என்று பொதுவாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் 51 ஆவது டிவிஷனின் புதிய கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் பலகல்ல நியமனம் பெற்று யாழ்ப்பாணத்துக்கு வந்தார்.

அவர் பதவியேற்ற பின்னர் குடாநாட்டில் ஆள்கள் காரணமற் போகும் எண்ணிக்கை மிகமிகக் குறைந்து போனதாக மனித உரிமைகள் இயக்கங்களுடன் தொடர்புடையவர்கள் புள்ளி விவரங்களுடன் தகவல் வெளியிட்டார்கள். இராணுவத்தினரும் ஏனைய படையினரும் பொதுமக்களைக்கையாளும் முறையிலும் ஒரு முன்னேற்ற நிலையும் ஏற்பட்டது.

கைது செய்யப்படுவோர் தொடர்பாக, அவர்கள் கைது செய்யப்பட்டவுடன் அவர்களது உறவினர்களுக்கு 'ரசீது' வழங்குவது உட்பட கைது விடயங்களில் புதிய ஒழுங்கு முறைகள் 51 ஆவது டிவிஷனில் அறிமுகப் படுத்தப்பட்டன.

படையினரின் நடவடிக்கைகள் குறித்து யாழ்ப்பாணத்தில் இயங்கும் தமிழ்க் கட்சிகள் ஓரளவு திருப்தி தெரிவிக்கும் நிலையும் மேஜர் ஜெனரல் பலகல்ல பதவியேற்ற பின்னர்தான் ஏற்பட்டது எனலாம்.

மேஜர் ஜெனரல் பலகல்ல யாழ்ப்பாணத்துக்கு வர முன்னர் வவுனியாவில் கட்டளைத் தளபதியாக பணிபுரிந்தவர். அதற்கு முன்னர் இராணுவ உளவுப் பிரிவின் இயக்குனராகப் பணிபுரிந்தவர்.

உளவுப் பிரிவில் பணிபுரிந்ததால், சமூகத்தினிடையே ஆரவாரமில்லாமல் நாசூக்காக ஊடுருவும் திறமை அவருக்கு இருப்பதாக இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

நேற்று வடக்குத் தளபதியாகப் பதவியேற்ற கையோடு அவர் யாழ். பொதுமக்கள் முன்னிலையில் விடுத்த பகிரங்க அழைப்பு அதற்கு ஒரு சான்று.

தாம் பதவியேற்ற கையோடு சங்கானை வெல்வில் இலுப்பைத்தாள் முருகமூர்த்தி கோயிலில் நடந்த பூசை வழிபாடுகளில் மேஜர் ஜெனரல் பலகல்ல கலந்து கொண்டார்.

அதன் பின்னர் அங்குள்ள மக்கள் மத்தியில் உரையாற்றிய அவர், பொதுமக்களுக்கு ஓர் அழைப்பையும் விடுதலைப்புலிகளுக்கு மற்றோர் அழைப்பையும் விடுத்தார்.

யாழ். குடாநாட்டு மக்களுக்கு சமாதான சுபீட்ச வாழ்வு கிட்டுவதற்கு சகலரும் தமக்கு ஒத்துழைக்க வேண்டும் என்பது ஓர் அழைப்பு. இது பொதுமக்களுக்கு விடுக்கப்பட்டது.

நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர புலிகள் ஒத்துழைக்கவேண்டும் என்பது மற்றைய அழைப்பு. இது விடுதலைப் புலிகளுக்கு விடுக்கப்பட்டது.

இரண்டாவது அழைப்பை மேஜர் ஜெனரல் பலகல்ல விடுத்ததில், வியப்பில்லை. மூத்த படை அதிகாரிகள் உட்பட பெரும்பான்மை இனத்தவர்கள் பலரும் விடுக்கும் கோரிக்கை இதுதான்.

அதுவும் மேஜர் ஜெனரல் பலகல்லவின் புத்திரர்களில் ஒருவர் மன்னார் யுத்த முனையில் கனிஷ்ட இராணுவ அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கையில் —

யுத்த களத்திற்கு மகனை அனுப்பியிருக்கும் தந்தை என்ற முறையிலும் சமாதானத்தைத்தான் அவர் இப்போதும் — எப்போதும் — விரும்புவார்.

ஆனால் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு புலிகள் ஒத்துழைப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவது மூத்த படை அதிகாரிகளினதும், அரசினதும் கைகளில் தான் உள்ளது என்பதையும் மறந்துவிட முடியாது.

''இதோ புலிகளை கூண்டோடு அழித்து விடப் போகின்றோம்; புலிகளின் கதை முடிந்தது; புலிகள் புறமுதுகிட்டு ஓடுகின்றார்கள்'' — என்றெல்லாம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் இராணுவத் தளபதியும், உயர் அரச வட்டாரங்களும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக அறிவித்துக் கொண்டிருந்தால் —

பிராந்தியங்களில் உள்ள படைத் தளபதிகளின் சமாதான அழைப்பு அந்த அறிவிப்புகளில் அமுங்கிப் போய் விடும் என்பதுதான் யதார்த்தமாகும்; யுத்தம்தான் தொடரும்.

★ ★ ★

## கப்பல் விவகாரம்

கடந்த 2 ஆம் திகதி முல்லைத் தீவுக்கடலில் புலிகளின் கப்பல் ஒன்றை ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்கள் குண்டு வீசித் தாக்கி அழித்தது தொடர்பாக மேலும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆயுதங்களை ஏற்றி வந்த அந்தக் கப்பல் முதலாம் திகதி இரவு பத்து மணிக்குப் பின்னர்தான் முல்லைத் தீவுக் கடற் பிரதேசத்துக்குள் நுழைந்திருக்கின்றது.

அமாவாசைக்கு மறுநாள் வானம் இருண்டு கிடக்க — இரவோடு இரவாக — ஆயுதங்கள் இறக்கப்பட்டு படகுகள் மூலம் கரைக்குக் கொண்டுவரப்பட்டு, கரையிலிருந்த லொறிகளில் ஏற்றப்பட்டன.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் தவிர புலிகளின் ஆதரவாளர்களும் லொறிகளில் ஆயுதம் ஏற்றும் பணியில் ஈடுபட்டனர்.

ஆயுதங்கள் அனைத்தும் இருபது லொறிகளில் ஏற்றப்பட்ட இரண்டாம் திகதி அதிகாலையில் ஒரு பெரும் தொடராக முல்லைத்தீவுக் காட்டுப் பகுதிக்குள் சென்றதை பலரும் கண்டுள்ளனர்.

கப்பலில் வந்த ஆயுதங்களில் ஏவுகணைகளும் சற்றுத் தாராளமாக வந்து இறங்கியுள்ளனவாம். மோட்டார் ஷெல்கள், ஆட்லறி ஷெல்கள் என்பனவும் எடுத்து வரப்பட்டுள்ளன.

கப்பலில் புதிய ஏவுகணைகள் வந்து சேர்ந்து விட்டதால் தம்மிடம் முன்னர் இருந்த ஏவுகணைகளைத் தாராளமாகப் பயன்படுத்தி விமானங்களைக் குறிவைக்க புலிகளின் தலைவர் பிரபாகரன் அனுமதித்ததாகவும் கூறப்படுகின்றது.

ஆயுதம் ஏற்றி வந்த கப்பலையே பயன்படுத்தி, கடற்படையினரை சண்டைக்கு இழுத்து அவர்களை அழிக்க புலிகள் தீட்டிய திட்டம் குறித்து கடந்த வார சமர்க்களத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

ஆயுதக் கப்பலை தடயம் இன்றி அழிக்க புலிகள் திட்டம் தீட்டியிருந்தது பற்றியும் அக்கட்டுரையில் விவரிக்கப்பட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஏற்றி வந்த ஆயுதங்களை இறக்கிய பின்னர் ஸ்ரீலங்காப்படைகளை சண்டைக்கு இழுக்க காத்து நின்ற கப்பலில், விமான எதிர்ப்பு ஆயுதங்களும் இருந்தனவாம்.

கடற்படைக் கப்பல் வந்தால் குண்டு பொருத்தப்பட்ட கப்பலால் இடித்து அதனைத் தகர்ப்பது — குண்டு வீச்சு விமானங்கள் வந்தால் ஏவுகணைகள் மூலம் அவற்றை வீழ்த்துவது — இதுதான் புலிகளின் இரட்டைத் திட்டமாக இருந்தது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் புலிகள் எதிர்பார்த்ததற்கு [illegible]ாறாககாரியங்கள் நடந்தன.

கடற்படைக் கப்பல்கள் வந்து எட்டத்தில் நின்று விட்டன. இது விடயத்தில் அவர்கள் முன்னர் புலிகளிடம் படித்த பாடம் எச்சரிக்கை உணர்வைக் கொடுத்திருக்கலாம்.

திடீரென வானத்தில் இரண்டு கிபீர் விமானங்களும் எம்.ஐ 24 ரக ஹெலிக்கொப்டர்களும் வந்தன, கப்பலில் இருந்த புலிகள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினார்கள். குறிதவறியது.

ஆனால் கிபீர் வீசிய குண்டு குறிதவறாமல் கப்பல்தளத்தில் வீழ்ந்து வெடித்ததில் கப்பலில் இருந்த புலிகள் பலியானார்கள்.

அதேநேரம் கரையிலிருந்த புலிகள் மீது கிபீர் மற்றும் ஹெலிகள் நடத்திய தாக்குதலிலிருந்து சில புலிகள் உயிரிழந்தனர்.

ஒரு மேஜர், ஏழு கப்டன்கள், நான்கு லெப்டினன்ட்கள், ஓர் இரண்டாம் லெப்டினன்ட் உட்பட 15 கடற்புலிகள் பலியாகினர்.

கப்பலில் ஏவுகணைகள் வந்திறங்கியதை அடுத்தே, கடந்த 10 ஆம் திகதி கொக்கிளாய்ப் பகுதியில் எம். ஐ. 24 ரக ஹெலி ஒன்றை புலிகள் ஏவுகணை கொண்டு தாக்கி அழித்தார்கள்; மற்றொரு எம். ஐ. 17 ரக ஹெலி ஒன்று ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கானது.

★

---

## திடீர் அரங்கு

அரசாங்கப் பள்ளிக்கூடங்களை 'தேசிய பாடசாலைகள், 'சாதாரண பாடசாலைகள்' என்று ஒரு திட்டவட்டமான வரையறையில்லாமல் பாகுபடுத்தி குழப்பம் செய்து கொண்டிருக்கும் கல்வித் திணைக்களம் ஒரு புறமிருக்க, கொழும்பில் தற்போது புதிதாக வந்திருக்கும் 'சர்வதேச பாடசாலைகள்' என்ற கலாசாரம் மறுபுறத்தில் வேறு குழப்பங்களைச் செய்து கொண்டிருக்கின்றது.

1950 களில் ஆங்கிலப் பாடசாலைகள், தமிழ்ப் பாடசாலைகள் என்று பாகுபாடு காட்டி ஆங்கிலப் பாடசாலைகளை உயர்த்தி வைத்து சுயமொழிப் பாடசாலைகளை தரங்குறைந்தவையாகக் காட்டிய நிலைமை வயதில் மூத்தோருக்கு நினைவிருக்கலாம்.

அது போல் இப்போது, கொழும்பில் மாணவரிடமிருந்து பெருமளவு நிதியைக் கட்டணமாகஅறவிட்டு இடாம்பீகமாக நடக்கும் 'சர்வதேச பாடசாலைகள்' (Inter national Schools) தம்மை உயர்வாகக்காட்டத்தொடங்கியுள்ளன.

தமது பாடசாலைகளில் மட்டுமே போதனைகள் ஆங்கிலத்தில் நடைபெறுவதாகவும் —

21ஆம்நூற்றாண்டை எதிர்கொள்ளக் கூடியதாக மாணவர்களைக்கல்வித்துறையில் தூக்கிவிடும் திறமை தங்களுக்கு மட்டுமே உண்டு என்றும் —

ஒரு மாயக்கதையை அவை பொதுமக்கள் மத்தியில் பரப்பி வருகின்றன.

அரசாங்கப் பாடசாலைகளை ''சுய பாஷா பாடசாலைகள்' என்றும், ''ஜனப்பிரிய பஸல'' என்றும் கிண்டலடித்து கொழும்பு சர்வதேச பாடசாலை ஒன்று 'த டெயிலி நியூஸ்' பத்திரிகையில் விளம்பரம் செய்திருப்பதை வேதனையுடன் சுட்டிக் காட்டுகின்றார் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் அவர்கள்.

★ ★ ★

1981 ஜூன் மாதத்தில் இடம்பெற்ற வன்செயல்களின் போது யாழ். நகரில் சேதமாக்கப்பட்ட தமிழ்ப் பெரியார்களின் சிலைகள் யாவும் யாழ். பெரியகடைப் பகுதியில் யாழ். வர்த்தகர் சங்கத்தால் சமீபத்தில் மீள நிறுவப்பட்டு, வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அது மகிழ்ச்சிக்குரியதே ஆனாலும் ஒரு குறைபாடு.

எல்லா சிலைகளுக்கும் முன்பக்கத்தில் யாருடைய சிலை என்ற விவரம் சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளது. தமிழில் பெயர் சிலைக்கு பக்கவாட்டிலேயே எழுதப்பட்டிருக்கின்றது. இது தமிழ்ப் பிரதேசம் எனவே சிலைகளின் முன்புறத்தில் உள்ள பெயர்களை தமிழில் பொறித்திருக்கலாம் என்று குறைப்பட்டார் ஓர் அன்பர். ''இது சின்ன விடயம் முட்டையில் மயிர் பிடுங்க வேண்டாம்'' என்று கூறுகின்றார் மற்றொரு சமரசவாதி.

மூன்றாம் ஈழப் போரின் போதும் சேதமுறாது தப்பித்து, யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் சேதமாக்கப்பட்ட சிலை சங்கிலிய மன்னனுடையது. முத்திரைச் சந்தியில் மீண்டும் அச்சிலை புது மெருகு பெற்று வருகின்றது.

ஈழப்போரின் போது யாழ். நகரில் சேதமடைந்து போன மேலும் மூன்று சிலைகள் இன்னமும் சீரமைக்கப்படாமல் உள்ளன. நீகல் படமாளிகை முன்னால் அமைக்கப்பட்ட அமரர் மு. திருச்செல்வத்தின் சிலை அவற்றில் ஒன்று. யாழ். பொது நூலக நிர்மாணத்தில் சிரத்தை கொண்டிருந்த வண. பிதா திமோத்து லோங் அடிகளின் சிலை மற்றையது. அது யாழ். பொது நூலக முன்றிலில் சேதமுற்றுக் கிடக்கின்றது.

சுப்பிரமணியம் பூங்கா முன்பாக அமைக்கப்பட்டிருந்த ஆனந்த குமாரசுவாமியின் சிலை மூன்றாவது.

இவை திருத்தப்படாமல் உள்ளன. இந்தத் தமிழ்ப் பெரியார்களின் சிலைகளைத் திருத்துவதில் அக்கறை காட்டப்படவேண்டும்.

தமிழினத்திற்காகப் போராடி இன்று உயிரைத் தியாகம் செய்த மேலும் பலரின் சிலைகள், நினைவிடங்கள், தூபிகள் போன்றவை அழிக்கப்பட்டிருப்பதும் ஆழ்ந்த மனவேதனைக்குரியது.

- மின்னல்

---

உ

# உபநயன பிரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஈசுர வருஷம் ஐப்பசி 29ஆம் நாள் (15-11-97) சனிக்கிழமை காலை 6-21 தொடக்கம் 8-19 வரையுமுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ மு. நாகேந்திரசர்மா மனோன்மணி அம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனுமாகிய சிரஞ்சீவி **கிருபாகர சர்மா** அவர்கட்கும் | பிரம்மஸ்ரீ சோ. இராமநாதசர்மா நாகேஸ்வரி தம்பதிகளின் புத்திரன் சிரஞ்சீவி **ஜெயபாலசர்மா** அவர்கட்கும் |

அல்வையூர் மாணிக்க விநாயகர் துணை கொண்டு நல்லை திருமுருகன் திருவருட் கடாட்சத்துடன் நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் வைத்து உபநயன பிரம்மோபதேசம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வந்து எமது குமாரர்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து.

தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| இங்ஙனம் | இங்ஙனம் |
| திருமதி நாகேந்திரசர்மா (தாயார்) | பிரம்மஸ்ரீ சோ. இராமநாதசர்மா |
| நா. திவாகரசர்மா (சகோதரன்) | நாகேஸ்வரி தம்பதிகள் நல்லூர் |
| அல்வாய் வடக்கு, மாறாம்புலம். | உபாத்தியாயர் [illegible] |
| தேவஸ்தானம். | [illegible] |

★ இருவீட்டார் அழைப்பு ★

(சி-2070)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதபிள்ளை பரமலிங்கம்

(நயினாதீவு)

11 - 11 - 97 இல் காலமான க.வே. பரமலிங்கம் J.P அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (15-11-97) காலை 9.00 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
ஆ. க. ஆறுமுகம்
(மைத்துனர்)

25, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(51198)

## கார்த்திகேசு கணபதிப்பிள்ளை

மீசாலை வடக்கைச் சேர்ந்த கார்த்திகேசு கணபதிப்பிள்ளை 14 - 11 - 97 இல் காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், சொர்ணபூபதி, சொர்ணமலர், சொர்ணரஞ்சினி (ஜேர்மனி), கமலாம்பிகை, மகாதேவன் (படப்பிடிப்பாளர்), சிவரகுநாதன் (சுவிஸ்), சர்வாயினி, இன்பராஜ் ஆகியோரின் தந்தையும், இராசம்மா — வேலுப்பிள்ளை (மட்டுவில்), ஆறுமுகம் (வட்டக்கச்சி) ஆகியோரின் சகோதரனும், திருமதி புவனேஸ்வரி ஆறுமுகம், நிர்மலநாதன்— அருந்ததி (நெல் சந்தைப்படுத்தல் சபை, திருமலை) ஆகியோரின் மைத்துனரும், பொ. கெங்காதரம்பிள்ளை (கங்கா போட்டோ, கோண்டாவில்), வன்னியசிங்கம் (வட்டக்கச்சி), பரமநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், பவானந்தன் (கரைச்சி தெ. ப. நோ. கூ. சங்கம்), காலஞ்சென்ற வித்தியானந்தன், சதானந்தன், சுதானந்தன், யோகானந்தன், புவனலோஜினி ஆகியோரின் பெரியதகப்பனாரும், அஜிந்தா (சுவிஸ்), சகுந்தன், நிரஞ்சனா ஆகியோரின் மாமனாரும், பிரகாஷ், நிலானி, தர்சினி, வரோதயன், நிந்துஜா, நிதுலா, இந்துஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15-11-97) சனிக்கிழமை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
S. யோகராசா
(மருமகன்)

மீசாலை வடக்கு,
மீசாலை.

(51189)

## வேலுப்பிள்ளை இரத்தினம்

சங்கானை கிழக்கு சிலம்புப்புளியடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு உடையார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இரத்தினம் 14-11-97 (நேற்று) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக்கணவரும், தனலட்சுமி, ஜெபதேவி ஆகியோரின் தகப்பனாரும், சிதம்பரநாதன் (காங்கேசன்துறை சிமெந்துக்கூட்டுத்தாபனம்) கணேசன், (நடேசு-கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் தியாகராஜா (ஆஸ்திரேலியா), சுப்பையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சதீஸ்குமரன் (லண்டன்), துஸியந்தன், சிந்துஜன், சர்மினி, முருந்தன், சயானி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-11-97) சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

தகவல்:
ச. சிதம்பரநாதன்
(மருமகன்)

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(51919)

## திருமதி றீற்றம்மா அருளப்பன்

திருமதி றீற்றம்மா அருளப்பன் 13-11-97 இல் இறைபதம் அடைந்தார்.

இவர் வைத்திய கலாநிதி P. அருளப்பனின் அன்பு மனைவியும், பிரான்சிஸ் சேவியர் (விரிவுரையாளர், விவசாயத்துறை, நெதர்லாந்து) அருட் சகோதரி பிரான்சிஸ்கா (C R), திருமதி டாக்டர் திரேசா ஜோசப், மரியகொறற்றி, அன்ரன் கிறேசியன் (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,) அன்ரன் அனஸ்ரீன் (யாழ். பல்கலைக் கழகம், சித்த மருத்துவத் துறை), திருமதி அமல சபினா, சற்குணராஜா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ஜோசப் (ஆசிரியர், வீமன்காமம் மகாவித்தியாலயம்), திருமதி அ. தேவநேசம் தவ அலங்காரம் (ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி), திரு. சற்குணராஜா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும், குளோறியாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 15-11-97 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வைத்தியகலாநிதி
பே. அருளப்பன்
(கணவன்)

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
(பஸ் நிலையம் அருகில்)

(51188)

# சமய சந்நிதிகளில்

நெல்லியடி, நவ. 15

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய மணவாளக் கோல விழா இன்று சனிக்கிழமை முதல் நடைபெறவிக்கின்றது.

விசேட அபிஷேகம் தினமும் நடைபெற்று 10 ஆம் நாளாகிய 25 ஆம் திகதியன்று 108 சங்குகளால் சங்காபிஷேகமும் நடைபெறும்.

(ஐ-109)

## கலை விழா

நெல்லியடி, நவ. 15

கோப்பாய் தெற்கு றோமன்கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் கலை விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கே. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக, கோப்பாய் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆர். இராஜேந்திரன் கலந்து கொள்வார்.

(ஐ-109)

## குளத்தில் தவறி விழ்ந்து மரணம்

மானிப்பாய், நவ. 15

மாடுகளை மேய விட்டு விட்டு குளக்கட்டில் அமர்ந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தவர் குளத்தினுள் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி மரணமானர்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு அருகே உள்ள குளத்தில் நேற்று முன்தினம் மாலை இச் சம்பவம் இடம்பெற்றது.

மானிப்பாய் வடக்கு இராசகாரியர் வீதியில் வசிக்கும் தி சந்திரன் (வயது 50) என்பவரே உயிரிழந்தவராவார்.

(ஐ-90)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 15

தாளையடி றோ.க.த.க. பாடசாலை பரிசளிப்பு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

(ஐ)

★ ★ ★

அச்சுவேலி, நவ. 15

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திருமதி ச. கனகராசா தலைமையில் நடைபெறும்.

கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி ஆ. இராசேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.

(ஐ-11)

## ஏழு ஆண்டுகள் நிறைவு

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஏழு வருடங்கள் பூர்த்தி அடைந்துள்ளன.

இதனை ஒட்டிய வைபவம் ஒன்று இன்று முற்பகல் 10 30 மணிக்கு யாழ். பிரதான வீதியில் உள்ள பஸ்தியன் அன்சன்ஸ் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களும் மக்களுக்கு வழங்கி வந்த சேவை எல்லா மக்களுக்கும், எல்லாப் பகுதிகளுக்கும் இரட்டிப்பின்றிக் கிடைக்கவும்—

அரசின் செயற்பாடுகளில் உள்ள இடைவெளிகளைப் பூர்த்தி செய்யவும் — வகை செய்யும் நோக்குடன் மேற்படி நிறுவனம் 1990 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

(ஐ-5)

# கண்ணீர் அஞ்சலி

## செல்லப்பா குலசேகரம்

(உரிமையாளர், இரட்ணா பேக்கரி, கண்டி வீதி, நுணாவில்.)

எமது சங்கத்தின் உறுப்பினரும், தென்மராட்சிக் கிளை உபதலைவருமான செல்லப்பா குலசேகரம் அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு ஆற்றொணாத் துயர் அடைகின்றோம். இவரின் மறைவு எமது சங்கத்திற்குப் பேரிழப்பாகும்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மா. பே. உ. சங்கம்,
39, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/2076)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் தியாகராசா

கிளுவனை களபூமி காரைநகரைச் சேர்ந்தவரும், முன்னாள் இலங்கை வானொலி அறிவிப்பாளருமான பொன்னம்பலம் தியாகராசா டென்மார்க்கில் 13-11-97 அன்று காலமானார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
சி, தேவராசா
(சகலன்)

வன்னியசிங்கம் லேன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(51194)

## கார்த்திகேசு பொன்னம்பலம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கா. பொன்னம்பலம் அவர்கள் நேற்று (14-11-97) காலை இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பத்மநாயகி மற்றும் அரவிந்தகுமார் (பிரான்ஸ்), தவரஞ்சினி (ஆசிரியை, அருணோதயக் கல்லூரி, அளவெட்டி), ஜெயந்தினி (கனடா), நளினி (வர்த்தகபீட இறுதியாண்டு மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), தயாழினி (தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நந்திவர்மன் (கனடா), உதயகீதா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14-11-97) பிற்பகல் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பொ. தவரஞ்சினி
(மகள்)

(49845)

## செல்லப்பா குலசேகரம்

(ரெட்ணா பேக்கரி)

மயிலிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், நுணாவில் ஏத்தத்தடியில் வசித்தவருமாகிய ரெட்ணா பேக்கரி உரிமையாளர் செல்லப்பா குலசேகரம் 13-11-97 அன்று அகாலமரணமாகி விட்டார்.

அன்னார் செல்லப்பா தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும், கிருஷ்ணா, குலசிங்கம், சாந்தகுமார், கிருஷ்ணபதி, ஜீவகுமார், ஈஸ்வரி, ஈஸ்வரன் [ஈசன் கல்வி நிலையம், கோண்டாவில்], வசந்தரூபன், மோகனாம்பிகை மற்றும் காலஞ்சென்ற சீவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-11-97) சனிக்கிழமை நுணாவில் இல்லத்தில் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நுணாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்

நுணாவில் ஏத்தத்தடி.
நுணாவில்.

[51191]

## வைத்திலிங்கம் முத்தையா

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் முத்தையா 14-11-97 இல் காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராஜரெட்ணம் மற்றும் தர்மராஜா (இந்தியா), தேவராஜா (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), செல்வராஜா (கொழும்பு), யோகராஜா (ஜேர்மனி), தங்கராஜா (கட்டட ஒப்பந்தகாரர், நீர்வேலி) காலஞ்சென்ற அருமைநாயகி மற்றும் செல்வராணி (முத்திரைச்சந்தை), வரதராஜா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15-11-97 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மு. தேவராஜா
(ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

நீர்வேலி வடக்கு.
நீர்வேலி.

(சி/2079)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...Branch Library

## 'உதயன்'...

(இரண்டாம்பக்கத் தொடர்) வலைகள் பற்றிய கட்டுரைகள், கடிதங்களில் கூட 'ராகிங்' இற்கு ஆதரவான கருத்துக்கள்— அதில் ஏதும் நியாயம் இல்லாவிட்டாலும் கூட — வரவில்லையே! 11-11-1997 ஆம் திகதிய உதயனில்வெளியான 'ராகிங்' செய்தி குறித்து யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகரால் வெளியிடப்பட்ட அறிக்கை கூட உதயனில் அடுத்த நாளே பிரசுரிக்கப்பட்டதே.?

அப்படியிருக்க மாற்றுக் கருத்துக்களை 'உதயன்' பிரசுரிக்கமாட்டாதுஎன்றபாணியில் நீங்கள் குற்றம் சுமத்துவது எங்ஙனம் நியாயம்?

சரி. உங்கள் கருத்துப்படி எதிர்க்கருத்துக் கூறுவதற்காக — உதயனுக்கு அனுப்பாமல் —இந்த அறிக்கையை கொழும்பிலிருந்து பிரசுரமாகும் ஒரு பத்திரிகைக்கு அனுப்பியிருக்கின்றீர்கள்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 'ராகிங்' சம்பவம் தொடர்பாக 11-11-97 இல் உதயனில் செய்தி வெளியான அதே தினம் அதே பத்திரிகையில் யாழ். பல்கலைக்கழக மாணவரால் மேற்கொள்ளப்பட்ட ராகிங் நடவடிக்கைகள் எனத்தெரிவித்து 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை' என்ற தலைப்பில் அதே பத்திரிகையில் வெளியான செய்தியை தனியாக மீள் பிரசுரம் செய்திருக்கின்றோம். அந்தச்செய்திசரியா? அதில் உண்மை உள்ளதா? என்பது குறித்து உதயன் கருத்து எதுவும் குறிப்பிட விரும்பவில்லை.

ஆனால் உதயனுக்கு எதிராக அறிக்கை வெளியிட்டது போல் அந்தப் பத்திரிகைக்கு எதிராக நீங்கள் அறிக்கை விடாததால் (அப்படி அறிக்கை விடும்படி நாம் கோரவில்லை) அத்தகைய செய்திகளை நீங்கள் ஏற்று அங்கீகரிக்கின்றீர்களா? உதயனுக்கு அனுப்பாமல் உங்கள் அறிக்கையை அந்தப் பத்திரிகைக்கு நீங்கள் அனுப்பியிருப்பதை, யாழ். பல்கலைக்கழக 'ராகிங்' — சம்பந்தமாக அப்பத்திரிகையில் வெளியான செய்தியைநீங்கள் அங்கீகரிப்பதாகக்கொள்ளலாமா? யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒவ்வொருக்கும் இக்கேள்வி சமர்ப்பணம்.

3. உங்கள் அறிக்கையில் சமூகப் புற்றுநோயாக வேரூன்றி விட்ட பகிடிவதை என்ற இழிசெயலைக் கண்டிப்பதாகவும், அதற்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பைத் தருவதாகவும் தெரிவித்திருப்பதற்காக 'உதயன்' தங்களுக்கு சிரம் தாழ்த்தி நன்றி கூற விரும்புகின்றான். இவ்விடயத்தில் உங்களுக்கு எந்த இடருக்கு மத்தியிலும் பக்கபலமாக 'உதயன்' நிற்பான் என்பது உறுதி.

4. 'பகிடி வதை' சம்பவங்கள் குறிந்து அறிந்தால் அது பற்றிய பூரண விவரங்களை பல்கலைக்கழக நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்துங்கள்' என்று பொதுமக்களிடம் நீங்கள் கோருவது நியாயமான —மிகச்சரியான—கோரிக்கை.

நீங்கள் கோரும் இந்த விடயத்தில் பொதுமக்கள் சரியாகச்செயற்பட்டிருந்தால்—

பகிடி வதையை கண்டிப்பதாகக் கூறும் உங்கள் அமைப்பும் அதன் உறுப்பினர்களும் அத்தகைய செயலுக்கு எதிராக உளப்பூர்வமாகக் கொதித்து எழுந்திருந்தால்—

'ராகிங்' புற்றுநோய் யாழ். சமூகத்திலிருந்து எப்போதோ தொலைந்து போயிருக்கும் என்பது உதயனின் கருத்து.

5. பத்திரிகைகளில் வெளியாகும் — பல்கலைக்கழகம் பற்றிய உண்மைக்குப் புறம்பான — செய்திகள் குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கும்படி நீங்கள் கோருவதும்நியாயமானதே.

யாழ். பல்கலைக்கழகத்தில் 10-11-1997 நடந்ததாக தெரிவித்து ஒரு 'ராகிங்' சம்பவம் பற்றிய செய்தியை 11-11-1997 இல் 'உதயன்' பிரசுரித்திருந்தது. அது தவறு என்று நீங்கள் கருதினால் சட்ட நடவடிக்கை விடுகாக... உதயனின் செய்தியுடன் ஆரம்பிக்கலாமே!

(ஆ-ர்)

## பிறீமாக் குஞ்சு விநியோகம்

**18-11-1997** அன்று பிறீமா ஒரு நாள் கோழிக் குஞ்சு விநியோகிக்கப்படும். தேவையானோர் முற்கூட்டியே கீழ்வரும் முகவரியில் பதிவு செய்து கொள்ளவும்,

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி/2071)

## கண்ணீர் பூக்கள்

### செல்லப்பா குலசேகரம்

(உரிமையாளர், இரட்ணா பேக்கரி கண்டிவீதி, நுணாவில். தென்மராட்சிக் கிளை உப தலைவர்).

எங்கள் கிளையின் உறுப்பினரும், கிளையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவருமான செல்லப்பா குலசேகரம் அவர்கள் அகாலமரணம் அடைந்துள்ளார் என்பதனை அறிந்து மிகுந்த துன்பமும் வேதனையும் அடைகின்றோம்.

இவரது இழப்பினையிட்டு கலங்கி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் அன்னாருக்கு எங்கள் கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாகச சமர்ப்பிக்கின்றோம்.

அங்கத்தவர்கள்,
**யாழ். மா. பே. உ. சங்கம்,**
**தென்மராட்சிக் கிளை.**

(சி/2077)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கிருகாம்பிகை கனகையா

சுண்டிக்குளியைச் சேர்ந்த திருமதி கிருகாம்பிகை கனகையா 13-11-97 அன்று காலமானார்.

இவர் மனோகரா தியேட்டர் முன்னாள் முகாமையாளர் காலஞ்சென்ற க. கனகையாவின் அன்பு மனைவியும், கிருஷ்ணகுமார் (யாழ். மாநகரசபை), நந்தகுமார் (உதயன் பணிமனை), சூரியகுமார் (கனடா, முன்னாள் விளையாட்டு பயிற்றுனர் சென் ஜோன்ஸ் கல்லூரி), ஜயந்திமாலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செ. சிறிகணநாதன் (பொறியியலாளர், லண்டன்), நாமகள், பிரேமா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்ஷ்மி, நிர்மலன், செந்தூரன், பிரியதர்சினி, கணன் (லண்டன்), ஜனன் (லண்டன்) ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16-11-97) ஞாயிற்றுக்கிழமை முதலியார் ஒழுங்கையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10.30.(S.L.T) மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. கிருஷ்ணகுமார்
(மகன்)

37, முதலியார் ஒழுங்கை,
நாவலர் வீதி,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம். (சி/2078)

### நாராயணசுவாமி சிவானந்தன்

(இளைப்பாறிய நிர்வாக அதிகாரி, மத்திய வங்கி)

இல. 14, ஸ்ரீ வெங்கடேசன் வீதியைச் சேர்ந்த நாராயணசுவாமி சிவானந்தன் 13-11-97 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாராயணசுவாமி நாகரெத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், திலகவதியின் அன்புக்கணவரும், பத்மினி (U.K), பேராசிரியர் பாலகுமார் (U.S.A.), ராஜ்குமார் (கொழும்பு) ஆகியோரின் தகப்பனாரும், திரு. ஸ்ரீதரன் (கணக்காளர் (U.K.), திருமதி கீதா (U.S.A.), திருமதி அனுலா (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், திரு. இராசநாயகம் (சட்டத்தரணி இந்தியா), திரு. ஸ்ரீரங்கநாதன், காலஞ்சென்ற ஸ்ரீவெங்கடேசன், திரு. ஸ்ரீவிவேகானந்தன், திருமதி ஜெகதீஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற திரு. P. T. அரசன் (J.P.M.M.C — மட்டக்களப்பு), திரு. N. விசுவநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரத்தின மலர்சாலையில் வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக 15-11-97 சனிக்கிழமை கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:
நா. ஸ்ரீரங்கநாதன்
(சகோதரன்)

14, ஸ்ரீவெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம். (51190)

## தாக்குதல்

மாங்குளத்துக்கு கிழக்கே நேற்று முன்தினம் படையினரும், விடுதலைப் புலிகளும் மோட்டார் மற்றும் ஷெல் தாக்குதல்களை மாறி, மாறி நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சென்றல்...

(முதலாம் பக்கத் தொடர்)
பொலிஸார் மீது புலிகள் இத்தாக்குதல் நடத்தினர்.

இச் சம்பவத்தில் மேலும் இரு பொலீஸார் காணாமல் போயுள்ளனர். இரு பொலீஸாரும் ஓர் ஊர்காவலரும் காயமடைந்து அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆயுதங்களும் புலிகளால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

அதே வேளையில் விசேட அதிரடிப்படை முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலில் 7 அதிரடிப் படையினர் காயமடைந்தனர். (இ-21)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)
னர். இவர்களின் வாக்குமூலங்கள் இரகசியப் பொலீஸாரால் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

இத்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் கொலன்னாவ காட்டுப் பகுதியில் இருந்து வந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

3 பொலீஸ் குழுக்கள் விசேட விசாரணைகளை மேற்கொண்டுள்ளன.

அதே சமயம் இச்சம்பவம் அறிந்த செய்தியாளர்கள் உடனடியாக அங்கு விரைந்த போதிலும் அரச செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்கள் உட்பட எவரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது(இ-21)

## களனி...

(முதலாம் பக்கத் தொடர்)
ஸார் தெரிவித்தனர்.

குண்டுகள் வெடித்து எண்ணெய்த் தாங்கிகளில் தீப்பிடிக்க ஆரம்பித்ததும் தீயணைக்கும் படையினர் அப்பகுதிக்கு விரைந்து வந்து 30 நிமிடங்களில் தீயைக் கட்டுப்படுத்தினர். இச்சம்பவம் காரணமாக நேற்று கொழும்பு நகரில் அலுவல்கள் பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் நண்பகலுக்குப் பின்னர் வழமை நிலை திரும்பியது.

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று அரசு குற்றம் சாட்டி உள்ளது எனினும் புலிகளிடம் இருந்து இது வரை இது குறித்து அறிவிப்பு எதுவும் இல்லை.

(இ-9-21-3)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்)
சோமுவுடன் ஹெலியில் பயணம் செய்த மலைப் பிரிவு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஆர். சி. நார்க்பாலும் விமானிகள் இருவரும் இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

இணை அமைச்சர் சோமுவின் திடீர் மரணம் குறித்து இந்திய ஜனாதிபதி, பிரதமர், தி. மு. க. தலைவர்கள் உட்பட பல அரசியல் தலைவர்கள் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

இன்று முதல் மூன்று நாள்களுக்கு துக்கம் அனுஷ்டிக்குமாறு தி. மு. க. அறிவித்துள்ளது. கட்சியின் நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அமைச்சர் சோமுவின் உடல் இன்று அதிகாலை சென்னைக்கு கொண்டு வரப்பட இருந்தது. இறுதிமரியாதை செலுத்துவதற்காக முப்படைத் தளபதிகளும் இன்று சென்னை வரவுள்ளனர்.

ஐக்கிய முன்னணி அரசில் கடந்த ஆண்டு அமைச்சர் பதவியேற்ற திரு சோமு 1956 ஆம் ஆண்டிலும், 1996 ஆம் ஆண்டிலும் வட சென்னைப் பகுதியில் இருந்து லோகசபைக்கு தெரிவாகியிருந்தார். (ஐ)

## பெருமாள்...

(முதலாம் பக்கத் தொடர்)
கோயிலில் இதற்கென விசேட பூசை, ஆராதனைகள் இடம் பெற்று மேற்படி கோயில் பிரதம பூசகரால் உண்ணாவிரதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதனுக்கும் மற்றும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றுக்கும் உண்ணாவிரதம் தொடர்பான மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமசாரிய சுவாமிகள் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

இந்த உண்ணாவிரத நிகழ்வில் கைதாகி, தகவல் தெரியாதுள்ளவர்களின் மனைவிமார், தந்தைமார், தாய்மார் பெருமளவில் பங்குபற்றினர்.

பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்களும் பங்குபற்றினர்.

மாலையில் ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். அலுவலக பிரமுகர் நிசாந் பழரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

[இ-3-5]

## இனந்தெரியாதோரினால்

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டுள்ளது.

சாவகச்சேரி பெரியதம்பிரான் கோயிலடியில் நேற்று முன்தினம் மாலை மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவரை வழிமறித்த இனந்தெரியாதவர்கள் அவர்களில் ஒருவரை மோட்டார்சைக்கிளுடன் கடத்திச் சென்றதாகவும்—

அவர் பின்னர் சூட்டுக்காயங்களுடன் மட்டுவில் பகுதியில் இறந்து கிடந்ததாகவும்—தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் பேராதனைப்பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவு மாணவனான செல்லப்பா குலசேகரம் (வயது-27) என்று பின்னர் அடையாளம் காணப்பட்டது.

இவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது. (இ-3-5-9)

## அஞ்சலி நிகழ்வு

எமது புதிய உயர் கல்லூரியின் (ஆரியகுளம் சந்தி)
பேராதனைப் பல்கலைக்கழக இறுதியாண்டு
(B. A. final) மாணவன்

### செல்வன் செல்லப்பா குலசேகரம்

[குலம்] அவர்கள் அகால மரணம் அடைந்ததையொட்டி இன்று (15-11-1997) சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு எமது நிறுவனத்தில் அஞ்சலிக்காக அன்னாரின் பூதவுடல் வைக்கப்படும். அனைத்து மாணவர்களும் இதில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இயக்குநர், விரிவுரையாளர்கள், மாணவர் ஒன்றியம்.
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (51197)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-11-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

சஞ்சீவி சஞ்சிகை

15 - 11 - 1997 சனிக்கிழமை

இன்றைய அறிமுகம் நாளைய நாகரிகம்
நல்லின ஆடைகளை நயமுடனே
வழங்கிட நகரமதில் தோன்றிவிட்டான்

நல்லி சில்க்ஸ்

121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2006)

## கருத்துக் கலசம்

மயூரா

### தியானம் தேவை

எமது இன்றைய சமுதாய நிலை தலைகீழாக மாறிக் கிடக்கிறது

பெற்றோரும் ஆசிரியர்களும் பெரியவர்களும் இளைஞர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அவற்றுக்கு இசைவாக நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் இயல்பே இப்போது விரவிக் கிடக்கிறது.

பெற்றோருக்குப்பிள்ளை பயந்த காலம் மாறி, பிள்ளைக்குப் பெற்றோர் பயப்படும் காலம் வந்துள்ளது என்பதே உண்மையான நிலை

இந்தத் தலைகீழ் நிலை எமது சமூகத்தைச் சீரழிக்கப் போகிறது என்பதனை அனேகமாக எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள்; உணர்கிறார்கள்.

அதனைத் தடுக்கும் முயற்சிகள் — நடவடிக்கைகள் — நிச்சயமாக வீடுகளிலும் பாடசாலைகளிலும் தொடங்கப்பட வேண்டும். தடுப்பு நடவடிக்கைகளுக்கான மருந்துக்கு வேறு எங்கும் போகவேண்டியதில்லை. எமது சமயங்களிலேயே நல்ல பல மருந்துகள் உள்ளன.

பாடசாலையில் சமய பாடபோதனை இப்போது ''விளையாட்டு'' விடயமாகி விட்டது. பாடநூல்களில் உள்ள பாடங்களை — புராணக் கதைகளை, சமய நெறிகளை — வெறுமனே ஒப்புவித்து விடுவதோடு சரி.

முன்னர் பாடசாலைகளில் நாளாந்தம் முதற் பணியாக பிரார்த்தனை நடைபெறும். எல்லா மாணவர்களும் சேர்ந்து தேவார, திருவாசகங்களை ஓதுவர். வழிபாடு, தியானம் முதலியனவற்றின் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்படும் நாளாந்த வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய பழக்கங்கள், நடைமுறைகள் பயிற்றுவிக்கப்படும்.

ஆரம்ப வகுப்பிலிருந்து உயர் வகுப்புவரை இந்த பயிற்சி வழங்கப்பட்டது. அதனால் நல்லொழுக்கம் உள்ள மாணவர்கள் உருவானார்கள்; நற்பிரசைகளாக வாழுகிறார்கள்.

இந்த நிலை மீண்டும் வர வேண்டுமெனில் பாடசாலைகளில் மேற் கூறிய பயிற்சி வேண்டும். வீடுகளிலும் இரவில் பாடம் பயிலத் தொடங்கு முன்னர் அங்குள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்து பிரார்த்தனை செய்யலாம்.

பிரார்த்தனையின் உயர்படியான தியானம், மனதில் ஒரு வெளிச்சத்தை உருவாக்கும், தெளிவை உண்டாக்கும். கோபம், பொறாமை, வன்குணம் ஆகியவற்றை விலக்குவதற்கு மனதை உந்தும். இது பயிற்சியினால் — அனுபவத்தினால் — மட்டுமே உணரக் கூடியது.

ஆகையால் பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில் எல்லாம் தியானம் ஒரு நெறியாக்கப்பட வேண்டும். பாடவிதானத்துக்குப் புறம்பான பயிற்சியாகக் கூட ஆரம்பத்தில் அதனைப் புகட்டலாம்.

# யுத்தம் முடிந்த பின்னரும் பலிவாங்கும் மிதிவெடிகள்...?

அமைதி தவழும் அந்தப் பூங்காவில் குழந்தைகளின் கிண்கிணிச் சிரிப்பு. முன்னும் பின்னுமாய் ஓடியாடிய அவற்றின் குதூகலத்தைத் தகர்த்து எறிகிறது ஒரு கண்ணி வெடியின் முழக்கம். சற்று நேரம் முன் விளையாடிக் களித்த பிஞ்சுகள் ரத்தச் சேற்றில் கிடக்கின்றன. இப்படி ஒரு காட்சியை நினைத்துப் பாருங்கள். நீங்கள் நடந்துசெல்லும் எந்த வழியிலும் எந்த நிமிடத்திலும் கண்ணிவெடி வெடித்து உங்கள் உயிரைப் பறிக்கக் கூடும் என்ற நிலையில் உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கும்?

இது கற்பனையல்ல. இது போன்ற பயங்கரச் சூழ்நிலையில் இன்று உலகின் கோடிக்கணக்கான மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் உங்களால் நம்பமுடிகிறதா?

ஆம், இன்று உலகின் 64 நாடுகளில் இத்தகைய கண்ணிவெடிப் பேராபத்தின் கீழ் கோடிக்கணக்கான மக்கள் வசித்து வருகிறார்கள் அதுமட்டுமல்ல. ஆண்டு தோறும் இந்த நாடுகளில்

கள், பல லத்தீன் அமெரிக்க நாடுகள், ஆசிய, ஆபிரிக்க நாடுகள் உள்ளன. இவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கவை ஆபிரிக்க நாடான அங்கோலா, ஆசிய நாடான கம்போடியா மற்றும் ஆப்கானிஸ்தானம்.

அங்கோலாவைச் சேர்ந்த பத்து வயதுச் சிறுவன் அவன். பெரிய கால்பந்து வீரனாக வரவேண்டும் என்ற கனவில் வாழ்ந்தவன். விறகு பொறுக்கப்போன போது மண்ணுக்குள் இருந்த கண்ணிவெடி அவனது இரு கால்களையும் பறித்துக் கனவுகளைப் பொசுக்கியது. இன்று அவன் அங்கோலாவின் வீதிகளில் சோற்றுக்காக சிகரெட் விற்கிறான்.

மற்றொரு காட்சி. கம்போடியாவைச் சேர்ந்த ஒரு விவசாயி. ஊரைஒட்டி அவன் நிலம். உதயத்தின் ஒளி துலங்கும் காலைப்பொழுதில் சிற்றோடையின் சதங்கை ஒலிக்கும் அந்தப் பசுமை வெளியின் பேரழகு இறங்க வைக்கிறது. மனத்தை மயக்கும் பேரழகுக்குப் பின்னால் நடுங்கவைக்கும் பயங்கரம் மறைந்திருக்கிறது என்பதை

கோயிலை ஒட்டிய சாலை ஓரத்தில் ஒரு மைதானம். வேலி சூழ்ந்த மைதானத்தில் ஓர் அறிவிப்புப் பலகை. ''கண்ணிவெடிகள் — உயிரை இழக்க விரும்புபவர்கள் உள்ளே வரலாம்'' என்ற வாசகங்கள் குரூரமாக மிரட்டுகின்றன.

இரக்கமற்ற யுத்த சரித்திரத்திற்குச் சாட்சியங்களாக வாழும் மக்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வரும் நிலையில் யுத்தத்தில் கண்ணிவெடிகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் சர்வதேச சட்டத்தைக் கொண்டுவர உலகின் சில அமைப்புக்கள் ஒரு புனிதப் போரைத் துவக்கியுள்ளன. அவற்றுள் முக்கியமானது ஐ.சி.பி.எல். (The International Campaign to Ban Landmines) என்ற அமைப்பு. காலஞ்சென்ற இளவரசி டயானா இந்த அமைப்பின் உறுப்பினர். கண்ணிவெடிக்கு எதிராக தீவிர பிரசாரம் செய்தவர்.

இந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான டோடி வில்லியம்ஸ் என்ற பெண் உலக அமைதிக்காக மேற்

## விதைக்கப்பட்ட கண்ணிவெடிகளால் சுடுகாடாகியுள்ள ஏழைநாடுகள்

ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணி வெடிக்குப் பலியாகி வருகின்றனர்.

இரண்டாம் உலகப் போரையும் அதையடுத்து உலகெங்கும் நடந்த பல்வேறு உள்நாட்டுப் போர்களும் ஏற்படுத்திய விளைவுகளில் மிக மிகக் கொடுமையானது கண்ணி வெடிகள். யுத்த காலங்களில் பல்வேறு நாடுகளில் மக்கள் புழங்கும் சாலைகள், வயல்கள் உள்ளிட்ட இடங்களில் முன்னேறும் எதிரிகளைத் தடுக்கவும், அழிக்கவும் கண்ணி வெடிகள் கோடிக்கணக்கில் புதைக்கப் படுகின்றன. யுத்தம் முடிந்து சகஜ வாழ்க்கை திரும்பிய பிறகு இவை அகற்றப்படுவதில்லை. விளைவு யுத்தம் முடிந்த பின் அமைதியாக வாழத்துவங்கும் மக்கள் இவற்றுக்குப் பலியாகத் துவங்குகிறார்கள்.

கண்ணிவெடிகளுக்கு இராணுவச் சிப்பாய் என்றும் சாதாரண மக்கள் என்றும் வித்தியாசம் உண்டா? அதன் மீது கால் வைக்கும் மனிதனையும் அவனது வாழ்வின் கனவுகளையும் அது கணத்தில் சுக்கு நூறாக்கி விடுகிறது.

இன்று கண்ணி வெடி நிலங்களிடையே [illegible] கையில் பிடித்தபடி [illegible] நாடுகளில் பொஸ்னியா உள்ளிட்ட சில ஐரோப்பிய நாடு

அந்த அப்பாவி அறியவில்லை. வயலில் காலை வைக்கிறான். மண்ணில் மறைந்திருந்த கண்ணிவெடி வெடித்து அவனை விண்ணில் தூக்கி எறிகிறது.



இன்று இரு கால்களையும் இழந்த [illegible] கோவில் வாசலில் கை ஏந்திப் பிச்சை எடுக்கின்றான். இந்தக்

கொண்டுள்ள இந்தப் போராட்டத்தை கௌரவிக்கும் வகையில் இவ்வாண்டுக்கான நோபல் பரிசு சமீபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இவரது இயக்கத்தின் கடும்


கண் மண் தெரியாமல் புதைக்கப்பட்ட மிதிவெடிகள், கண்ணி வெடிகளினால் ஈழத் தமிழரின் தாயகத்தில் சூழ்ந்திருக்கும் பேராபத்து நாம்அறிந்ததே.

உலக நாடுகளில் மிதிவெடி ஆபத்துத் தொடர்பான பொதுவான கட்டுரை இது. தமிழகத்தைச் சேர்ந்த எஸ்.சிவகுமார் என்பவர் இதனை வரைந்துள்ளார்.

முயற்சிகளை அடுத்து அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசுகள் வருங்காலத்தில் கண்ணி வெடி விதைப்பதைத் தடை செய்யும் சர்வதேச சட்டம்

குறித்து விவாதிக்கும் அளவுக்கு நிலைமை முன்னேறியது.

ஆனால் அமெரிக்க அரசின் தீர்மானம் வழக்கம்போல



தன் நாட்டின் வர்த்தக நலன்களைக் காப்பதில் குறியாக உள்ளது. சுமார் 37 வகையான கண்ணி வெடிகளைத் தயாரித்து லாபத்தைக் குவித்து வரும் சாவு வியாபாரிகளை அரசு காப்பாற்றி விட்டது. சமீபத்திய தீர்மானத்தின்படி அமெரிக்கா இனி யுத்தத்தில் கண்ணி வெடிகளைப் பயன்படுத்தாது. ஆனால் தன் நேச நாடுகளுக்குத் தேவையான கண்ணி வெடிகளை உற்பத்தி செய்வதை அது நிறுத்தாது என்று தெரிகிறது. மனித உரிமைகள், மனிதாபிமானம் என்றெல்லாம் வாய்கிழிய முழங்குகிற ஜனநாயக தேவதையின் உண்மைச் சொரூபம் இதுதான்.

இதனிடையே இன்று கண்ணிவெடிப் பிரச்சினை எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறதென்று கணக்கிட்டால் கையாலாகாத ஆத்திரம் தான் நம்மைத் தாக்குகிறது.

கண்ணிவெடிகளைத் தடை செய்யக்கோரும் பல்வேறு அமைப்புக்கள் தரும் தகவல்கள் இவை:-

இன்று உலகின் 64 நாடுகளின் வயல் வெளிகள், சாலைகள் உள்ளிட்ட இடங்களில் சுமார் 11 கோடி கண்ணிவெடிகள் புதைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொருமாதத்திலும் இந்த வெடிகளில் சிக்கி இறப்பவர்கள் எண்ணிக்கை மட்டும் 2000. இதுதவிர ஆயிரக்கணக்கானோர் கை, கால்களை இழந்து முற்றிலும் ஊனமுற்றவர்களாகின்றனர்.

ஆபிரிக்காவிலுள்ள அங்கோலாவில் கடந்த 20 ஆண்டுகள் உள்நாட்டுப் போர் நடந்தது. அரசுப் படைகளும், அரசு எதிர்ப்புக் கொரில்லாப் படைகளும் அந்த நாட்டின் யுத்தப் பகுதிகளில் அன்று லட்சக்கணக்கில் கண்ணி

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா அரசின் போக்கையும் அமெரிக்க நீதிமன்றம் விசாரிக்கும்

## உள்ளும் புறமும்

குறுமுனி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாக வகைப்படுத்தி அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் (அமைச்சர்) வெளியிட்டிருக்கும் அறிவிப்பை ஆட்சேபித்து அமெரிக்க சமஷ்டி நீதிமன்றத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

தங்களுக்காக சட்டப் போராட்டம் நடத்துவதற்கு புலிகள் தெரிவு செய்திருக்கும் அமெரிக்க சட்டப் பேரறிஞர்கள் பட்டியலை நோக்கும்போது, இந்த வழக்கில் மிக அதிக செலவுத் தொகை ஏற்பட்டாலும் அதை எதிர்கொள்ள புலிகள் தரப்பு ஒரேயடியாகத் தீர்மானித்து விட்டது என்பது புலனாகியுள்ளது.



தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட முப்பது இயக்கங்களை பயங்கரவாத அமைப்புகளாக வகைப்படுத்தும் அமெரிக்க அரசாங்கத்தின் அறிவிப்பைவெளியிட்ட அந்நாட்டின் அமைச்சர் மேடலின் அல்பிரைட் அம்மையார்.

புலிகள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளுக்கு தலைமை தாங்கப் போகின்றவர் ராம்ஸி கிளார்க். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரின் ஆட்சிக் காலத்தில் அமெரிக்க சட்டமா அதிபராக இருந்து புகழ்பெற்றவர் இவர்.

இவரைத் தவிர, பிரின்ஸ்டன் பல்கலைக்கழகச் சட்டத்துறைப் பேராசிரியர் ரிச்சர்ட் போல்க், ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் டேவிட் கோல் ஆகியோரும் புலிகளின் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் வட அமெரிக்கப் பிரதிநிதி எனக் கருதப்படும்— யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த—சட்டத்தரணி விஸ்வநாதன் உருத்திரகுமாரன் இந்த சட்டத்தரணிகள் குழுவுக்கு உதவியாளராகக் கடமையேற்றுள்ளார். இவர் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும் முன்னாள் யாழ். நகர மேஜருமான இராசா விஸ்வநாதனின் சிரேஷ்ட புதல்வன்; யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவன்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சரின் அறிவிப்பை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்வதற்காக, அதுதொடர்பாக, அமெரிக்க சமஷ்டி நீதிமன்றத்துக்கு புலிகளின் சார்பில் கடிதம் ஒன்று வரையப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தின் அடிப்படையிலேயே நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

லண்டனில் உள்ள புலிகளின் சர்வதேச தலைமைச் செயலகத்தின் பிரதிநிதியான வேலும் மயிலும் மனோகரன் இந்த நீண்ட கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளார். அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபர் ராம்ஸி கிளார்க்கும் மற்றைய மூத்த சட்டத்தரணிகளும் புலிகள் சார்பில்ஆஜராவதற்கான 'புரொக்ஸி' பத்திரத்திலும் புலிகளின் சார்பில் இவரேஒப்பமிட்டுள்ளார்.

'தமிழ்ப் பகுதிகளில்' ஓரளவு நியாயமான முறையில் கடைசியாகத் தேர்தல்கள் 1977 இல் தான் நடந்தன. அத் தேர்தலில் தங்களுக்கு சுயநிர்ணய உரிமையே வேண்டும் என்பதை தமிழ் மக்கள் தெட்டத்தெளிவாகத் தெரிவித்து விட்டனர். அதற்காகப் போராடிவரும் அமைப்பே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம். அதைப் பயங்கரவாதஅமைப்பாக அமெரிக்கா பட்டியலிடுவது தவறானது; துரதிர்ஷ்டவசமானது, நியாயமற்றது'' — இப்படி புலிகள் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு புலிகளை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்து அமெரிக்கா அறிவித்து விட்டதால் —

அமெரிக்க மண்ணிலிருந்து புலிகள் இயங்குவதோ —

அல்லது அமெரிக்கப் பிரசைகளிடமிருந்து அமெரிக்க மண்ணிலேயே தமக்கு நிதி திரட்டும் நடவடிக்கையில் புலிகள் ஈடுபடுவதோ —

அடியோடு தடைப்பட்டு விடும் என்று பொதுவாகக் கருதப்பட்டது.

ஆனால் மிகப்பெரும் செலவில் அமெரிக்காவில் புலிகள் நடத்தப்போகும் சட்டப் போராட்டத்துக்குத் தேவையான நிதி, அமெரிக்க மண்ணில் வசிக்கும் ஈழத் தமிழர்களிடமிருந்துதான் முற்றும் முழுதாக சேகரிக்கப்பட்டு வருவதாக ஒரு செய்தி வெளியாகியிருக்கின்றது.

அமெரிக்க அரசமைப்பின் முதலாவது திருத்தம் அமெரிக்கப் பிரசைகள் ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமைகளை — குறிப்பாக கருத்து வெளியிடும் சுதந்திரத்தை — உறுதிப்படுத்துகின்றது எனவும் —

எனவே அந்த அடிப்படை உரிமைகளின் கீழ் தாம் ஆதரிக்கும் ஒரமைப்புக்கு, அமைதியான முறையில் தமது ஆதரவை அவர்கள் வெளிப்படுத்துவதை அமெரிக்க அரசினால் தடை செய்ய முடியாது என்றும் —

அமெரிக்காவில் உள்ள புலிகள் ஆதரவாளர்கள் கூறுகின்றார்கள்.

தமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்க புலிகள் ஆயுத வழியை அல்லது வன்முறையை நாடியிருப்பதன் காரணமாக, புலிகளை பயங்கரவாத அமைப்பாக வகைப்படுத்திய அமெரிக்க அரசின் அறிவிப்பு [illegible]றிலும் சரியானதே என்று அமெரிக்க சமஷ்டி நீதிமன்றம் எடுத்த எடுப்பிலேயே தீர்ப்பு வழங்கிவிடப்போவதில்லை என்று அவதானிகள் கூறுகின்றனர்.

ஆயுதப் போராட்டத்துக்கு புலிகள் தள்ளப்பட்டதற்கு நியாயமான காரணங்கள் உள்ளனவா? —

ஆயுதப் போராட்ட வழிமுறையில் நியாயமான போக்கை புலிகள் கடைப்பிடிக்கின்றார்களா? —

புலிகளின் ஆயுதப் போராட்ட நடவடிக்கையால் அமெரிக்காவின் இறைமைக்கு பாதிப்புள்ளதா?



ஸ்ரீலங்கா வெளியுறவுத் துறை அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமரின் தீவிர இராஜதந்திர நடவடிக்கைகளே புலிகளுக்கு எதிரான அமெரிக்க அறிவிப்புக்கு முக்கிய காரணம்.

தமது ஆயுதப் போராட்ட வழியைக் கைவிட்டு வேறு நீதியான வழிகளில் தமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நியாயமான வாய்ப்பு இருந்தும் அதனை ஒதுக்கி விட்டு புலிகள் ஆயுதப் போராட்டத்தைத் தொடர்கின்றனர்களா? —

— இவை போன்ற பல கேள்விகள் அமெரிக்க நீதிமன்றத்தினால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

அப்போது ஸ்ரீலங்காவின் ஆட்சியிலிருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு, இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முன் வைத்திருக்கும் தீர்வுத் திட்டம் குறித்தும் நீதிமன்றத்தின் முன்னால் பிரஸ்தாபிக்கப்படும்.

அந்த யோசனைகள் உருப்படியானவையா? அந்த யோசனைகள் மூலம் விவகாரத்துக்கு ஒரு இணக்கமான — நிலையான — தீர்வு ஏற்பட வாய்ப்புள்ளதா? தீர்வு யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ளார்ந்த ரீதியாக அரசுக்கு முழு விருப்பம் உள்ளதா? அதனை அரசு சரியான முறையில் வெளிப்படுத்தியுள்ளதா? — என்பது குறித்தெல்லாம் அமெரிக்க சமஷ்டி நீதிமன்றம் ஆராய்ந்து தனது அவதானிப்புகளை வெளிப்படுத்த வேண்டியிருக்கும்.

சுருக்கமாகக் கூறுவதானால் —

அமெரிக்க சமஷ்டி நீதிமன்றத்தில் புலிகள் தாக்கல் செய்துள்ள வழக்கின் விசாரணைகளின் போது புலிகளின் கடந்த கால நடவடிக்கைகள், செயற்பாடுகள், போக்குகள் மட்டுமே ஆராயப்படும என்று கூறிவிட முடியாது. ஸ்ரீலங்காவின் கடந்த கால அரசுகள் மட்டுமன்றி, தற்போதைய அரசாங்கமும், முப்படைகளும், படையினரும், சிங்களத் தரப்பும் எடுத்து வந்த — எடுத்து வருகின்ற — அனைத்து நடவடிக்கைகளுமே அங்கு வேறு ஆணி வேறாக ஆராயப்படும் என்றும் —

அவை குறித்து தனது அவதானிப்புக்களை அமெரிக்க சமஷ்டி நீதிமன்றம் வெளியிடும் என்றும் — எதிர்பார்க்கலாம்.

* * *

### மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக நோர்வே தயார்!

அரசு — புலிகள் பிணக்கில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்ற பேச்சு எழுந்ததும் நோர்வே, சுவிடன், டென்மார்க் போன்ற நாடுகளின் பெயர்கள் அடிபடுவது வழக்கம்.

நோர்வேயின் முன்னாள் பிரதமர் ஹார்ஸம் புருண்ட்லாண்ட் கடந்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார். இலங்கை இனப் பிரச்சினையில் மிகுந்த ஆர்வமுடையவர் இவர்.

அவரை வரவேற்குமுகமாக கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தில் விருந்துபசாரம் ஒன்று இடம்பெற்றது

அமைச்சர்கள் ஜி. எல். பீரிஸ், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா, கூட்டணி எம். பியான நீலன் திருச்செல்வம் ஆகியோர் இந்த விருந்துபசாரத்தில் பங்குபற்றினர்.

அங்கு இடம்பெற்ற உரையாடலின்போது—

''போரில் வெல்ல முடியாத ஓர் அமைப்பு விடுதலைப் புலிகள் இயக்கம். அதனால் அவர்களுடன் பேச்சு நடத்தும்படி கூறுகின்றோம். புலிகள் பங்குகொள்ளாத பேச்சில் பயன் ஏதுமில்லை'' —என்று ரணில் கூறினாராம்.

ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பிய தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டையும், அவலத்தையும் கூட ரணில் அங்கு குறிப்பிட்டாராம்.

''முன்னாள் ஆயுதப் போராட்ட அமைப்புகள் ஜனநாயக வழிக்கு வந்துள்ளன. ஆனால் அவையும் இப்போது நம்பிக்கை இழந்துள்ளன. அவர்களுக்கு நம்பிக்கை கொடுக்கத் தவறிவிட்டோம்'' — என்றும் ரணில் கூறினாராம்.

முன்னாள் நோர்வே பிரதமர் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசியதாகவும் ஒரு தகவல்.

மூன்றாம் தரப்புப் பேச்சுக்கள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்ட போது, '' இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அழைத்தால் மத்தியஸ்தராகச் செயற்பட நோர்வே முன்வரும் '' என்று அவர் கூறினாராம்.

ஆனால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனாவது புலிகளுடன் பேசுங்கள் என்று பகிரங்க அறிக்கைகளில் அரசைக் கோரி வரும் தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகர் மட்டும் இந்தச் சந்திப்பின்போது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் குறித்து எதுவும்பிரஸ்தாபிக்காமல் 'கப்சிப்' என்று இருந்து விட்டாராம்.

* * *

### தேர்தல் பட்ஜெட்

கடந்த வாரம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு சமர்ப்பித்த வரவு — செலவுத் திட்டம் ஒரு 'தேர்தல் பட்ஜெட்' என்று விமர்சகர்கள் கூறுகின்றார்கள்.

'பட்ஜெட்' என்றாலே பொருள்களின் விலை உயரும் என்றுதான் மக்கள் கருதி வருகின்றார்கள்.

ஆனால் இம்முறை அப்படி நிகழவில்லை.

தொடர்ந்து நடக்கும் யுத்தத்துக்கு தனது சக்திக்கு மீறிய வகையில் நிதியைச் செலவிட்டு, பொருளாதார ரீதியில் 'வங்குரோத்து' நிலைக்குப் போயிருக்கும் அரசு, செலவுகளைச் சமாளிப்பதற்காக பொருள்களின் விலைகளை அதிகரிக்கும்; வரிகளைக் கூட்டும் — என்றெல்லாம் எதிர்பார்த்திருந்த மக்களுக்கு, அமைச்சர் பீரிஸின் 'பட்ஜெட்' மூக்கில் விரலை வைப்பதாக அமைந்திருக்கின்றது.

புதிய பட்ஜெட்டில் —

பொருள்கள் விலை உயர்வு குறித்து அறிகம் ஏதும் இல்லை; வரி அதிகரிப்பும் பெரிதாக இல்லை; சம்பள உயர்வு, பென்ஷன் அதிகரிப்பு ஆகியவை குறித்து நம்பிக்கையான அறிவிப்புகள்.

இப்படிப் பல்வேறு ஆச்சரியங்களைத் தந்துள்ளது பீரிஸின் பட்ஜெட்.

ஆனால் அரசு இம்முறை விலை, வரி அதிகரிப்புச் செய்யாததற்கும் சம்பள உயர்வு, பென்ஷன் உயர்வு போன்ற சலுகைகளை அளித்ததற்கும் தனிக் காரணம் உள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தான் முன்வைத்துள்ள அரசமைப்புச் சீர்திருத்தத்தை சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஐ. தே. கட்சி ஆதரவு வழங்க மறுத்தால் —

சட்டமுரணான வகையிலேனும் அரசு அதனை நடைமுறைப்படுத்தலாம் என்றும் —

அத்தகைய நடவடிக்கையின் முதற்கட்டமாக தனது தீர்வு யோசனைகளுக்கு ஆதரவு தருமாறு மக்களிடம் கோரி, அதுபற்றிய மக்கள் கருத்தை அறிந்து, அம்பலப்படுத்துவதற்காக— சட்டரீதியாக கட்டுப்படுத்தாத சர்வஜன வாக்கெடுப்பு (Non BindingReferendum)ஒன்றை அரசு நடத்தலாம் என்றும்—

இதே பத்தியில் முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

வரவு — செலவுத் திட்டம் மீதான விவாதம் முடிந்து அது சபையால் அங்கீகரிக்கப்பட்டகையோடு மேற்படி சர்வஜன வாக்கெடுப்புக்கு ஜனாதிபதி உத்தரவிடுவார் என்றும் —

அனேகமாக அடுத்து வரும் மார்ச்சில் அந்த சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறும் என எதிர்பார்க்கலாம் என்றும் —

கொழும்பு பத்திரிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

எது எப்படியோ பட்ஜெட்டில் விலை, வரி உயர்வின்மையும் — சம்பள உயர்வு, பென்ஷன் அதிகரிப்புபோன்ற அறிவிப்புகள் இடம்பெற்றிருந்தமையும் மக்கள் வயிற்றில் பாலை வார்த்துள்ளது என்பது மட்டும் நிச்சயம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நலன்நாடி பன்முகப் பணிகளை தீர்க்கதரிசனத்துடன் நடைமுறைப்படுத்தியவர்

## பனைகளின் அரசன் கனகராசா

அப்போது அவர் பன்னிரண்டு வயது மாணவர். யாழ்ப்பாணம் கில்னர் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தார். பாடசாலைக் கட்டணம் கட்டப் பணம் இல்லை. அதன் காரணமாகப் பாடசாலையில் இருந்து வெளியேற்றப் பட்டார். அவ்வேளையில், குடும்பநிலை கருதி, அவரை அவரது தந்தையார் கம்பனையிலுள்ள சுருட்டுக்கடை ஒன்றுக்கு வேலை செய்வதற்கு அனுப்பி வைத்தார்.

அவர் சிறுவனாக வேலை பார்த்ததோ சுருட்டுக் கடையில்தான். ஆனால் அவரது அறிவுத் தேடலுக்குச் சுருட்டுக்கடை தடையாக இருக்கவில்லை. சுயமாகவே தின, வார, மாத பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் நல்ல நூல்களையும் தேடிப்படித்துத் தமது அறிவுத்தேடலைப் பெருக்கினார்.

...கும் பண்பினர், தர்ம காரியங்களுக்கு அள்ளிக் கொடுக்கும் கை அவருடையது. அவரது கையைத் தடுக்காத கை அவருடைய இல்லத்தரசியாக விளங்கிய நாகம்மாவினுடையது. இத்தம்பதியினரால் ஈழமணித்திருநாடு பல நன்மைகளைக் கண்டது எனலாம்.

ஆம். இங்கு நான் குறிப்பிடுவது சிவதர்ம வள்ளல் க. கனகராசா அவர்களையே யாகும்.

### முஹமதுவின் தொடர்பு

'அப்துல்காதருக்கும் அமாவாசைக்கும் என்ன தொடர்பு?' எனக் கேட்கும் வழக்கம் யாழ்ப்பாண மக்களிடையே உண்டு. 1927 ஆம் ஆண்டளவில் பாரதத்தி...

ஏற்று அவரது போதனைகளின்படி வாழப் பழகிக் கொண்ட கனகராசாவுக்கு அந்தக் காலத்தில் காந்தி அடிகளும் ஒரு கண்கண்ட தெய்வமானார். வள்ளுவர் காட்டிய வாழ்க்கை நெறிக்குள்ளும் தம்மை உட்படுத்திக் கொண்ட அவர் கடந்த ஐந்து தசாப்தங்களாக இம்மூவரது நெறிகளை மக்கள் போற்றவும் மதிக்கவும் பின்பற்றவும் பெரும்பிரசாரத்தை மேற்கொண்டிருக்கும் பேற்றையும் உடையவர்.

இதன் பயனாகப் பல பிரசுரங்களும் கைநூல்களும் இலவச வெளியீடுகளாயின. கனகராசாவினது பணி காரணமாக வெளிக்கொணரப்பட்ட ஏதாவது ஒரு சிறிய பிரசுரத்தையோ நூலையோ அல்லது சுலோக அட்டையைத் தானுமோ எவரும் எங்கும் அவதானிக்கக்கூடிய ஒரு நிலையும் குடாநாட்டிலும் இலங்கையின் பிற பகுதிகளிலும் ஏற்பட்டுவிட்டது.

இவர் சுவாமி சிவானந்தரின் ஞானயக்ஞத்தில் ஈடுபாடு கொண்டதன் பயனாக தேவார திருவாசக அற நூல்களும் மக்களுக்கு நூற்றுக்கணக்கில் இலவசமாகக் கிடைத்தன. இன்றும் அப்பணியைத் தொடர்ந்து கொண்டே அவர் வாழுகின்ற பெருமைக்குரியவராகத் திகழ்கிறார்.

பொருளையேனும் அன்பளிப்பாகப் பெற்றுச் செல்வர். வெறும் கையுடன் எவரும் திரும்பமாட்டார்கள்.

### பனை வளம் பெருகிட

கனகராசா அவர்களிடம் அமைந்துள்ள மிக மிக முக்கிய...

> தனது பன்னிரண்டாவது வயதில்பாடசாலைப் படிப்பைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்ட திரு கனகராசாவுக்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல பரிச்சியமும், தேவார திருவாசகங்களில் போதிய அறிவும். திருக்குறளில் மிகுந்தஈடுபாடும். புராண இதிகாசங்களில் தெளிந்த சிந்தனையும், நாட்டுப் பற்றும், சூழல் பாதுகாப்பில் அக்கறையும், பசுமைப் புரட்சியில் பித்தும், தொழிற்றுறையில் மேன்மையும வளர்ச்சியும் எப்படி வந்தமைந்தன என்ற கேள்வி எமது அடுத்த சந்ததியினரின் வளமான ஒளிமயமான வாழ்விற்கு விடையளிக்கும்.

மான பண்புயாதெனில் சூழல் பாதுகாப்பில் அவர் கொண்டிருக்கும் அளவு கடந்த அக்கறையாகும். நவாலியூர்சோமசுந்தரப் புலவரின் 'தால விலாசம்' இவருக்குப் பனையின் நூற்றெட்டு வகையான பயன்பாட்டை உணர்த்தியது.

...வின் நாடளாவிய பணிக்கு நல்லதோர் சான்றாகும்.

பாடசாலைப் பிள்ளைகளுக்கும், பல நூறு விளையாட்டுக் கழகங்களுக்கும் கிரிக்கெட், காற்பந்து, கரப்பந்தாட்ட உபகரணங்களைக் கொடுத்து இவரால் பனம் விதைகள் சேகரிக்கப்பட்டமை எவரும் அறியாத செய்தியல்ல.

இப்பணி மூலம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் அன்பைப் பெற்றதினால் அன்னவரின் நல்மாணாக்கராகிய மூதறிஞர் திரு. க. சி குலரத்தினம் அவர்களது நட்பும் நெருக்கமும் இவருக்குக் கை கூடியது. இவர் பண்டிதமணி அவர்களால் ''பூலோக. கற்பக தருநாயகன்'' என்று பாராட்டப்பட்டதில் வியப்பு எதுவும் இல்லை. இவ்விதத் தகவல்களைக் கனகராசாவுடன் பரிமாறிக் கொண்டபோது அவரது முகம் பிரகாசமடைந்தது.

### பனைக் கொடி

இலங்கையில் பனம் பொருள் அபிவிருத்திச்சபை உருவாகவும், தமிழகத்திலிருந்து பனைவள நிபுணர் கே. சம்பந்தம் வரவும் இவரே மூலகாரணர். மகாபாரதத்தின் பிதாமகரான பீஷ்மாச்சாரியாரின் பனைக் கொடியையே தமது கொடியாகவும் கொண்ட கனகராசா பனையைத் தாயென வணங்குபவர். பனையே இவரது அனைத்துப் பிரசுரங்களினதும் இலட்சியச் சின்னம் என்பதைச் சிறு குழந்தைகள் கூட அறிவர்.

### உழைப்பால் உயர்ந்தவர்

குடாநாட்டின் கைத்தொழில் துறையில் உழைப்பால் உயர்ந்த மூத்த பிரஜைகளில் குறிப்பிடத்தக்கவர் மில்க்வைற் அதிபர் கலாநிதி. க. கனகராசா அவர்கள்

தமது தொழில் துறை மேலோங்கி வளர்ந்த காலத்தில் சமய. சமூகப் பணிகளுக்கு பெரிதும் உதவியவர் அவர்.

பனை வளத்தைப் பெருக்குவதிலும். மர வளர்ப்பை ஊக்குவிப்பதிலும் தாமாக நாட்டங்கொண்டு உழைக்கும் பெரியார் அவர்.

சூழல் பாதுகாப்பின் அவசியத்தைப் பல வருடங்களுக்கு முன்னரே உணர்ந்து குடாநாட்டில் அதற்கான பணிகளை தனிமனித நிறுவனமாக நின்று ஆற்றிய பெருமை அவரையே சாரும்.

எளிமையான வாழ்க்கையை விரும்பிக் கைக்கொள்ளும் அவர் தமது தொழில்துறை நலிந்துள்ள நிலையிலும் இப்போதும் முந்திய பணிகளை ஓரளவேனும் செய்வதில் ஆத்ம திருப்தி அடைகிறார்.

எவருடனும் இனிமையாகப் பழகும் சுபாவம் உள்ள கலாநிதி கனகராசா இம்மாதம் இரண்டாம் திகதி தமது எழுபதாவது பிறந்த தினத்தை அடக்கமாகக் கொண்டாடினார்.

இவர்களைப் போன்ற மூத்தவர்களின் வாழ்க்கை இளையோருக்கு ஒரு முன்மாதிரியாக அமைய வேண்டும்.

கனகராசா அவர்களின் பன்முகப் பணிகளை அவருடன் நீண்ட காலமாக நெருக்கமாகப் பழகி வரும் மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசா இங்கே விவரிக்கிறார்.

— ஆசிரியர்.

இன்றும் அவர் தினம் தினம் கணத்துக்குக்கணம் அறிவைத் தேடிக்கொண்டே இருக்கிறார். தான் கற்றுணர்ந்தவற்றுள் மனிதனின் மேம்பாட்டுக்குத் தேவையானவற்றைத் தினம் தோறும் கொண்டும் கொடுத்தும் கொண்டிருக்கிறார். நல்ல சிந்தனையாளராக, சமூக சேவையாளராக, ஒரு முழுமையான மனிதராக அவர் தன்னை ஆக்கிக் கொண்டு விட்டார்.

### தேனீயைப் போன்றவர்

இன்று எழுபது வயதான இளைஞர் அவர். ஆனால் இவ்வயதிலும் தேனீயைப் போன்று சுறுசுறுப்பானவர். இதற்கு அவர் நாளாந்தம் கைக்கொள்ளும் யோகாசனப் பயிற்சிகளே காரணம் எனலாம். யோகி சச்சிதானந்த யோகீஸ்வரரிடம் முறையாக யோகாசனம் கற்றவர் என்றால் மிகுதி சொல்லாமலே உணர்ந்து கொள்ளலாம்.

சுத்தமாவது நீறு என்பதனைக் காட்டும் முகம்; வெண்ணிற ஆடையில் அவரது தூய்மை புலப்படும். அன்பாகப் பேசுவார். திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலைப் போன்று அண்டியோர்களை ஆதரிக்...

...லிருந்து யாழ்ப்பாணம் வந்த இஸ்லாமியரான ஒரு முஹம்மதுவுக்கும் வைதீக சைவரான கந்தையாவுக்கும் தொடர்பேற்பட்டது.

முஹம்மதுவுக்கு சவர்க்காரத்தொழில் கைவந்த கலை. அதைஅவர் கந்தையாவுக்குக் கற்றுக் கொடுத்தார். கந்தையர் மற்றும் மனைவி மக்களுடன் மட்டும் ஒரு சிறிய தொழிலகம் உருவாயிற்று.

இத்தொழிலகத்தின் ஆரம்ப காலத்தில் பந்து வடிவில் சவர்க்கார உருளைகளே தயாராகின. தமது பதினைந்தாவது வயதில் யாழ்ப்பாணம் திரும்பிய கனகராசா தகப்பனாருடன் சவர்க்காரத் தொழிலில் தம்மைப் பூரணமாக இணைத்துக் கொண்டார்.

இவை அவர் என்னிடம் கூறியவை.

### பசுமை நண்பனாக...

யாழ்ப்பாணத்தில் சவர்க்காரத் தொழிலகம் ஒன்று உருவாகி வளர்ந்த கதை வேறு. கனகராசா தம்மை பசுமை நண்பனாக ஆக்கிக் கொண்டமை மற்றொரு தனி வரலாறாகும்.

சுவாமி சிவானந்தரின் போதனைகளால் ஈர்க்கப் பட்டு அவரைக் குருவாக...

### சுலோகங்கள்


ஒரு சமயம் யாழ்ப்பாணம் வந்த சில விளம்பரத் துறை நிபுணர்கள் தம்மை எல்லாம் விஞ்சிய ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருப்பதை அவதானித்துத் திகைத்துப்போய் அவரின் தொழில் நிபுணத்துவத்தைப் படிக்கும் அவாவுடன் அவரையே செவ்வி கண்ட வரலாற்றையும் யான் அறிவேன்.

''பனையை நடுவோம்; பயனைப் பெறுவோம்!'', ''மரங்களை நடுவோம்; மழையை வருவிப்போம்!'', ''வீட்டுக்கொரு பசுவை வளர்ப்போம்; வளமுடன் வாழ்வோம்!'', — என்பன போன்ற பல்வேறு வகைப்பட்ட பலநூறு வகையான சுலோகங்கள் மூலம் தமது கருத்துக்களைப் பரப்பிய செயல் வீரரும் யாழ்ப்பாண தீபகற்பத்தில் இந்த அரை நூற்றாண்டில் இவரே எனலாம்.

### காஞ்சிப் பெரியவரின் தொடர்பு

யோகர் சுவாமிகள் மற்றும் காஞ்சிப் பெரியவரின் நேரடி ஆசிபெற்ற சிவதர்ம வள்ளலுக்கு குன்றக்குடி, தருமபுரம், திருப்பனந்தாள் ஆதீனங்களுடனும் மயிலாப்பூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்துடனும் நெருங்கிய தொடர்புண்டு. இத்தகைய தொடர்புகள் காரணமாக ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம், கிராமராஜ்யம், வளரும் வேளாண்மை போன்ற சஞ்சிகைகளைப் பலர் இவரது தொண்டால் அன்பளிப்பாகவே பெற்றுப் பயனடைவது இன்றும் நாம் நேரில் காணும் நிகழ்ச்சியாகும்.

காந்தி அடிகளின் சத்திய சோதனை, இயற்கை தரும் இன்மருந்து. திருக்குறள், பகவத்கீதை போன்ற நூல்களையே புதுமணத் தம்பதிகள் இவரிடமிருந்து அன்பளிப்புப் [illegible] பார்க்கலாம். இவரிடம் வருபவர்கள் ஏதோ ஒரு சற்...



'பனைவளம்' நூல் வெளியிட்ட வேளை முதற் பிரதியை திரு. கனகராசா அவர்களிடம் இருந்து இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பெற்ற காட்சி. அருகில் நிற்பவர் மூதறிஞர் க. சி. குலரத்தினம் அவர்கள்

பனை வளத்தில் மிகத் தீவிரமான அக்கறை கொண்ட இவர் கடந்த ஐம்பது வருட காலத்தில் சுமார் ஐம்பது லட்சம் பனம் விதைகளை நாடு முழுவதும் விநியோகித்திருக்கிறார். இவற்றில் பத்து லட்சம் விதைகளாவது பயிராகி இருக்கலாம் என்பது எனது கணிப்பு.

கந்தளாய் குடியேற்றத் திட்ட சூழல் பாதுகாப்புக்காகவும் வன்னி பெருநிலப்...

### வேம்பு, இலுப்பை, நெல்லி

பசுமைப் புரட்சியில் பித்துப் பிடித்துப் போயுள்ள கனகராசா அவர்கள் மிக மிகப் பயனுள்ள வேம்பு, இலுப்பை போன்றவற்றை நாடு முழுவதிலும் நடுவதிலும் வளர்ப்பதிலும் அவற்றின் பயன்பாடுகள் பற்றி முரசறைவதிலும் பெரும் வெற்றி கண்டுள்ளார். என்பதே எனது அவதானிப்பாகும்.

## சந்திப்பு: செல்லப்பா நடராசா

பரப்பில் தருமபுரம், உருத்திரபுரம் மக்களின் குடியேற்றத்திட்டங்களுக்காகவும் பல லட்சம் பனம் விதைகளை வழங்கு அவற்றைப் பயிரிடச் செய்த ஒன்றே கனகராசா...

நெல்லியும் இவரது சிந்தையைத் தொட்ட மற்றொரு மூலிகை மரமாகும். இவரது கைகளால் திருக்கோயில்களுக்கென அன்பளிப்...

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் வரை போராடி...

பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்களே. பெண்கள் சந்திக்கும் சில அவலங்கள் கேட்பவர் மனங்களை உறைய வைக்கும்.

பெண்களுக்கு எதிராகக் காடையர்கள் இழைக்கும் கொடுமைகள் எல்லாம் வெட்ட வெளிச்சத்துக்கு வருவதில்லை. மிகச் சிலரே இவற்றை சவாலாக எடுத்து நீதி கேட்கப்புறப்படுகின்றார்கள். ஏனையோர் வடிக்கும் ஊமைக் கண்ணீர் காடையர்களைச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பவைக்கவும் காடைத் தனத்தை வளர்த்து விடவுமே உதவுகிறது.

மிகவும் எச்சரிக்கையாகவும் புத்தி சாதுரியத்துடனும் செயற்பட்டே பெண்கள் இத்தகைய நிலைமைகளை சந்திக்காமலும் சந்தித்தால் சமாளித்து விடுபடவும் வேண்டிய நிலைமை எழுகிறது. பாதிக்கப்பட்டவர்களின் பயங்கர அனுபவங்கள் பரிதாபச் செய்திகளாக மட்டும் அமையாமல் பாடங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை எவ்வாறு தவிர்க்கலாம் அல்லது வெட்டி ஆடலாம் என அவை வழி காட்டும்.

காடையர்களின் கரங்களில் அகப்பட்டு மரணத்தை எட்டிப் பார்த்துவிட்டு மண்ணுக்கு மீண்ட — நம்பமுடியாத அளவு மனோதைரியம் கொண்ட — ஓர் அபலையின் கதை இது. எதை இழந்தாலும் மன உறுதியை இழக்கக் கூடாது என்பது இக்கதை தரும் பாடம்.

அந்தப் பயங்கர நாள் 1994 டிசெம்பர் 18. அதிகாலை நேரம் 1.00 மணியைத் தாண்டியிருக்கும். அதுவரை கடற்கரையில் தனது நண்பிகளுடன் விளையாடிக் கொண்டு உல்லாசமாக — சிரிப்பும் — பாட்டும் — பகிடியும் — கும்மாளமுமாய்ப் பொழுதைப் போக்கிக் கொண்டு இருந்தவள் அவள். அவளின் மின்னும் நீலநிறக் கண்களும் இதழ் அவளும் இனிய இளநகையும் உடலழகும் காண்பவர் மனதை ஒரு தடவை தடுமாற வைப்பவை.

தென் ஆபிரிக்காவின் போட் — எலிசபெத் கடற்கரை அது. அங்கிருந்து குதூகலம் முடிவடைந்து உறக்கம் தழுவும் விழிகளுடன் தனது மஞ்சள நிற 'றெனோல்ற்' காரில் புறப்பட்டு, தனது ஆசை அம்மாவுடன் தான தங்கியிருக்கும் தனது மாடிக் குடியிருப்பின் முன்னே வந்துசேர்ந்தாள் அந்த இருபத்தேழு வயதான காப்புறுதி முகவர்த் தொழில் பார்க்கும் அவள்.

என்ன ஆச்சரியம்! அவள் காரை விட்டு இறங்க நினைக்கவே கதவு தானாகத் திறந்து கொண்டது அக்கணமே அதிர்ச்சியுடன் உறைந்து விட்டாள் அவள். 'விலகி இரு' என அவளை உருட்டி மிரட்டியபடி 'ஸ்ரெயரிங் வீல்' மீது கை வைத்தான் அந்த இருபத்தாறு வயது வாலிபன், அவனது கறுப்புநிற ரீ சேர்ட்டும், கறுப்புக் காற்சட்டையும், அசிங்கமான தலை முடியும் அவள் அச்சத்தை அதிகரித்தன. அவனது கையில் பளபளத்த அந்தக் கத்தியைக் கண்டதுமே அவள் இதயம் உறைந்து போனது. அதை அவன் சுழற்றிய விதத்தில் அது அசையும் பாதைகளில் இருந்த அனைத்தையும் கீறிக் கிழித்தது. அவனது கட்டளைகளுக்கு அடிபணிவதைத் தவிர வேறு வழியே அக்கணத்தில் அவளுக்குத் தோன்றவில்லை.

அவள் அடுத்த 'சீற்' இற்கு மாறியதும் அவன் சாரதி ஆசனத்தைப் பிடித்துக் கொண்டான். கண்ணிலிருந்து கத்தி மறைந்து விட்டது. அவனது கபாலமும் சற்று தணியத் தொடங்கியது.

'கவலையை விடு. எனக்குத் தேவை உனது காரதான். ஒருமணி நேரத்தில் உன்னையும் காரையும் இதே இடத்தில் விட்டு விடுகிறேன்' என்று மிகப் பணிவாகக் கூறினான் அவன்.

அவனது போக்கில் மாற்றம் தென்பட்டாலும் அவளால் அவனை முற்றாக நம்ப இயலவில்லை. எனினும் சற்று துணிவை வரவழைத்துக் கொண்டாள்.

''காரைத்தானே! எடுத்துப்போ. என்னை விட்டு விடு'' என்றாள்.

''நோ! எனக்கு நீயும் தேவை'' மிக நிதானமாகத் தொடர்ந்தான் அவன்

''எனது ரிவிஐயும் டெக்ஐயும் திருடியவனைத் தேடிப் போகிறேன்'' என்றும் அவன் சொன்னான்.

அவளது பெயரைக் கேட்டான். பொய்ப் பெயர் ஒன்றைச் சொன்னாள. பதறி என்ன லாபம்? தகுந்த சந்தர்ப்பம் வாய்க்கட்டும் எனக் காத்து இருந்தாள். கார் ஓடத் தொடங்கியது நகரத்தின் மத்தியைக் கடந்து ஒரு கீழ்த்தரமான சிவப்பு விளக்குப் பகுதி போன்ற பிரதேசம் ஊடாக கார் நகர்ந்தது

நகரப் பகுதி வெறிச்சோடி இருந்ததால் அவளுக்கு உதவிகள் கிட்டவில்லை. வெளியே பாய முயன்று தோற்றால் மறைந்த அவனது கத்தி வெளிப்படலாம் என்ற அச்சம் வேறு. வெளியே பாய்ந்து காயப்படுவதை விட அவனோடு இணங்கி நடித்து நிலைமைகளை வெல்லலாம் என நினைத்தாள்.

நேரங் கெட்ட நேரத்தில் தனித்துத் திரிய முற்படும் பெண்களுக்கு இப்படியான தொல்லைகள வந்துவிடும் தான். இந்த இரவு விடுதி பிரதேசம் சற்று சுறுசுறுப்பாக இருந்தாலும் வெளியே திரிபவர்களிடம் உதவி கேட்பதைவிட உள்ளே இருப்பவன் பரவாயில்லை போல அவளுக்குத் தோனித்தது.

காரின் பின் இருக்கையில் இன்னொருவன் ஏறிக்கொண்டது அவள வயிற்றில் புளியைக் கரைத்தது. இருவரும் தொலைந்த [illegible] பேச்செடுத்ததில் [illegible] நிம்மதியும் பிறந்தது. ஆனால் கடற்கரை நோக்கிய குறுகலான சந்தில் கார் திரும்பியதும் மீண்டும் ஏக்கம் அவளைப் பற்றிக்கொண்டது.

சிறிது தூரம் சென்று ஒரு புதர் அருகே கார் நின்றதும் அதன் வெளிச்சத்தை அணைத்து விடுமாறு அவன் அவளை மிகவும் பவ்வியமாகக் கேட்டான். சுவிட்சை காட்டிய அவள் 'இனி என்ன?' என்பது போலப் பார்த்தாள்.

''உன்னிடம் எனக்கு வேறென்ன வேண்டும்? செக்ஸ் தான்'' என்றான் அவன் பச்சையாக.

அவளின் இதயம் அசுர வேகத்தில் அடித்தது. ஆனால் பதற்றத்தைக் காட்டவோ, வன்முறையின் விளைவுகளைச் சந்திக்கவோ அவள் விரும்பவில்லை இது எல்லோராலும் இயலாத காரியம்.

''நீ போராடப் போகிறாயா? இல்லை இணங்கி வருகிறாயா?'' எனக் கேட்டான் அவன்.

இது இனிப் போராட வேண்டிய கட்டம். போராடினால் சாவு நிச்சயம். அவன் இச்சைகள நிறைவேறப் போவதும் நிஜம். ஆசையுடன் தேடிப் போன அம்மா முகம் மனதில் வந்திருக்கும். அம்மாவை ஒரு தடவையாதல் ஆசையுடன் பார்க்க மனம் எண்ணி இருக்கும்.

''ஆடைகளை ஒவ்வொன்றாக நீயே கழற்று'' எனக் கடுமையான கட்டளை பிறந்தது. என்னே கொடுமை! பூரண நிலவு ஒளியில் பிறந்த மேனியுடன் அல்ல — அது மதத்து வளர்த்துவிட்ட கோலத்தில் — ஆடைகள் அனைத்தும் களைந்து நின்றாள் அவள்.

விடுவார்களா இருவரும்? நிலவில் கண்ட காட்சி காடையர் மூளைகளை முரடாக்கி விட அவள் அணு அணுவாக பலியாகிக் கொண்டிருந்தாள். முன்பின் தெரியாத இருவர் அவள் பட்டுடல் மீதுபாய்ந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் செய்தது என்ன என்பது உண்மையிலேயே அவளுக்குப் புரியவும் இல்லை; நினைவும் இல்லை. எல்லாம் முடிந்து விட்டபின் பிசாசுகள் நிம்மதியாகப் புறப்பட்டும் என நினைத்தாள் அந்த அபலை. எத்துணை மன உறுதி?

அவளுக்குத்தான் அந்த இருவரும் புதியவர்கள். ஆனால் இந்தத் தொழிற்துறைக்கு [illegible] ஏற்கனவே திருமணமாகி பிள்ளையும் பெற்றவன். அவன் அதே வருடம் 19 வயது மாணவி ஒருத்தியைக் கற்பழித்த குற்றத்தில் அகப்பட்டவன்.

சட்டத்தின் சந்து பொந்துகள் அவனைப் பிணையிற் செல்ல அனுமதித்து விட்டன

மீண்டும் அதே டிசம்பர் 4 ஆம் — திகதி இந்த நிகழ்வுக்கு பதின்நான்கே நாள்களுக்கு முன்னர் — ஓர் இருபத்தொரு வயதுக் கர்ப்பிணிப் பெண்ணைப் பதம் பார்த்தவன் அவன். அதில் கூட அகப்பட்ட போதும் முதல் நிகழ்வின் வரலாறு புரியாத காரணத்தால் மறுநாளே விடுதலை வாங்கி விட்டான்.

இன்று இவள் அகப்பட்டுக் கொண்டாள். தெரியாத கதைகள் இன்னும் எத்தனை எத்தனையோ?

அவன் மீண்டும் கத்தியை எடுத்தான்.

''நீ பொலீஸிடம் போவியா? முறைப்பாடு...!''

''நோ... நெவர்! என் பெற்றவர்களுக்கே சொல்ல முடியாத நிலைமை எனக்கு'' என்றாள்.

''நான் உன்னை நம்ப முடியாது!'' கத்தியை ஓங்கினான்.

இரு காடையர்களும் தமக்குள் பேசிக் கொண்டனர். அவர்களின் பெயர்கள் 'பிரான்ஸ்' உம் 'ரீன்ஸ்' உம் எனத் தெரிந்து கொண்டாள். பெயர்களை மதில் எழுதியும் விட்டாள்.

பிரான்ஸ் குனிந்து வந்து குந்தி இருந்து அவளின் கழுத்தைத் திருகினான்.

''தயவு செய்து என்னைக் கொல்ல வேண்டாம். நான் உங்களை ஒரு போதும் காட்டிக் கொடுக்க மாட்டேன். நான் வாழ ஆசைப்படுபவள்'' எனக் கெஞ்சினாள்.

உடல் துடிப்பு அடங்கும் வரை அவன் கழுத்தைத் திருகிக் கொண்டான். ஒய்ந்த உடலை இழுத்து அழுக்குக் குழியில் போட்டார்கள். உயிர் இருக்கிறதா என ஒரு பரிசோதனை செய்ய ஆசை வந்தது.

கத்தியால் வயிற்றைக் குத்திக் குத்திப் பார்த்தார்கள். வயிறு கிழிந்தது. குடலில் 25 இடங்கள் வரையில் கிழிந்து போயின. காலில் துடிப்புத் தென்பட்டதும் கத்தி கழுத்துக்குப் பாய்ந்தது. தைரோயிட் சுரப்பி இரண்டாகக் கூறு போடப்பட்டது. மூச்சுக் குழலைக் கத்தி குத்தி விட்டது.

இவ்வளவும் நடந்தபின் அவள் உடலில் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கலாமா? காரில் இருந்த அவளின் உடைமைகளைத் தூக்கி வீசிவிட்டு காரைக் கிளப்பிக்கொண்டு பறந்து விட்டார்கள் இருவரும்.

அதிசயம் ஆனால் உண்மை. கழுத்து திருகப்பட்டு அவள் மயங்கும் நிலையில் இருந்தாள். தொண்டை வழியாக கத்தி குத்தி மூச்சுக் குழலைத் திறந்து விட்டதுதான் தாமதம் சுவாசப்பைக்குள் காற்றுப் புகத்தொடங்கிவிட்டது. இந்தக் குறுக்குவழிச் சுவாசம் அவள் நினைவு பெற உதவி விட்டது.

எல்லைகடந்த உடல் உபாதைகள், உதிரம் இழந்த களைப்பு, காயங்களின் வேதனைகள் இவை எல்லாவற்றையும் மீறிய மனத்திடம். மிகுந்த பிரயாசையுடன் அவள் எழ முயன்று முழந்தாவில் எழவும் கிழிந்த வயிறு ஊடாககுடல்வெளிப்பட்டது. காரில் இருந்து வீசப்பட்ட ஆடை ஒன்றினால் குடலை உள்ளே சொருகி காயத்தை அடைத்தபடி தவழ ஆரம்பித்தாள். அவளால் இயலவே இயலாத போதும் அந்தத் தவழும் போராட்டம் பல விழுகைகளுக்கும் அரை குறை மயக்கங்களுக்கு மத்தியிலும் தொடர்ந்தது.

எத்தனை தடவைகள் மயக்கம் வந்தாலும் தான் மயங்கி விடக்கூடாது, நினைவு இழந்தால் அதுவே தனது முடிவு என்ற எண்ணத்தில் திடமாக இருந்தாள் அவள். தாயின் முன்னால் தான் மனத்திடத்துடன் வெளிப்படல் வேண்டும் என்ற உறுதி அவள் மனதைத் தளர விடவில்லை.

தொண்டைக் காயத்தில் இருந்து இரத்தம் வழிய...... குடலைப் பொத்தி ஒரு கை இறுகப் பிடிக்க......இப்படி ஒரு பெண்ணால் தவழ்ந்து சுமார் 250 அடி தூரம் அசைந்துவிட முடிந்தது. என்னே அதிசயம்!

வீதிக்கு வந்ததும் இயலாமல் மல்லாக்காகக் கிடந்து விட்டாள். இவளைக் கண்டதும் நிறுத்திய காரில் இருந்து இறங்கிய விலங்கு வைத்தியத் துறை மாணவனான எய்லட் அவள் உடலில் உயிர் இருப்பதாகவே எண்ணவில்லை. நாடிபிடித்துப் பார்த்ததில் இலேசான துடிப்புத் தெரிந்தது.

அம்புலன்ஸிற்குத் தகவல் அனுப்பப்பட்டது. அவள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபோது பிழைப்பாள் என எவரும் எதிர்பார்க்கவில்லை; நடந்தது எல்லாம் அவள் சொல்லாமலே விளங்கிற்று. அனைவர் முகத்திலும் பரிதாபம்.

அவளது குரல்வளையும், சிரசுக் குருதி நாடியும் கத்திக் குத்துக்கு ஓரிரு மில்லி மீட்டர்களே விலகித் தப்பின. இந்த மயிரிடைவெளி அவளது விதியை காப்பாற்றி விட்டதை எண்ணி சத்திர சிகிச்சை வைத்தியர் வியந்து கொண்டார். எனினும் இழந்த குருதியின் அளவும் காயங்களின் அமைவும் அவள் இன்னும் உயிரோடு இருக்கிறாள் என்பதை ஏற்க விடவில்லை.

மணிக்கணக்காக சத்திர சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அவளது வீட்டில் தாயுடன் ஆயிரக்கணக்கான நண்பர்கள் அனுதாபிகள் இணைந்து பிரார்த்தனையில ஈடுபட்டனர்.

அவளுக்கு நினைவு வந்த வேளை கண்முன்னே அவளின் அன்புத் தெய்வம் அம்மாதான் நின்று கொண்டிருந்தாள். கைது செய்யப்பட்ட இரு காடையர்களும் அவள் உயிருடன் இருப்பதை அறிந்ததுமே முழுக் குற்றத்தையும் ஒப்புக் கொண்டு விட்டனர். 'இவ்வளவுக்குப் பிறகும் எப்படி அவள் உயிருடன் இருக்க முடிந்தது?' என்ற அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தைப் பொலீசாரிடமே தம்மை மறந்து கேட்டு விட்டனர்.

**- மு. சிவநேசன் -**

இவளுக்கு மனிதநேய அடிப்படையில் உதவி செய்த எய்லட் விலங்கு வைத்தியத் துறையினைக் கைவிட்டு அன்றுமுதல் புண்பட்ட மனிதர்களுக்கே உதவப் புறப்பட்டான். வன்முறைகளுக்கு ஆளாகும் பெண்களுக்கான நிதியம் ஒன்றை உருவாக்கிச் சேவை புரிய அவள் தயாரானாள்.

1995 ஜூன் 12 ஆம் திகதி தன் உணர்வுகளை அடக்க முடியாத நிலையில் அவள் நீதிமன்றில் சாட்சியம் அளித்தாள். எதிரிகள் இருவருக்கும் ஆயுள்காலச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

1995 ஒக்டோபர் மாதம் றொட்டேரியன் விருது துணிவுக்காக அவளுக்கும், மனித நேயத்துக்காக எய்லட்டுக்கும் வழங்கப்பட்டது.

ரைனி போதா என்ற இத்தாலியனுடன் 1996 இல் மலர்ந்த அவளின் காதல் 1997. பெப்ரவரி 15 இல் திருமணமாய் நறுமணம் வீசத் தொடங்கிற்று. ★



காடையரால் கெடுக்கப்பட்டு செத்துப் பிழைத்த இளம் பெண் இவர்தான். குரல்வளை கிழிக்கப்பட்ட காயம் கழுத்தில் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Branch Library

# வீடு

சஞ்சீவி சிறுகதை

கொடித்துவக்குவின் வரவிற்காக நான் றியாட் விமான நிலையத்தில் காத்துக் கொண்டு நின்றேன். நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு கொழும்பிலிருந்து வரவேண்டிய எயர்லங்கா விமானம் தாமதமாகி ஒரு மணிக்கே வந்து சேர்ந்தது.

கொடித்துவக்கு எனது அறையில் இருப்பவன். தான் இத்தனையாம் திகதி திரும்பி வருவதாகவும் தனக்கு விமான நிலையத்திற்கு வாகனமொன்றை அனுப்பி வைக்குமாறும் எனக்கு அவன் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தான். போக்குவரத்தை ஒழுங்கு செய்வதற்குப் பொறுப்பானவன் என்பதனால் அவன் எனக்குக் கடிதம் எழுதியிருந்தான். அதோடு அவன் எனது அறையில் இருப்பவன் என்பதனாலும் விமான நிலையத்திற்குப்போய் அவனைக் கூட்டிக்கொண்டு வர வேண்டியிருந்தது.

கொடித்துவக்கு விமான நிலையத்தை விட்டுவர ஏறத்தாழ அரை மணித்தியாலமாகி விட்டது. அவன் எதுவித களைப்படைந்தவனாகவும் தெரியவில்லை. அவன் விமான நிலையத்தில் எந்தவிதத் துன்புறுத்தலுக்கும் ஆளாகியவனாகவும் தெரியவில்லை. மொறட்டுவவிலிருந்து மனைவி பிள்ளைகள் சகிதம் கட்டுநாயக்காவிற்கு வந்து எந்தவித விசாரணைகளோ அலுப்புகளோ இல்லாமல் வந்துசேர்ந்தான்.

விமான நிலையத்திலிருந்து வந்து கொடித்துவக்கு பஸ்ஸில் ஏறிக் கொண்டான்.

"மணியம் ஐயா நீங்கள் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தி கிடைத்தது. வீட்டுக்காரருக்கு நல்ல சந்தோசம்..."

"...அதுசரி, வீடுகுடிபுகுதல் எல்லாம் எப்படிப் போச்சுது...?"

"...அதெல்லாம் நல்ல சந்தோஷமாய்ப் போச்சுது. படங்கள் எல்லாம் எடுத்தனான். எல்லாம் கொண்டு வந்திருக்கிறன். றூமுக்கு வாருங்கோ காட்டுறன்..."— அவனின் முகத்தில் நல்ல மகிழ்ச்சி தெரிந்தது.

"...விமானம் ஏனாம் தாமதமாகி வந்தது...?"

"...அது மணியம் ஐயா, விமான நிலையத்திலை ஒரு விசயம் நடந்து போச்சுது..."!

"...என்ன விசயம்..!"

"யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒருவரின் பெட்டியைச் சோதனை செய்தார்களாம். அவர் சில கதைப் புத்தகங்களையும் கசட்டுகளையும் கொண்டு வந்தாராம் அவர். கொண்டு வந்தது நாலைஞ்சு நாவல்களும், சிங்களப் பாட்டுகள் அடித்த கசட்டுகளுமாம். கசட்டுகளைப் போட்டுப் பார்த்தார்களாம். நந்தாமாலினி, அமரதேவ, சாத்நந்தசிறி, விக்ரர் ரத்நாயக்கா முதலியவர்களின் பாடியபாட்டுக்களாம். பிறகு அவர்கள் அந்த ஆளிடம் தாமதப்படுத்தியதற்கு மன்னிப்புக் கேட்டார்களாம். இந்தப் பதகளிப்பிலை அவர் 'எம்பாக்கேசன் காட்டையும்' கொடுக்க மறந்து போனார். அவர் விமானத்தில் ஏறியதன் பின்பு விமான ஒலி பெருக்கியில் அவரின் பெயரைச் சொல்லி எழுந்து அவரை அடையாளம் காட்டச் சொன்னார்கள், அவர் நன்றாகப் பயந்து, வியர்த்து முகமெல்லாம் பேயறைந்தவன் போல எழுந்து நின்றார். பிறகு ஓர் இன்ஸ்பெக்டர் அவரிடம் 'எம்பாக்கேசன் காட்டை' வாங்கிக் கொண்டு போனார்."

"இதெல்லாம் உமக்கு எப்படித் தெரியும்...?"

"...அவர் என்னுடைய சீற்றுக்குப்பக்கத்திலை தான் வந்திருந்தார். அவர்தான் எல்லாவற்றையும் சொன்னார்..." நாம் கதைத்துக் கதைத்துக் கொண்டு வில்லா வந்து சேர்ந்தோம்.

அந்தச் சாமத்திலும் அவனுக்கு தனது வீடு குடிபுகுதலுக்கு எடுத்த படங்களைக் காட்ட வேண்டுமென்ற ஆவல். தனது சூட்கேசைத் திறந்து படங்களை எடுத்தான். எனது கட்டிலில் அமர்ந்து ஒவ்வொரு படமாக விளக்கம் சொன்னான்.

"மணியம் ஐயா, எப்படி வீடு?"

"...அருமையான வீடு.."

"...எப்படித் தளபாடங்கள் எல்லாம்... நான் மொறட்டுவவிலை தான் சொல்லிச் செய்விச்சனான். உங்களுக்கும் வேணுமெண்டால் செய்விச்சு அனுப்பி விடுகிறன்..." என்றான் கொடித்துவக்கு. நான் அவனை நிமிர்ந்து பார்த்தேன். எனது பார்வையின் அர்த்தத்தை அவன் புரிந்து கொண்டான் போலும்.

"ஓ... மணியம் ஐயா மொறட்டுவையிலிருந்து இப்ப யாழ்ப்பாணத்திற்கு லொறி வராது...என்ன...!"

நான் சிரித்தேன்.

"...மன்னிக்க வேணும் மணியம் ஐயா...நான் நிலைமையை மறந்து போனன்... அது போகட்டும். வீட்டுக்கு முன்னாலை நிக்கிற குறோட்டன்கள் எப்படி?"

"...நல்ல அழகாக இருக்கு..."

"எட படங்களைப் பார்த்துக் கொண்டிருந்ததாலை பலகாரங்களை மறந்து போனன்... உங்களுக்கு எண்டு எனது மனைவி மல்லிகா 'கவும்' செய்து தந்தாள். திடீரென எழுந்து சூட்கேசுக்குள் இருந்த ஒரு சரையை அவிட்டான்— கொடித்துவக்கு. அதுதான் அவன் கொண்டு வந்த 'கவும்'

"சாப்பிடுங்கோ மணியம் ஐயா"—

மிக அன்போடு நீட்டினான் கொடித்துவக்கு. நான் ஒன்றை எடுத்துச் சாப்பிட்டேன். யாழ்ப்பாணத்துச் சீனியரியதரத்திற்கும் அதற்கும் அவ்வளவு வித்தியாசமில்லாமல் இருந்தது அத்தோடு நிறைய தொதோலும் கொண்டு வந்திருந்தான்.

"கவுமை" நான் சாப்பிடுவதற்கு முன்னமே, தொதோலை எடுத்துக் கையில் தந்துவிட்டு "மணி ஐயா சாப்பிடுங்கோ, சாப்பிடுங்கோ" என்றான்.

"இப்ப வேண்டாம், காலையிலை சாப்பிடுவம்" என்றேன்.

"இப்ப உந்தத் தொதோலைச் சாப்பிடுங்க, மிகுதியைக் காலையில சாப்பிடுவம்..." என்றான். விருந்தோம்பலில் யாழ்ப்பாணத்தானையும் மிஞ்சினவனோ என நான் மனதிற்குள் நினைத்துக்கொண்டேன்.

கொடித்துவக்கு கட்டிலில் இருந்த வண்ணம் தான் கொண்டு வந்த படங்களை மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருந்தான். இடைக்கிடையே எழுந்து வந்து "கதவுக்குப் போட்டிருந்த 'கேட்டின் சீலை' எப்படி?... அந்தக் குலைப்பு குலைப்பாகத் தூங்கும் பூக்கள் படத்திற்கு எவ்வளவு வடிவாயிருக்கு...என்ன மணியம் ஐயா...நீங்களும் நானும் 'யத்தாவிலை' போய் [illegible] தானே...நீங்களும் [illegible] வீடு கட்டுறீங்கள் தானே...நீங்கள் வாங்கி வைத்திருக்கும் கேட்டின் சேலையும் சும்மா அட்டகாசமாக இருக்கப் போகுது. யாழ்ப்பாணத்தைக் கலக்கப் போகுது... எங்களுடைய வீட்டிலையும் இந்தக் கேட்டின் சேலையைப் பற்றிப் பெண்டுகள் ஒரே கதை... நீங்கள் தான் செலக்ற் பண்ணினது எண்டும் சொன்னன்..."

"...கொடி, இப்ப கொஞ்ச நேரம் படுத்திட்டு காலையிலை எழும்பி மிகுதியைப் பாப்பம்" என்றேன். நேரம் மூன்று மூன்றரையாகி விட்டது. இருவருமே படுத்துத் தூங்கிவிட்டோம்.

நான் காலையில் எழுந்த பொழுது தாங்க முடியாத தலைவலியாக இருந்தது. நான் அன்று வேலைக்குப் போவதில்லையெனத் தீர்மானித்தேன்.

"கொடி..."

'என்ன மணியம் ஐயா?...'

"எனக்குச் சரியான தலைவலி. நான் படுக்கப்போகிறேன். நாளைக்குத்தான் வேலைக்கு வருவேன் மனேச்சரிட்டை சொல்லி விடும்...என்ன...?"

"ஓம் மணியம் ஐயா..."

"...மற்றது எனக்குக் கன நாளாய் யாழ்ப்பாணத்திலையிருந்து கடிதம் வரேல்லை. வந்தால் அதையும் மறக்காமல் கொண்டு வாரும்..."

"ஓ...கட்டாயம் கொண்டு வாறன்...நீங்கள் அந்தப் பாசலில் இருக்கிற கவுமையும், தொதோலையும் 'சாப்பிடுங்க...இந்தாருங்க இந்தப் படங்களையும் வைத்து ஒவ்வொண்டொவ்வொண்டாய்ப் பாருங்க ... நான் போட்டு வாறன்"

நான் தேநீரைக் குடித்து விட்டு அப்படியே தூங்கிவிட்டேன். கொடித்துவக்குவின் கவுமும் தொதோலும் அப்படிமே என் மேசையில் இருந்தன.

★ ★ ★

நான் மத்தியானம் நித்திரை விட்டு எழுந்த பொழுது எனக்குத் தலைவலி சற்றுக் குறைவாக இருந்தது. எழுந்து போய் குளித்துவிட்டு வந்து சமையல் செய்து சாப்பிட்டுவிட்டு மீண்டும் வந்து படுத்துத் தூங்கிவிட்டேன்.

கொடித்துவக்கு வேலையால் வந்து குளித்து விட்டு தேநீரை வைத்துத் தானும் குடித்து விட்டு எனது தேநீரை மேசைமேல் வைத்துவிட்டு என்னைத் தட்டி எழுப்பினான். நான் போய் முகத்தைக் கழுவி விட்டு மீண்டும் வந்து கட்டிலில் அமர்ந்தேன்.

கொடித்துவக்கு கவுமை எடுத்து நீட்டினான். நான் ஒன்றை எடுத்துக் கடித்த பொழுது தேநீரையும் அவன் மேசைமேல் இருப்பதாகக் காட்டினான். நான் தேநீரையும் பருகிக் கொண்டு—

"கொடி, கடிதம் வரவில்லையா!?" என்றேன்.

"...ஓ...மணியம் ஐயா கடிதம் வந்திருக்கு. அதுக்குள்ளை படமும் வந்திருக்கு..எனக்கும் காட்டுங்கோ...பெரும்பாலும் நீங்கள் பார்க்கவேணும் பார்க்க வேணுமெண்டு மிகவும் ஆவலாய் இருந்த வீட்டின் படமாக இருக்கலாம்..." என்று சொல்லிக் கொண்டு கடிதத்தை நீட்டினான் கொடித்துவக்கு.

நான் கடிதத்தை வாங்கிக் கிழித்துப் படித்தேன். எனது உச்சந்தலையில் ஓங்கி சுத்தியலால் அடித்தது போல் இருந்தது. நான் விம்மலுக்கிடையில் 'ஓ'...வென்று அலறிவிட்டேன்.

கொடித்துவக்குப் பதறிப் போனான்.

"...என்ன மணியம் ஐயா ...என்ன...என்ன எவன நடந்தது...?"

என்னால் பேசமுடியவில்லை. நாக்குத் தழுதழுத்தது. வாய்க்குள் அவன் தந்த 'கவும்' இருந்தது. எனது கடிதத்திற்குள் வைத்து வந்த படத்தை அவனிடம் நீட்டினேன்.

அவன் அதைப்பார்த்தான். அவனது முகம் மெல்ல மெல்ல இருண்டு சுருங்கிச் சுருங்கிப் போயிற்று.

"...இது என்ன அநியாயம்......என்ன நடந்தது...... வீடெல்லாம் சுக்கு நூறாய் கிடக்கே..."

"...பு...புக் புக்கார...."—விம்மலுக்கிடையில் என்னால் சரியாகப் பேச முடியவில்லை

அவன் மொறட்டுவவிலிருந்து எனக்காகச் செய்து கொண்டு வந்த 'கவுமை' அவனுக்குமுன்னால். துப்ப மனமில்லாது மெல்ல மெல்ல மென்று விழுங்கிவிட்டு தொடர்ந்தும் அழுது கொண்டிருந்தேன்

கொடித்துவக்கு அந்தப் படத்தை வெகுநேரம் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். ★

(யாவும் கற்பனை.)

துரை. -சுப்பிரமணியன்-

# நீரின்றி ஓரணுவும் அசையாது!

எங்கள் உடல் நீர்மயமானது. காற்றடைத்த பையென்று சொல்வது தவறு; நீரடைத்த பை. 45 லீற்றர் நீர் உடலில் இரத்தமாக, பாய்பொருள்களாக உடலெங்கும் பரவி இருக்கிறது.

மனிதன் தரைவாழ் விலங்கு தான்... ஆனால் அவனுள்ளே நீரின் ஆட்சி. சகல செயற்பாடுகளும் ஒரு நீர்ச்சூழலில் தான் நடைபெறுகின்றன. வீட்டைப் பிரித்துக்கொண்டு போனால் எஞ்சுவது செங்கல். மனித உடலைப் பிரித்துக் கொண்டு போனால் எஞ்சுவது மிகச் சிறிய சாதாரண கண்ணுக்குத் தெரியாத கலம் என்கின்ற அமைப்பு இது உயிருள்ள பாய்பொருள் நிரம்பிய அமைப்பு. கலங்கள் தான் உடலின் அடிப்படை அமைப்புக்கள். இவை ஒன்றின்மேல் ஒன்று அடுக்கப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்டு அங்கங்களாக வடிவமைக்கப்பட்டு இறுதியில் ஒரு சுப்பிரமணியமாகவோ, கந்தையாவாகவோ உலாவுகின்றது.

இந்தக்கலங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து இயங்கி உடலை இயக்க, மனிதன் சிந்திக்க, செயற்பட, சண்டையிட எல்லாவற்றுக்கும் தொடர்பூடகமாக நீர் இன்றி அமையாததாகிறது. ஒவ்வொரு கலத்தையும் சூழ நீர்—பாய்பொருளாக இருக்கிறது. இவ்வாறு தான் உடலின் குருதி கலங்களினுள்ளே, கலங்களின் வெளியே நீர் நிறைந்த பாய்பொருள்கள் எல்லாம் சேர்ந்து 45 லீற்றர் கணக்கு.

ஆனால் உடல் ஓர் ஓட்டைப்பானை. இந்த நீர் உடலிலிருந்து தினமும் வெளியேறிக் கொண்டிருக்கிறது. உடல் தொழிலின் கழிவு [illegible] நீராகப் [illegible] யில் வெளியேற்றுகிறோம். வியர்வை ஊறி நீர் ஆவியாகிறது. ஒவ்வொரு மூச்சிலும் நீராவியாகவும், உடலிலிருந்து ஆவியாகவும் நீரின் அளவு உடலில் குறைகிறது.

நீரின் அளவு குறைந்ததுவுடன் உடலில் எச்சரிக்கை மணிபோல மூளையிலுள்ள தாகத்துக்கான மையம்

## நோயற்ற வாழ்வு - 4

உசுப்பப்படும் உடனே "தாகம்! தாகம்!!" என்ற உணர்வு மேலோங்கி உடனே ஒரு செம்பு தண்ணீரோ, மோரோ, சோடாவோ வசதிக்கேற்ப உள்ளிறங்குகிறது. அது மாத்திரமல்லாது நாங்கள் சாப்பிடுகின்ற உணவு வகை சோறு, பிட்டு போன்ற

## வைத்திய சஞ்சீவி

வற்றின் ஈரப்பதனாகவும் உடலில் நீர் சேர்ந்து கொண்டிருக்கிறது.

இப்படி இழக்கின்ற நீரினதும் மீண்டும் சேர்த்துக் கொள்கிற நீரினதும் அளவு ஏறத்தாழ 3 லீற்றர் ஆகும். இது வெயிற் காலங்களில் கூடுதலாக இருக்கும். மற்றும்படி கொக்கோகோலா போன்றவற்றைக் கண்டு அங்கலாய்த்து உடலை வருந்திக் [illegible] குடித்தாலும் உடல் மேலதிகமானதை சிறுநீராக வெளியேற்றும்.

இப்படிச் சமநிலையில் இருக்கின்ற உடலுக்கு சோதனைக்காலம் வருவதுண்டு. உடலிலுள்ள நீர் கிணற்றில் நீரிறைக்கும் பம்பி போட்டு இறைப்பது போலக் குறையத் தொடங்கும் சந்தர்ப்பங்களே மனிதர்கள் காலைக் கடனில் "ஓவர்டைம்" செய்ய வைக்கிறன வயிற்றோட்டமாக

சில நோய்க் கிருமிகள், சில பேதிகள் குடற்சுவரில் சில தாக்கங்களை ஏற்படுத்தி குடலினுள் நீர் ஊற்றெடுக்க வைக்கும். நீரோடு உடலுக்குத் தேவையான சில உப்புக்களும் சேர்ந்து குடலிலுள்ள அனைத்தும் வயிற்றோட்டமாக ஓடத் தொடங்கும். உடலிலிருந்த மிகவேகமாக நீர் இழக்கப்படும்.

இப்படி நீரில் 10% இழக்கப்பட்டால் மனிதனின் உயிரும் நீரோடு சேர்ந்து இழக்கப்படும். இழக்கப்படுகின்ற நீர், உப்புக்களை உடனடியாக ஈடு செய்யப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். அல்லாவிட்டால் நீர் குறைந்து உடலின் செயற்பாடுகள் பாதிப்புற்று இறுதியில் மரணம் ஏற்படும்.

இதற்கு என்ன வழி?

மிகவும் இலகுவான வழி— இழக்கப்பட, இழக்கப்பட்ட நீரை அருந்துதல் இழக்கப்படுகின்ற திரவத்தை ஈடு செய்வதற்காக மருத்துவ உலகம் ஓர் உப்பைத் தயாரித்துள்ளது. அதனை நீரில்

அ. கிருஷ்ணேந்திரன்
4 ஆம் வருடம்,
யாழ் மருத்துவ பீடம்.

கரைத்து வயிற்றோட்டம் ஏற்படுபவருக்கு கொடுக்க வந்தால் இழக்கப்பட்ட நீரும் உப்புக்களும் சரியான அளவில் ஈடு செய்யப்படும். அது தான் இங்கு "ஜீவனி" என்றழைக்கப்படுகிறது.

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முயன்று பாருங்கள்!

கீழ்வரும் தகவல்களை வைத்து சொற்களை உங்களால் கண்டுபிடிக்க முடிகின்றதா? முயன்று பாருங்கள்.

அ) ஆறு எழுத்துத் திருவிழா இது. முதல் மூன்று எழுத்துகளும் சேர்ந்தும் மூன்றாவது எழுத்துத் தனித்தும் சோலையைக் குறிக்கும். மூன்றாவது எழுத்தும் கடைசி இரு எழுத்துகளும் சேர்ந்தால் பாடல் பிறக்கும். பெண்கள் அணியும் ஒரு சேலை பிறப்பதற்கு முதல் எழுத்தையும் கடைசி இரண்டு எழுத்துக்களையும் சேர்க்க வேண்டும். அத்திருவிழா எது?

ஆ) வீட்டுக்கு உறுதிதரும் ஆறு எழுத்துச் சொல் இது. முதல் மூன்று எழுத்தும் ஒரு மரத்தைக் குறிக்கும். அடுத்த மூன்று எழுத்தும் கிழமையைத் தரும். முதல் எழுத்தும் கடைசி இரண்டு எழுத்துக்களும் சேர்த்தால் வாள் தீட்டும் கருவி. முதலாவது எழுத்தையும் மூன்றாவது எழுத்தையும் சேர்த்தால் கூட என்பதைக் குறிப்பதாம். முதலாவது எழுத்தையும் நான்காவது எழுத்தையும் சேர்த்தால் ஆசை பிறக்கும். அச்சொல் யாது?

இ) ஏழு எழுத்தைக் கொண்ட இப்பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதி. முதல் மூன்று எழுத்தும் கட்டுச்சொல். அடுத்த இரண்டு எழுத்தும் காட்டில் வாழும் ஒரு மிருகம். அதற்கடுத்த இரண்டு எழுத்தும் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பைக் குறிக்கும். நான்காவது எழுத்து பெரிது என்பதைக் குறிக்கும். மூன்றாவது எழுத்தும் ஐந்தாம் எழுத்தும் தன்மைப் பொருளைக் குறிக்கும். ஆறாவது எழுத்து நெருப்பைக் குறிக்கும். இந்தப் பிரதேசத்தின் பெயர் என்ன?

ஈ) ஐந்தெழுத்துச்சொல். இதற்கு ஓய்வில்லை. முதல் இரண்டு எழுத்தும் வாசனையைக் குறிக்கும். அடுத்த மூன்று எழுத்தும் உறைப்பைக் குறிக்கும். இரண்டாம் மூன்றாம் எழுத்துக்களை நீக்கினால் கை என்பதைக் குறிக்கும். முதலாவது, கடைசி எழுத்துக்களைச் சேர்த்தால் ஆங்கிலத்தில் வருவதைக் குறிக்கும். கடைசி இரண்டு எழுத்தும் ஒரு குடிவகையின் பெயர். இச்சொல் எது?

(விடை X ஆம் பக்கத்தில்)

துரைசிங்கம் கேசவன்,
(ஆண்டு 7, சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

# கண்டுபிடியுங்கள்!

1. கீழ்வரும் 12 வினாக்களுக்கும் விடைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரத்தினத்தின் பெயரில் ஒளித்துக் கொண்டிருக்கின்றன. எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## மரகதம்

அ) தரு என்பதைக் குறிக்கும்.
ஆ) ஓர் இராசி.
இ) தேர் என்பதைக் குறிக்கும்.
ஈ) யானைக்கேற்படும் வெறி.
உ) ஒரு நட்சத்திரம்.
ஊ) விதம் என்பதைக் குறிக்கும்.
எ) ஒரு பொருளை வாங்கும்போது இதைக்கவனித்தல் வேண்டும்.
ஏ) ஓர் உலோகம்.
ஐ) கை என்பதைக் குறிக்கும்.
ஒ) நெல் விளையும் இடம்.
ஓ) இந்தியாவில் நிலவிய ஓர் பேரரசு.
ஔ) ஒரு குடிவகை

துரைசிங்கம் கேசவன்
(ஆண்டு 7, சாவகச்சேரி இந்துக்கல்லூரி )

II) கீழ்வரும் ஒன்பது வினாக்களுக்கும் உரிய விடைகள் கீழே குறிப்பிடப்படும் காவியத்தில் ஒளித்துக் கொண்டுள்ளன. விடைகளைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

## மகாபாரதம்

அ) பெரிய என்பதைக் குறிக்கும்.
ஆ) இந்தியாவுக்கு இப்படியும் பெயர்.
இ) அமிலத்தை நடுநிலையாக்குவது.
ஈ) கால் என்னும் பொருள்படும்.
உ) தேருக்கு மறுபெயர்.
ஊ) யானைக்கு பிடிப்பது.
எ) சுவை என்னும் கருத்து.
ஏ) முற்கால தூர அளவு.
ஐ) இந்தவெறி மனிதனுக்கும் பிடிக்கும்.

க, அருட்குமார்
(ஆண்டு 11, சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

III) கீழ்வரும் பன்னிரு வினாக்களுக்குமான விடைகள் கீழேயுள்ள வாகனத்தின் பெயரில் ஒளித்துக் கொண்டுள்ளன. கண்டு பிடியுங்கள்.

## துவிச்சக்கரவண்டி

அ) இரண்டு என்பதன் மறுபெயர்.
ஆ) பார்வைக்கு அவசியம்.
இ) தலைக்கு மேல் இருப்பது.
ஈ) பாடல் என்றும் கருத்து.
உ) ஒரு காட்டு மிருகம்.
ஊ) அடைக்கலம் என்பதைக் குறிக்கும்.
எ) உயரத்தில் இருக்கும் ஒரு நகரம்.
ஏ) பொருள்களை ஏற்றிச் செல்ல உதவுவது.
ஐ) வெட்டு என பணிப்பது இப்படி.
ஒ) கறி அள்ள உதவுவது.
ஓ) சிறுவரின் விளையாட்டு ஆயுதம்.
ஔ) சூரியனின் மறுபெயர்.

(இம் மூன்று புதிர்களுக்குமான விடைகள் X ஆம் பக்கத்தில்)

வானம்பாடி யோ. தினேஷ்குமார்
(ஆண்டு 9, ஹாட்லிக்கல்லூரி)

# விநோதச் சதுரம்

மொத்தம் 16 அடைப்புக்களைக் கொண்ட — கீழேயுள்ள — சதுரத்தைப் பாருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 96 | 11 | 89 | 68 |
| 88 | 69 | 91 | 16 |
| 61 | 86 | 18 | 99 |
| 19 | 98 | 66 | 81 |

இச்சதுரத்தில் உள்ள அடைப்புக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்களை நீளப்பாட்டிலோ, குறுக்காகவோ, மூலையாகவோ கூட்டினால் 264 வருவதைக் காண்பீர்கள். அதுமட்டுமல்ல இச்சதுரத்தை தலைகீழாகத் திருப்பிய பின்னரும் இவ்வாறு நீளப்பாட்டிலோ, குறுக்காகவோ, மூலையாகவோ கூட்டினால் ஒரே இலக்கத்தைப் பெறக்கூடியதாக இருக்கும். இது விநோதமல்லவா?

-சோ. குணாகரன்.
(நாவற்குழி)

# பெரியோர் கூறியவை

★ துன்பப்படும் போது ஓராயிரம் முறை கடவுளை நினைப்பதை விட இன்புறும் போது ஒருமுறை அவரை நினைப்பது மேல்.
— ஆபிரகாம் லிங்கன்.

★ எதனையும் உண்மைக்காக இழக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையை இழக்கலாகாது.
—காந்தியடிகள்.

★ தன்னிலுள்ள குறைபாடுகளைத் திருத்திக் கொள்ளத் திறமையற்றவன் பிறரைத்திருத்த முற்படுவது வியப்புக்குரியது.
—கன்பூஷியஸ்;

★ தன்னடக்கமே வலிமை நன்னினைப்பே ஆண்மை; அமைதியே ஆற்றல்; பிறருடைய துன்பத்தைக் கண்டு கவலையுற்று இரக்கப்படுவது மேலான பண்பு.
—ஜேம்ஸ்ஆலின்.

-பொ. கேதீசன்.

# நொடிப் பொழுது

1. தண்ணீரில் நீந்தும் கப்பல்; தரையில் தாவும் கப்பல். அது என்ன?
2. ஊசி மூக்கன் சந்தைக்குப் போனான். அவன் யார்?
3. அள்ளுவார்; தின்ன மாட்டார். அவர் யார்?
4. ஆண்டுக்கு இரண்டு வரி; அரசு போடாத வரி; மக்கள் செலுத்தாத வரி; அது என்ன?
5. ஒரு கால் மனிதனுக்கு எட்டுக்கை. அது என்ன?
6. இருட்டுக் குகைக்குள் அடுக்கடுக்காய் பளிங்குச் சிற்பங்கள். அவை எவை?
7. மூடித்திறக்கும் கதவுகள்; சத்தம் செய்யாக் கதவுகள்; அவை எவை?
8. வெள்ளை மனிதனுக்கு கறுப்புச் சட்டை. அது என்ன?
9. தலைக்குள் கண் வைத்திருப்பவன் இவன் மட்டும் தான். அவன் யார்?
10. மனிதன் வாயிலே மலரும் பூ என்ன பூ?

S. தவரஞ்சினி.
ஆண்டு — 7
கைதடி குருசாமிவித்தியாலயம்.

## விடைகள்

10. நாக்கு. 9. [illegible] 8. [illegible] 7. [illegible] 6. [illegible] 5. [illegible] 4. [illegible] 3. [illegible] 2. [illegible] 1. [illegible]

# எங்கள் பிள்ளையார்

எலியின் மீது வீற்றிருக்கும்
எங்கள் பிள்ளையார்
என்றும் நாங்கள் வணங்குகின்ற
நல்ல பிள்ளையார்

தும்பிக்கையும் பெரிய காதும்
பானை வயிறுமே
எலியின் மீது தாங்குகின்ற
புதுமை பாருங்கள்

மோதகங்கள் பட்சணங்கள்
செய்து வைப்போமே
பூசை பண்ணி நாங்கள் உண்டு
புளுகம் கொள்வோம.

கு. ஜெயதாரிணி
பருத்தித்துறை.

# திக்குமுக்காட சில கேள்விகள்!

உங்களைத் திக்குமுக்காட வைக்கும் இக்கேள்விகளுக்கு பதில் கூறுங்கள் பார்க்கலாம்.

அ) கடைக்கு ஓடிப்போனவன் முதலில் என்ன வாங்குவான்?
ஆ) கிணற்றுக்குள் விழுந்தவன் முதலில் என்ன செய்வான்?
இ) மூன்று காலுள்ள மிருகத்தை எப்படி அழைப்பர்?
ஈ) ஒரு நாளைக்கு இரு தடவைகள் மட்டும் சரியான நேரம் காட்டும் மணிக்கூட்டின் பெயர் என்ன?
உ) ஒரு வருடம் பார்க்கத் தொடங்கிய படத்தை அடுத்த வருடம்வரை பார்த்துக் கொண்டிருந்தால் கண் கெடுமா?
ஊ) ஏறுவது எல்லாம் இறங்கும். இது இறங்காது. அது என்ன?
எ) வருடத்தில் 27 ஆம் திகதி வரும் மாதம் எது?
ஏ) பஸ்ஸை பின்னால் தள்ளினால் என்ன நடக்கும்?

(விடை X ஆம் பக்கத்தில்)

நாகமணி மகேந்திரலிங்கம்
(கொழும்பு)

# உலகை ஆள்வீர்!

மாணவ மணிகள் கேளீர்!
மாண்புடன் கற்போம் சேரீர்!
பேணுவம் ஒழுக்கம் வாரீர்!
பேறுகள் பெற்றே வாழ்வீர்!

மாதா பிதாவைப் போற்றி
மதித்துக் குருவை வாழ்த்தி
வேதா கமத்தை ஏற்றி
விந்தைகள் கற்றுச் செல்வீர்!

அன்பை அறத்தை நிறுத்தி
அயலவரை அணைத்துப் பெருக்கி
இன்பம் பெருக உயர்த்தி
இவ்வுல கத்தினை ஆள்வீர்!

தி. ரஜி.
(யாழ். இந்துக்கல்லூரி)




# மழை

மழையே மழையே மெத்தப்பெய்
மாநிலம் எல்லாம் சிறக்கப்பெய்
மக்கள் சுகமாய் வாழ்வதற்கு
மண்ணிற் பயிர்கள் செழிக்கப்பெய்.

உலகில் உள்ள மனிதரெல்லாம்
உன்னால் நன்மை யடைகின்றார்
ஊரும் புழுக்கள் பறவையெல்லாம்
உலகில் சுகமாய் வாழ்கிறதே!

கரிய பெரிய உருக் கொண்டு
கடிதாய் வானத்தில் பறக்கின்றாய்
பறக்கும் போது உன்னுடல் தான்
பளபளப்பாக மின்னுவதேன்?

- ஆரணி தனபாலசிங்கம்.
(நெல்லியடி மெதடிஸ்த மிசன் த. க. பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாரி கண்மாரி

னவிழி ஈரமொழி பேசுகிற போது
சநெடி மண்மடியில் பூசுவது யாரு?
னகைகளாய் நடனமாடுறது நாற்று
ன்னி மழை நெல்லினை விதைக்கிறது காற்று.

ரவென இரைந்து சிறு சாரல் ஜதிபோடும்
றையது ஆலமர வேரில் கிளுக்கிண்டும்
தல் நடைபோடும்; இடி கட்டியமும் கூறும்
றண்டுகிறேன் நான்! ஒதுங்க இல்லையிடம் பாரும்

ட்லறிஷெல் வீழ்ந்து முகடன்றுடைந்த தாச்சு
றை வருஷம் இடம்பெயர்ந்தும், கோப்புசமும் போச்சு
. ஓடு......பின் கண்முன் விற்பனையுமாயாச்சு
ரியமோ இன்றொழுக்கில் மூழ்கிச் சுரத்தோடு!

யாயிரம்' இன்னும் எனக்கு வரவில்லை
ழிவென்று பதிந்தவர்......பின் பார்க்க வரவில்லை
ய்வதங்கி இருவருஷம்! மீட்சியெதும் இல்லை
ளிநாட்டுத் 'தறப்பாளும்' ஏன் எனக்கு இல்லை?

தீர்வுவரும்; கூரைவரும்; ஓடுவரும்'' நம்பி......
நப்பமெனத் தேய்ந்ததுதான் மிச்சம் அடதம்பி!
ரியிடம் கேட்டழுதே இரங்கென்று வெம்பி
ாய்கிடுக்கப்' பாடுகிறேன் வரம்வருமென்றேங்கி

- அருணன்.

## வாங்குன்றும் தமிழணங்கு

அ தமிழ் அம்மா அப்பா அருகிடலாச்சு
ஆங்கிலத்து மம்மி டடி அரங்கேறலாச்சு
பழுமிழ் பண்புமிகு பெயர் ஒழியலாச்சு
பைந்தமிழும் பாழ்பட்டுப் போயிடலாச்சு

அபதமென இனித்தமொழி அஃதிழந்து போச்சு
அவனிமிசை நம்மொழியும் அழகிழந்து போச்சு
தமிழ்மொழியே மூச்சென்ற சான்றோரும் போனதனால்
தாரணியில் தமிழதுவும் தலைகுனிந்து போச்சு

கல்வுடன் காதலாய்க்கூறுகின்ற வந்தனங்கள்
காற்றோடு போயகன்று கனகாலமாச்சு
பண்டைத்தமிழரது பண்பாட்டை மறந்தின்று
பாரினிற் தமிழ்வெறுக்கும் காலமாச்சு

பண்டிதர்கள் பேச்சினிலும் பைந்தமிழ் அகன்றாச்சி
பாமரர்கள் வாயினிலும் பாழ்மொழிகளாச்சு
எஃசையும் ஏற்றமுடன் ஏறர்ந்த தமிழணங்கு
எழிலகன்று வாடுகின்ற காலமும் வந்தாச்சு

முக்கம் போலின்று முகிழ்த்தொரு சங்கமது
முனைப்போடு செயற்படின் முன்னேறுந் தமிழது
இக்கத்தில் இளையோர்கள் இப்பணியை முன்னின்று
இயற்றினால் இன்றமிழ் இங்குயர்த்திடலாம்

வங்குன்றுந் தமிழணங்கின் வண்மையுயர்த்திடவே
வாரீர் இளையோரே வன்பணி புரிந்திடுவோம்
வரைஞ வாழ்வென்று வண்டமிழக்களித்திடவே
வாரீர் இளையோரே வன்பணி புரிந்திடுவோம்.

—வயலூரான் செ. சுதாகரன்

## தமிழுக்கு இந்தத் தந்தி!

ஷலால் சிதறாமல் ... ;தெருத்தெருவாய் அலைகையிலும்
பெல்லூன்றி வாடிப் பொலிவிழந்து போகாமல்
மல்வுக்கு நிற்கும் வழித்தடையை வரலாற்றில்
பல்வுக்கு ஏற்ப பதமாக்கி ... காலநதி
வெளத்தில் நீந்தி விடியுமென்ற நம்பிக்கை
உளத்தில் ஊன்றி உலவ எண்ணும் தமிழே ... உன்
பின்ளக்கு எந்தப் பிணியினையும் தாங்குகின்ற
வல்லமைதா! தந்தால் வசந்தத்தை வாங்கிடலாம்.

காவதி காலம் காலூன்றிக் கற்பனையின்
கேலிலாச்சி; வாழ்வைக் குலவி; இசைக் கூத்தாடி
மேல்குத்து விழும் வியர்வைக்குள் உயிர்தேக்கி
பாலறிங் காக்கி; 'பதங்கண்ட' நின் கூட்டில்
கோண்மாறி; சொந்தக் குடில் பாறி, குருகோடி
சாவோலங் கூடி, 'அடிமுடியும்' தடம்மாற
வாழ்ந்த வயல் நீற ... வாசம் இழந்துனது
கோலநகை வாடக் 'குறளிவித்தை' பலர்செய்தார்.

சிரித்தால் வெந்து, நீ அழுதாலோ ரசித்து
ஆடியவர் உன்னை அலைக்களித்தார்! நீ தவழ்ந்த
காடிகளி லெல்லாம் கொடுமுட்கள் பதிவைத்தார்
ாவியடி தாயே ...! படர்முள்ளுக் குத்தி ... முதல்
சலை கிழித்தாய் ... சிராய்ப்பில் சிதல்பட்டாய்
ாலிழக்கப் பார்த்தாய்! கழுத்துக்கே கத்திவர
லமிட்டாய் ... அதனால் உயிர் மீட்டாய் ...! இன்னும் உன்
லத்தால் தானே சிதைக்குள்ளும் வாழ்ந்துள்ளாய்!

கவப்பிரரின்' கைக்குள் கசங்காமல் தப்பிய நீ
ளைத்துக் கவர்ந்த 'வடக்கன்களின்' வாடைபட்டும்
லங்கித் துவளா நீ ... கடைபோட வந்தவரின்
சழிப்புக்குள் கூட 'சீர்' அழிந்து போகா நீ
ழ்க் 'கோட்டுச் சூட்டில்' முகமிழந்து நின்றாலும்
ழக்க வழக்கத்தில் பணியா நீ ... நின் வீட்டில்
மலிந்துள்ளாய் ... உந்தன் 'மேன்மைக்குச் சரிசமானஞ்
ழங்குவதா?' என்போர் வரிசை கொண்டார் காண்கிலையா?

வைக்கத் தங்கள் 'திருஏட்டில்' வழிகண்டுன்
ளியிலே மூட்டி ... விழிபிதுங்கி நீ வருங்கால்
லிடையே வீழ்த்தக் காத்திருக்கும் புனிதரெங்கும்
டிக் கிளைப்பதுவும் ... குரலடைத்த உன்சிலசேய்
ரடிக் கிடப்பதுவும் ... வரலாறு தலைகீழாய்ப்
ாகத் துடிப்பதுவும் புரிந்திடடி! இன்றெழுந்த
லச் சவால் தாண்டிக் காரிகை நீ நீதிபெற
லையினைக் கொண்டாணும்; விழி! கெதியாய் வெளிக்கிடடி!!

– தேரடிச் சித்தர்

## பயங்கள்

உன் புன்னகைக்குப் பதிலாய்
என் இதழ்கள்
இறுக்கப்படுகின்றன — உள்ளே
அம்மா பகலிரவாய் தந்த
அறிவுரையின் தளம்பல்கள்!
அதென்னவோ தெரியாது
குடிசையில் குடியிருக்கும் நான்
உனக்கு மட்டும்
மனசுக்குள் மாளிகை கட்டி ...
சமாதியாய் மூடி வைத்திருக்கிறேன் —இந்த
'சமூகநோய்' ஆட்களுக்குப் பயந்து!
வீதியோரத்து உந்தன்
முக தரிசனங்களில் தான் — எந்தன்
வானத்துச் சூரியன்
விழி விரிக்கிறான் — விடி
வெள்ளியைப் போலாவது
புன்னகைக்க ஆசைப்படுகிறேன்!
''நானும் நீயும்'' நீளும் கதைகளும்
இந்தத் தேசக் காற்றை
சேதமாக்கக் கூடாது என்பதற்காய்
மௌனியாகி ... மரணித்துக் கொள்கிறேன்
மனசுக்குள்!
என்றாவது ஒரு நாள்
பயங்கள் விலகி — நம்
பயணங்கள் ஒன்றாகி
மௌனங்கள் மொழி பெயர்ந்து
மனதால் புன்னகைத்து ...;
அத்தனையும் சொல்ல ஆசை — அன்றும்
தலை முறை நாணங்கள்
தடுக்குமோ — மீண்டும்
மனதுக்குள் பயம் விரிய
மௌனங்கள் மொழியாக
மனசு இறக்கின்றது ...!

- நிலா.

## நரக இருள்

தூரத்தில் ஏதோ
சட ... சடப்புக் கேட்கும்
இமைக்கும் பொழுதில்
எதிர் வீட்டு
விளக்கெல்லாம்
இறந்து போகும்!

சாத்தியிருந்த
யன்னல்கள்
விலங்கை
மாட்டிக் கொள்ளும்!

முதிரையில் அறுத்த
கதவென்றாலும்
உதவிக்கு — உட்புறமாய்
திறாங்கை
வாங்கிக் கொள்ளும்!

பின் பாலத்தடியில்
நாய்க் கூட்டமொன்று
தொண்டை கிழியக் கத்திப்
பறை சாற்றும்!

நடு நிசி
அண்டங் காக்கைகள்
உயரப் பறந்து
கண்டபடி
கரைந்து தள்ளும்!

உடுப்புக் காயும்
காவோலை வேலி
சரக்... சரக்கெனக்
கிழிந்து கேட்கும்!

சுவரில் தொங்கும்
மணிக் கூட்டுச்
சத்தங் கூட — ஒரு
பதற்றத்தை
உண்டு பண்ணும்!

விழிகள் இருப்பதையே
இமைகள் மறந்து.
மேலே ஒளிந்து கொள்ளும்!

உள் நாக்கு
மூடிக் கொண்டதால்
உமிழ் நீர்கள்
வாய்க்குள்ளேயே
தேங்கிக் கிடக்கும்!

நீண்ட நேர
நிசப்தத்திற்குப் பின்
முணுமுணுப்புக்களோடு...
குப்பி லாம்பு
உயிர் பெறும்!

மூலைத் தென்னைக்கால்
நிலவொளி வெளிப்பட்டு
நரக இருளைத்
துரத்திக் கொண்டு போக
மனங்கள் எல்லாம் லேசாகும்...
''ஓ'' ... இந்த
நரக இருள் மோசமானது!

- மருதம் கேதீஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுப்புவார் யாரோ?

கலக்க முற்ற கண்களுக்கு
கனிமொழி தருவார் யாரோ?
தயக்கமுற்ற மனங்களுக்கு
தயவு செய்வார் யாரோ?
துவண்டு போன உள்ளங்களுக்கு
துணிவினைத் தருவார் யாரோ?
தோல்விகண்ட மனிதருக்கு
தோள் கொடுப்பார் யாரோ?
அலைபாயும் உள்ளங்களுக்கு
அறிவு தருவார் யாரோ?
வாழ்விழக்க முனைவோர்க்கு
வழி காட்டுவார் யாரோ?
நிலை குலைந்த நெஞ்சங்களுக்கு
நிம்மதி தருவார் யாரோ?
பாலை வனமாகும் பாருக்கு
பசுமைகள் படைப்பார் யாரோ?
கண்ணீரும் குருதியும் கலந்திடும் பாருக்கு
வெண் புறாக்களை அனுப்புவார் யாரோ?

- இணுவை றொட்றிக் -

## பாண் துண்டு தொங்குவதைப் பார்!

(பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்று மூன்றாவது ஆண்டு பூர்த்தி தினத்தன்று தெற்கில் முக்கிய சந்திகளில் பாண் பார்வைக்குத் தொங்கவிடப்பட்டிருந்தது. அதையொட்டி வரையப்பட்ட கவிதை இது.)

ஒன்றுபட்ட நாட்டிற்காய் ஓயாது பாடுபடும்
வெண்புறவுக் கூட்டமே வெல்கபணி – அன்றும்மால்
செங்கட்டி யாகிச் சிதைத்த தமிழ்க்குடிக்குச்
செங்கட்டி சேர்த்தீர் சிறப்பு.

கொள்ளி துறந்துவெண் கோலூன்றி வந்தீரே
நல்லபிள்ளை போலின்று நம்புகிறோம் – வள்ளலிவர்
சொன்னபடி மண்ணைச் சுவர்க்கபுரி...(?) ஆக்குவதில்
விண்ணதென்ற உண்மை விளங்கு.

வெள்ளைப் புறவுகளே வீடுகட்டி நீரிருக்கச்
சுள்ளிக் கிளையில்லை சுற்றிவர முள்வேலி
கம்பிகளில் குந்தமுதல் கப்பலிலே பெற்றுவந்த
நம்பரினைக் காட்டல் நலம்.

சொன்னபடி சாந்திச் சுடரேற்ற நீர்மறந்தால்
என்னசெய்ய நாங்கள் எளியவர்கள் – அன்று நீர்
வீணுக்கு வாக்குறுதி வீசிவினை யாச்சுதையா
பாண்துண்டு தொங்குவதைப் பார்.

தீந்தை பூசித் திருத்திடலாம் கட்டடத்தைச்
சாந்தகப்பை கொண்டும் சரிசெயலாம் — ஆந்தைபல
நன்னிரவிற் கொந்தும் நறுங்கனிக ளைத்திருப்பி
கொள்ளுவதும் யாரோ கூறு.

எல்லாம் சுமுகம் எடமீண்டும் எம்சொர்க்கம்
நல்லாத்தான் நாமுள்ளோம் நம்மண்ணில் – வல்லூறின்
காவலிலே லெக்கோன் களித்திருக்கும் ராவிடியும்
சேவல்கள் இன்றிச் சிவந்து.

— ச. முகுந்தன்

## புள்ளியும் வட்டமும்

வெள்ளைத் தாளின் ஓரத்தில்
சின்னப் புள்ளி...
துளியாய்க் கிடந்தது.
தொந்தரவில்லை.
தூக்கத்திற் குறைவில்லை
"கண்படாத அளவு
உருவத்தைத் தந்த கர்த்தரே...
உமக்கு நன்றி"
புள்ளி வாய்மூடும் வேளை...
அவ்வழி மனிதன் வந்தான்.
புள்ளியில் தொடங்கி
இருகவர் விரித்து...
இருபது பாகையைக்
கரியினால் தீட்டினான்.
புள்ளி விழித்தது.
தன் முகம் புரிந்தது.
"என் இருபது பாகையைப்
பறித்துக் கொண்டாய்.
ஆயினும் மனிதா ....
இதய நன்றிகள்!
என் வியாபகத்துக்கு
முகவரி சொன்னதால்...."

— ச. ஆனந்தி.

கவிதை முற்றம்

# குறள் வெள்ளம்

உலகினை ஆள்வது எப்படி என்று அழகாகச் சொல்லி இருக்கிறார் வள்ளுவர். இன்று நாம்படும் பாட்டைப் பார்த்தால் பரிதாபப்பட்டிருப்பார்.

கண்டதையும் காலம் நேரம் இன்றித் தின்று தள்ளிப் பலரும் பழகி விட்டோம். இதனால் உடலைக் கெடுத்து நோயை விலைக்கு வாங்கி விடுகிறோம். நோயே செல்வம் என்றாகி விட்ட பின் சுவை தேடி என்ன லாபம்? சுவைக்கும் வகை இதுவா?

படம் என்றால் பத்தும் பறந்து போகும் காலம் இது. வீட்டில் அடுப்பும் எரியாது தொடர்ந்து ஓடும் தொலைக் காட்சித் திரையில் — குப்பைக் காட்சிகளில் — குறாப் டான்ஸ் பாட்டுக்களில் மனம் லயித்து — முகம் புதைத்து — மயங்கி மிஞ்சுவது எது? கண் கெட்டுப் போம். தலைவலியும் தவிப்பும் சேர்ந்து விடும். ஒளி தேடும் வகை இதுவா?

தொடத் தொட சுகம் ஆயிரம். ஸ்பரிச சுகம் தேடும் பேனிக்கு எத்தனை ஆடம்பரம். தொட்டுப் பழகும் எதுவும் — அத்தனையும் தரமாகத் தேடி அலையும் மனது. நிம்மதி 'எங்கே பிறக்கும்? 'ஊறு' தரும் சுகம் இதுவா?

பாட்டுக்குப் பாட்டு வீட்டுக்கு வீடு படுத்துகிறபாடு புரியவில்லையா? விட்டுப் போக மனமின்றி வேலை வெட்டிகைவிட்டு ஆட்டம் போட வைக்கின்றது. வம்பு தும்பு வீட்டில் மலிய ஒலிகானங்கள் உள்ளத்தைத் தடவுகின்றது. ஓசைபடுத்தும் பாடு புரிகிறதா?

சுகந்தம் தேடி உலகத்தையே வளைத்தான் ஆங்கிலேயன். வாசனைத் திரவியங்களின் வலிமை பல சாம்ராஜ்ஜியங்களைக் கவிழ்த்தது. பல உயிர்களைக் காவு கொண்டிருக்கிறது. இப்போது 'கொகோயின்' விலை ஆளைக் காவு செய்கிறது. நாற்றமெனும் வாசம் இவ் வகைத்து.

இப்படி அனைத்தும் அனுபவிக்க ஆலாய்ப் பறப்பவர் நிம்மதியைக் கோட்டை விடுகிறார். அதை விடுத்து வகைப்படுத்தி — கட்டுப்படுத்தி வாழ்பவரே நிம்மதியை — மனதினை — உலகினை — ஆள்கிறார்,

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரி வான்கட்டே யுலகு.

—0027

(நீத்தார் பெருமை)

- அம்பிகைபாகன் -

# இந்த வார இராசி பலன்

**(15 - 11 - 1997 முதல் 21 - 11 - 1997 வரை)**

| | | | |
|---|---|---|---|
| சனி | | சந் | |
| கே | இராசிச் சக்கரம் | | |
| வி | | | |
| செ வெ | புத | சூ | |

மாற்றம்:

16 11 1997 இல் விருச்சிக இராசிக்கு சூரியன் மாறும்.

அரசியலில் தென் பகுதியில் திசைமாற்றங்கள் நடைபெறும். மாணவர்கள் —மக்கள் மனப்பேதப்படுவர். பொருள்களின் விலைகள் அதிகரிக்கும். தட்டுப்பாடுகள் உருவாக்கப்படும். இந்திய அரசியலில் மாற்றங்கள் சகஜமாகும். தமிழ் நாட்டில் புதிய தலைமுறை தோன்றும்.

உலகில் — கிழக்கு நாடுகளின் போக்கு மேற்கு நாடுகளுக்குப் பிடிக்காது. அமெரிக்கா தன் ஆதிக்கத்தை மறைமுகமாக எங்கும் செலுத்தியபடி இருக்கும். செல்வாக்கும், சொல்வாக்கும் அதிக செயற்பாடுகளை உருவாக்கும்.

**மேடம்:** நீங்கள் பொருள் விஷயத்தில் கவனமாக இருக்கவும். மற்றவர்கள் உங்களைப் பற்றிக் கண்டபடி கதைத்தபடி இருப்பார்கள். உலகில் பொருள் கொடுத்தால் வரவேற்பார்கள். கொஞ்சம் இறுக்கமாக இருந்தால் தூற்றுவார்கள். நீங்கள் அதை எல்லாம் கருத்தில் எடுக்காது உங்கள் செயற்பாடுகளை சீர்படுத்திக் கொள்ளுங்கள். உடலில் களைப்பு. அலைச்சல் கொடுக்கும் தொழிலில் மாற்றங்களைச் செய்யுங்கள். படிப்படியான முன்னேற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும். பணப்புழக்கம் திரும்பவும் முன்னேற்றம் காணும். விடாமுயற்சியே நன்மை தரும்.

★ அதிர்ஷ்ட திகதி:-19, 21
★ அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.

**இடபம்:** உலகம் போட்டி போடுகிறதே என்பதற்காக கலங்கலாமா? இடமாற்றங்களைத் தவிர்க்கவும். தொழில்ஸ்தானத்தில் குறைகுற்றம் கேட்க வேண்டி இருக்கும். காலமறிந்து செயற்பட்டு காரியமாற்றுங்கள். சாதகமான சூழ்நிலைகள் ஏற்படும். விரோதிகள் உங்களைக் கண்டு பதுங்குவார்கள். சில விசயங்களில் கைக்கெட்டியது வாய்க்கு எட்டாத நிலை ஏற்படச் செய்யும். அதற்காக முயற்சிகளை விடக்கூடாது. வீட்டில் எதிர்ப்பாலாருடன் கொஞ்சம் மனத்தாங்கல்தான். சமாளித்துக் கொள்ளுங்கள். பொருளில் கொடுக்கல் வாங்கல்களில் மிக அவதானமாக இருந்து கொள்ளவும். ரோகிணி நட்சத்திரம் கொண்டவர்கள் மிக அவதானமாக நடந்து கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட திகதி:- 19, 21
★ அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.

**மிதுனம்:** உங்களுக்கு எக்காரியம் செய்தாலும் அதில் திருப்தி வராது. இருப்பினும் ஓடியாடி முயற்சி செய்தபடி இருப்பீர்கள்; புத்திரராலோ, சகோதரங்களாலோ புதிய பிரச்சினைகள் ஏற்பட்டபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் புதிய உத்வேகங்கள் ஏற்படும் எதிர்ப்பாலார் போட்டி போடுவர். கொஞ்சம் நிதானமாக நடவுங்கள். திடீரென பொருள் இழப்பு அல்லது களவு போகலாம். தொழில் ஸ்தானத்தில் மனக்கசப்புக்கள் ஏற்பட இடம் உண்டு. பொருளில் நிதானமாக இருக்கவும். பொருள் கேட்டுக் கோபிப்பர். இடமாற்றங்கள் செய்ய யோசனைகள், ஆலோசனைகள் வரலாம்.

★ அதிர்ஷ்ட திகதி:- 19.
★ அதிர்ஷ்ட நாள்:- புதன், சனி.

**கடகம்:** உங்கள் மனதில் ஒன்றும் இருக்காதாம். எவரையும் யோசிக்காமல் அபிப்பிராயம் சொல்வதனால் வீணாகக் குறை கேட்க வேண்டி வரும். வாக்குக்கலகம் தொழில் ஸ்தானத்தில் ஏற்பட இடம் உண்டு. நீங்கள் இதுவரை நம்பி இருந்தவர்கள் உங்களை ஏமாற்ற முயல்வார்கள். வாழ்க்கைச் சக்கரத்தில் மேலும் கீழும் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் அடிக்கடி உங்கள் கிரக நிலைகளை — காலமாற்றங்களை அறிந்து செயற்பட வேண்டும். அல்லது கஷ்ட நஷ்டங்களை அதிகம் சந்திப்பீர்கள். நாலுபேர் உங்களைப் பற்றிக் கதைத்தபடி இருப்பார்கள்; இருக்கட்டுமே. நல்லது, கெட்டது இரண்டையும் தானே கதைக்கிறார்கள். இடமாற்றங்கள். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். அல்லது வீண்சிரமப்பட வேண்டி வரலாம்.

★ அதிர்ஷ்டதிகதி:- 15, 19, 21.
★ அதிர்ஷ்ட நாள்:- சனி, திங்கள், புதன்.

**சிங்கம்:** காணி நிலம் வேண்டும் எனப் பாரதியார் பாடினார். ஆனால் நீங்கள் காணி நிலத்திற்காக அதிக பிரயாசையோ, செலவுகளோ செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும் எதையும் இலட்சியம் செய்யாது நேர்வழியில் இவ்வுலகில் வாழ்வது மிகக் கஷ்டந்தான் நல்லது, கெட்டது இரண்டும் கலந்த வாழ்க்கையில் உங்களைச்சிலர் நல்லவர் என்றும் சிலர் கெட்டவர் என்றும் சொல்லுவர். அதற்காக அதிகம் சிந்தியாதீர்கள். ஏனெனில் அப்படிச்சொல்பவர்களே தலைகீழாக மாறும் காலமும் வரலாம். தொழில் ஸ்தானத்தில் மனக்குழப்பம், அவதிகள் வர இடம் உண்டு. புத்திரருக்காகவோ அல்லது சகோதரங்களுக்காக அவதிப்படவேண்டி வரலாம்.

★ அதிர்ஷ்டதிகதி:- 19, 15, 21.
★ அதிர்ஷ்ட நாள்:- சனி, புதன், வெள்ளி.

## சோதிடச் சஞ்சீவி

**கன்னி:** உங்கள் வசீகரத்தால் எல்லோரையும் கைக்குள் போட்டு விடுவீர்களே! சடுபுடு என்றிராமல் கொஞ்சம் அன்பாக இருக்கப் பாருங்கள்.


## மகாதேவா ஜோதிடம்

இந்த உலகத்தில் கோபித்து கோபித்து எதைச் சாதிப்பது? உங்கள் அலுவல்களில் கண்ணாக இருந்து செயற்பட்டுப் பாருங்கள். அயலவர்களுடனும், தொழில் ஸ்தானத்தில் உள்ளவர்களுடனும் நிதானமாக இருங்கள், கண்டபடி பேசுவார்களாம். காணி பூமி சம்பந்தமான இடங்களில் மாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு. வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். சொந்தபந்தமெல்லாம் கொண்டாட்டந்தான் — வீட்டில் குதூகலம் இருக்கும். எதிர்ப்பாலாரால் உதவிகள் இருக்கும். இக்காலத்தில் இனஜனங்களாலும், நண்பர்களாலும் பல உதவிகள் கிடைக்கும் இருக்கும்.

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 24



சொற்சிலம்பம் இல. 24
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ....................

விலாசம் : ....................

....................

—————— இங்கே வெட்டுக ——————

**முடிவு திகதி: 21 - 11 - 1997**

### இடமிருந்து வலம்

1. சூரியன். 4. குரங்கு 6. ஒரு நட்சத்திரம். 7. இசையுடன் பாடப்படுவது. 8. கை. 9. அரைவாசி. 10. ஓர் இராசி. 12 காலை முதல் மாலைவரையான காலம். 14. தற்கொலைக்கு உதவும் மரம். 16. நிகழ்வு. 18. உலக்கைக்குப் போடுவது. அணிவதையும் குறிக்கும். 19. சாப்பிடு 20. அம்மாவின் அம்மா. 21. மேடான நிலப்பகுதி. 22. பெருநாள்

### மேலிருந்து கீழ்

1. திடீரென வரும் நெருக்கடி. 2. பெருக்கல் குறி. 3. வர்த்தகம். 4. பூமியில் நிறைந்திருப்பது. 5. நாளின் கணக்கு இதில். 7. சிறுவர் விளையாடுவது. 9. தாய் பிள்ளைக்கு ஊட்டுவது. 11. வியாபாரத்தில் எதிர்பார்ப்பது. 13. மகிழ். 14 உயர்திணை ஆண்பால் ஒருமை படர்க்கையிடத்து சுட்டுப் பெயர். 15. சிவிகை. 16. வீதிகள் இணையும் இடம் 17. விடை 18. பாட்டியின் தாய் 20. பல வீடுகளில் காலை உணவு.

### சொற்சிலம்பம் இல. 22 - விடைகள்

**இடமிருந்து வலம்**

1. விவேகம் 4. காகம் 6. வாட்டு 7. வாண்டு 8. கடுக்காய் 10. மைதா 12. சலிப்பு 14. ஏன் 15. புத்தன் 17. பணி 18. நீ 19. தழு 20. வேலி 21. கம்மி 22. துயர் 23. வேம்பு

**மேலிருந்து கீழ்**

1. விவாகம் 2. வேட்டு 3. கடுக்கன் 4. காண் 5. கடுமை 7. வாய்ப்பு 9. காணி 11. தாசன் 13. புத்தகம் 14. ஏணி 16. தழும்பு 17. பத்து 18. நீலி 20. வேர்

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு:- கி. உதயகுமார்,
உயிரியல்துறை விவசாயபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

★ இரண்டாம் பரிசு:- பாக்கியநாதர் மெலிரீனா,
இலக்கம்; 315, பாங்ஷல்வீதி,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு:- சி. வானதி,
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை,

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | | |
|---|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. | 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. | 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. | 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம். 23 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

# கோள்களின் ஈர்ப்பு சக்தியை பயன்படுத்தும் விண்கலங்கள்

அதோ வானத்தை நோக்கு கின்றோம். சூரியன், சந்திரன், கோள்கள், நட்சத்திரங்கள் இத்தனையும் வான வெளியில் விழ்ந்து விடாமல் எப்படித் தொங்குகின்றன? இன்றைய மாணவர்கள் கூறுவர் ஈர்ப்புச்சக்தியால் என்று. அறிவியல் உலகில் இவ்வீர்ப்புச்சக்தியைப் பயன்படுத்தி பல சாதனைகளும் நிகழ்ந்து வருகின்றன. உதாரணமாக புவியிலிருந்து ஏவப்படும் விண்கலங்கள் நீண்ட தூரம் செல்வதற்குரிய சக்தியை கோள்களின் ஈர்ப்புச் சக்தியைப் பயன்படுத்தி பெறும் வழிகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். அமெரிக்க விண்கலமான 'வெயேஜர்—2' ஈர்ப்புச் சக்தியைப் பயன்படுத்தி விண்வெளியில் பிரயாணம் செய்கின்றது.

இந்த ஈர்ப்புச் சக்தி என்பது ஒருவகைக் கவர்ச்சியே. தனக்குப் பிடித்தவர்களை ஏதோ ஒரு வகையில் ஈர்ப்பது மனித இயல்பு. இதே போல கோள்களும் குறிப்

(COSMO—NAUTICS) என்ற புதியதோர் துறையும் அன்றே ஆரம்பமாயிற்று.

விண்வெளிக்கு செய்மதிகளை அனுப்பவும், மனிதர்களைக் கொண்டு பறந்து செல்லவும் ''றொக்கெட்'' அமைப்புகளால் தான் முடியும். இதன் அடிப்படை இயக்கம், நியூட்டனின் மூன்றாம் புவியீர்ப்புக் கொள்கைப்படி ஒவ்வொரு தாக்கத்திற்கும் எதிரானதும், சமமானதுமான மறுதாக்கம் உண்டு என்பதற்கமையவே உள்ளது.

இந்த 'றொக்கெட்டுக்கள்' முதலில் 1938 ஆம் ஆண்டு ஜேர்மனியில் ஏற்பட்ட மாற்றங்களினூடாக ஹிட்லர் அரசினால் இராணுவ நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டன. ஜேர்மனி '$V_2$', எனப் பெயரிடப்பட்ட (VERGELT UNGSWAFFE) பழி தீர்க்கும் ஆயுத றொக்கெட்டுக்கள் உலகையே கிலி கொள்ளச் செய்தன

இந்த '$V_2$' றொக்கெட்டின உந்து விசை 27.2

அமெரிக்காவும் ரஷ்யாவும் கடந்த வருடம் இரகசியமாக விண்வெளி ஆய்வுத் திட்டம் ஒன்றை மேற்கொண்டன. அவை தமது விண்வெளி வீரர், வீராங்கனைகளைப் பயன்படுத்தி விண்வெளியில் குழந்தைகளைப் பிறக்க வைத்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தக் குழந்தைகள் மிக வீரியம் உள்ளவையாகவும் சாதாரண மனிதனை விட அபார சக்திகளைக் கொண்டவையாகவும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.


பிட்ட சில ஒழுங்குகளுக்கு அமைய ஒன்றுடன் ஒன்று ஈர்ப்புச் சக்தியால் கவர்ந்து கொண்டிருக்கின்றன. இச்சக்தியைப் பயன்படுத்தவே விஞ்ஞானிகள் வழி கண்டுள்ளார்கள்.

பரந்த இந்த உலகு பற்றிய அறிவு போதாது என்று மனிதன் அண்ட வெளிக்குள் பிரவேசித்தான். இது அறிவின் தேடல்; அவனது எல்லைகள் இன்று பல பரிமாணங்களில் விரிவடைந்து செல்கின்றன.

1957 ஆம் ஆண்டு ஒக்டோபர் 4 ஆம் திகதி உலக வானொலிகள் எல்லாம் 'பீப்! பீப்! பீப்!...' என்ற

தொன்களாகும். சராசரியாக ஆயிரம் கிலோகிராம் எடை கொண்ட வெடி மருந்துகளை 320 கிலோ மீற்றருக்கு அப்பால் செலுத்தக்கூடிய ஆற்றல் படைத்தது. இந்த றொக்கெட்டுக்கள் நேச நாடுகளைக் கதி கலங்க வைத்தன. 1945 ஆம் ஆண்டு மே மாதம் ஜேர்மனி யுத்தத்தில் தோல்வியடைய, இந்த றொக்கெட்டுக்கள் பற்றிய இரகசியங்களை யுத்தத்தில் வென்ற அமெரிக்கா, சோவியத் நாடுகள் இரகசியமாக தம் வசம் எடுத்துத் தொடர்ந்தும் ஆய்வுகளைச் செய்தன.

1948 ஆம் ஆண்டு அமெ



2ஆம் உலக யுத்தத்தில் நேச நாடுகளைக் கிலி கொள்ளச் செய்த $V_2$ றொக்கெற்றுக்கள் ஜேர்மானியர்களால் ஏவப்படுகின்றது.


சத்தத்தை ஒலிபரப்பின. எல்லா மக்கள் மத்தியிலும் அதிசய உணர்வு. புவியீர்ப்பைக் கிழித்துக்கொண்டு உலகின் முதலாவது செய்மதியான 'ஸ்புட்னிக்—1' சோவியத் நாட்டினால் அன்றுதான் விண்வெளிக்கு ஏவப்பட்டது. அன்று தான் விண்வெளி சகாப்தம் உலகில் உதயமானது. விண்வெளிப் பயணவியல்

ரிக்கா தன் விண்வெளித் திட்டத்தை அறிவித்ததாயினும் 1957 ஆம் ஆண்டு ரஷ்யாவே முதல் விண்கலத்தை அனுப்பியது. அமெரிக்கா 1958 ஆம் ஆண்டு தனது முதலாவது ''எக்ஸ்பிளோரர் — 1'' என்ற செய்மதியை விண்வெளிக்கு அனுப்பியது. தொடர்ந்து 1961 ஆம் ஆண்டு ''வொஸ்டொக்—1'' என்ற தனது

கலத்தில் விண்வெளிக்கு முதல் மனிதனான மேஜர் யூரி ககாரின் என்பவரை ரஷ்யா அனுப்பியது.

யூரி ககாரின் விண்வெளிப் பிரயாணம் செய்து 23 நாள்

பிறக்க வைத்துள்ளனர் என்ற செய்திகளும் வெளியாகி உள்ளன. இக் குழந்தைகள் மிக வீரியம் உள்ளவையாகவும், சாதாரண மனிதனைவிட அபாரமான சக்திகளைக்



விண்வெளியில் பறந்து கொண்டிருக்கும் கலத்தில் விண்வெளி வீராங்கனையும் வீரர்களும் கலந்துரையாடுகின்றனர்.

களின் பின் தனது 'ஃபிடம்-7' என்ற கலத்தில் அலன் ஷெப்பர்ட் என்பவரை அமெரிக்கா விண் வெளிக்கு அனுப்பியது.

இவ்வாறே 1959 இல் லூனா — 1 என்ற விண்கலத்தை ரஷ்யா சந்திரனுக்கு அனுப்ப, அமெரிக்கா றேன்ஜர் ரக விண்கலங்களை சந்திரனுக்கு அனுப்பியது. ரஷ்ய கலம் 'ஸொன்ட் — 5' மனிதனில்லாமல் தன்னியக்கத்தால் சந்திரனுக்குச் சென்று தரையிறங்கி ஆராய்ந்து சந்திரனின் மண்ணையும் எடுத்துக் கொண்டு மறுபடியும் பூமிக்குத் திரும்பி சாதனை படைத்தது.

1969 ஆம் ஆண்டு அமெரிக்க விண்வெளி வீரர்களான நீல் ஆம்ஸ்ட்ரோங், எட்வின் ஆல்ட்ரின் ஆகியோர் தமது பாதச் சுவடுகளை சந்திரனில் பதித்துச் சாதனை படைத்தனர்.

தொடர்ந்து விண்வெளியில் பல சாதனைகள் நிகழ்த்தப் பட்டு வருகின்றது. செவ்வாய், வெள்ளி, வியாழன், சனி மற்றும் கோள்கள் பற்றிய ஆய்வுகள் பெரும் வளர்ச்சியடைந்துள்ளன.

விண்வெளி ஆய்வுகளால் — மருத்துவம், பொருளாதாரம் கனிய வள ஆய்வு, பௌதீக— சூழல் மாற்றங்கள் எனப்பல துறைகளும் வளர்ந்துள்ளன.

ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், சீனா, இந்தியா ஆகிய நாடுகள் விண்வெளித்துறையில் பெரு வளர்ச்சி கண்டுள்ளன. இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் ராகேஷ்சர்மா ஆவார். இந்தியா பல்வேறு செய்மதிகளையும், றொக்கெட்டுக்களையும் உள் நாட்டிலேயே தயாரித்து விண்வெளிக்கு அனுப்பும் திறனையும் பெற்றுள்ளது.

மலிவாக விண்வெளியில் வைரத்தைத் தயாரிப்பதில் ஜப்பானியர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். 1995 ஆம் ஆண்டு 'ஹெச் — II' என்ற றொக்கெற் மூலம் ஒரு விண்வெளி ஓடத்தை ஜப்பான் ஏவியது. அதன் 21 மாத ஆய்வில் புவியீர்ப்பு அற்ற விண்வெளியில் செயற்கைமுறையில் வைரத்தைத் தயாரித்து ஜப்பானியர் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். இவ்வாறு தயாரிக்கப்பட்ட வைரம் மின்னணுத் துறையில் மிகவும் பயன்படுவதுடன் பொருள்களின் விலைகளும் குறைவடைய வழிசெய்யும்.

சென்றவருடம் அமெரிக்கர்களும் ரஷ்யர்களும் தனித் தனியாக மிக இரகசியமாக தமது விண்வெளி வீரர், வீராங்கனைகளைப் பயன்படுத்தி குழந்தைகளைப்

கொண்டவையாகவும், இருப்பதாகக் கூறப்படுகின்றது. இதுதவிர சாதாரணமாக மனித உடலில் காணப்படும் தாதுப்பொருள்கள் இக்குழந்தைகளின் உடலில் இல்லை என்றும் சொல்லப்பட்டது.

இத்தகைய ஆய்வுகளில் இருந்து மனிதனுக்குப் பயன்படும் பல வழிகள் இரகசியமாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவ்வாறாக விண்வெளி ஆய்வுத்துறையினூடாகப் பல பயன்களையும் வியக்கத்கு சாதனைகளையும் மனிதன் படைத்து வருகின்றான்.

நீண்டதூரம் விண்ணில் சென்று ஆய்வுகளை நடத்தும் விண் வெளிக்கலங்களுக்கு நிறைய எரிபொருள் தேவை. இது விஞ்ஞானிகளுக்குப் பெரும் சிரமத்தைக்கொடுத்து வந்துள்ளது. ஆனால் தற்போது இயற்கை, அதன் கோள்களுக்கு அளித்த ஈர்ப்புச் சக்தியைப் பெருமளவிற்குப் பயன்படுத்திக்கொள்ளும் திறமை மனிதன் பெற்றுவிட்டான். அமெரிக்க 'வெயேஜர்—2' விண்கலம் குறிப்

**-பா. தனபாலன்-**

பிட்ட சக்தி முதலுடன் ஏவப்பட்டு, ஏனைய கோள்களைத் தாண்டிச் செல்லும் போது அதி தீவிரமாகக் கோள்களிலுள்ள ஈர்ப்பு விசைத் திறனைச் சக்தியாக மாற்றிச் சேகரிக்கும் கருவிகள் மூலம் நிறைந்த சக்தியைப் பெற்றுத் தொடர்ந்து பறக்கின்றது.

இவ்வாறு கோள்களுக்கும் மற்றும் விண்வெளியிலுள்ள ஏனைய ஈர்ப்பு விசை கொண்டவைகளுக்கும் அருகில் சென்று அவற்றின் ஈர்ப்புச்சக்தியைப் பயன்படுத்தி— எரிபொருள் நிரப்புவது போல சக்தியைப் பெற்று —பறக்கும் இத்திறனிலிருந்து ஈர்ப்புச்சக்தியைப் பன்முகத் தேவைகளுக்கும் பயன்படுத்தும் புதியமுறைகள் அறிமுகமாகியுள்ளன.

1977 ஆம் ஆண்டு அமெரிக்க 'நாஸா' நிறுவனம் 'வெயேஜர்—2' விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பியது. இக்கலம் சூரிய குடும்ப கோளுக்கு அருகில் சென்று ஆராய்ந்து, சக்தியைப் பெற்று, பல தகவல்களையும் அனுப்பியுள்ளது. எல்லாக் கோள்கள் பற்றியும் விசேடமாக சனிக் கோளிலுள்ள உப கோளான ரைதனில் புவியில் உள்ளதுபோல நைதரசன் கூடுதலாகவுள்ளதையும் 1980 ஆம் ஆண்டு அறிவித்தது தமது மண்டலத்தின் இறுதிக் கோள்களான யூரேனஸ், நெப்டியூன் கோள்களுக்கும் அருகில்சென்றுசுகம் விசாரிப்பதுபோல ஆராய்ந்து அரியபல தகவல்களையும் படங்களையும் அனுப்பியுள்ளது.

இன்று வரை சூரிய குடும்பம் முழுவதையும் ஒரே பார்வையில் எக்கலமும் படம் எடுக்கவில்லை. இவ் வரிய சாதனையை 'வெயேஜர்—2' செய்யும் என அமெரிக்க விஞ்ஞானிகள் தவம் இருக்கிறார்கள் என்றே கூற வேண்டும். இவ்வளவு நீண்ட காலம் அவ் விண்கலம் பிரயாணம் செய்வதற்குத் தேவையான சக்தியை அந்தந்தக் கோள்களின் ஈர்ப்பு விசையைப் பயன்படுத்தியே பெற்றுள்ளது.

இவ்வாறு மனிதன் பயன்படுத்தும் சக்தித் திறன்கள் உயர உயர, அவனுடைய அறிவியல் ஆற்றல்களும் விரிவடைந்து கொண்டே செல்கின்றன ★

## ஹைக்கூ கவிதைகள்

காற்றிலே பறந்துபோனது
என்னவளின் தாவணி
அதுதான் வானவில்.

★ ★ ★

ஆயுள் முடிந்து போனோரின்
அந்தப்புரம் அது
மயானம்.

★ ★ ★

பூமியின் அழகைக் கண்டு,
வானம் எடுக்கும்
புகைப்படம்
மின்னல்.

★ ★ ★

மனிதர்களை விட்டில்
பூச்சிகளாக இழக்கும்
விளக்கு
பணம்.

★ ★ ★

சுவிச்சோ, கரண்டோ
இன்றி இயங்கும்
மினி கம்பியூட்டர்
மூளை.

★ ★ ★

பல்கலை மாணவர்
இடையே பரவும்
தொற்று நோய்
ராகிங்.

மு. திவாகரன்

## மலிந்த மனித உயிர்

மான் சுட்டால்
மரை சுட்டால்
மரம் பட்டால்
கேட்க இங்கு சட்டமுண்டு.
ஏன்!
மாடு அடித்தால் கூட
மறைவான இடத்தில்
சாகடிக்க வேண்டும்
என்கிறது சட்டம்!
கொக்குச் சுட்டால் குற்றம்;
கோயில் மயில் சுட்டால் குற்றம்.
திக் கெட்டும் திரிந்து
திசை எங்கும் பயிர் அழிக்கும்
ஆனை சுட்டால் குற்றம்.
மானுக்கு...
மாட்டுக்கு...
மரையோடு மயிலுக்கு...
ஆனைக்கு...
கொக்கும் கூட
அனுதாபப்படும்
இந் நாட்டில்
மனித உயிர் மட்டும்
மலிவா?
மிக மலிவு.

எஸ். ஐங்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கவிதையின் போக்கு

புதுக்கவிதை, அதன் பின்னணி, அது பிறந்து — தவழ்ந்து — வளர்ந்த முறை ஆகியவை பற்றிய சிறு குறிப்பு இது.

புதுக்கவிதை எனப்படும் அணிகலன் தமிழன்னைக்கு 20 ஆம் நூற்றாண்டில் அணிவிக்கப்பட்டது.

ஆங்கிலத்தில் இது New Poetry அல்லது Modern poetry என்று அழைக்கப்படுகின்றது. தமிழ் இலக்கியம் 19 ஆம் நூற்றாண்டுவரை செய்யுள் இலக்கியமாகவே அமைந்திருந்தது. அவை ஓசைக்கும் யாப்புக்கும் அமையவே வரையப்பட்டிருந்தன.

மேனாட்டு இலக்கியங்களை ஆராய்கின்ற போது பழைய இலக்கியமானது வளர்ந்துவரும் புதிய சமுதாயத்தின் சிந்தனைவேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் இருந்ததையும்—

இதன் காரணமாக புதுமை விரும்பிகள் புதிய சமுதாயத்திற்கேற்பவும் அதனுடைய வேகத்திற்கேற்பவும் செயலாற்றத்தக்க விதத்தில் வசன கவிதைகளைத் தோற்றுவித்தனர் என்பதையும்—உணர முடியும்.

இதே தேவை நம் தமிழ் இலக்கியத்திற்கும் இருந்த காரணத்தினால் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கவிதைகள் யாப்புக்குக் கட்டுப்படாமல், கவிதை உணர்வுகளுக்கு சுதந்திரம் கொடுத்து, படித்தவர் மட்டுமல்ல பாமரமக்களும் வாசிக்கக் கூடிய விதத்தில் மாற்றமடைந்தன. இது ஆரம்பத்தில் வசனகவிதை என்றே வழங்கப்பட்டது.

புதுக் கவிதை என்றால் என்ன என்பதை புதுக்கவிஞர்கள் புதுக் கவிதை மூலமாகவே வரைவிலக்கணப் படுத்தியுள்ளனர்.

இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனை தேர்தகள்
தனிமொழிச்சேனை
பண்டித பவனி
இவையெதுவும் இல்லாத
கருத்துக்கள் தம்மைத்தாமே
ஆளக் கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி முறையே
புதுக் கவிதை.

இன்னொரு கவிஞர் புதுக் கவிதையை விசித்திரமாக வரைவிலக்கணப்படுத்தியுள்ளார். அது வருமாறு:-

யாப்புடைத்த கவிதை
அணையுடைத்த காவிரி.
யாப்பற்ற கவிதை
இயற்கையெழில் இருக்க
செயற்கையணி எதற்கென்று
உடையுடன் ஒப்பனையும்
நீக்கிவிட்ட கன்னி.

இக் கவிதைப் போக்குக்கு இக் காலக் கவிஞர்கள் பலர் தமக்கேற்ப பல நாமங்களைச் சூட்டி மகிழ்கின்றனர். டாக்டர் சாலை இளந்திரையன் இதற்கு 'உரைவீச்சு' என்று பெயரிடுகின்றார். மறைந்த கவிஞர் கண்ணதாசன் 'சொற்கோலம்' என்று நாமமிடலாம் எனக் கூறியுள்ளார். இன்னும் பலர் 'உரைப்பா', 'விடுநிலைப்பா', 'பேச்சு நிலைப்பா', 'குறும்பா' என்றெல்லாம் நாமம் சூட்டியுள்ளனர்.

அடுத்து புதுக்கவிதையின் வரலாற்றைப் பார்க்கின்ற போது இது மேனாட்டிலே கருவுற்றதாகவரலாறு கூறுகின்றது. அமெரிக்க கவிஞர் வால்ட் விற்மென் (Walt Whitmam) 'புல்லின் இலைகள்' என்ற கவிதைத் தொகுப்பை 1855 இல் வெளியிட்டார். இதில் ஆங்கிலக் கவிதை மரபு பின்பற்றப்படவில்லை. இவரைத் தொடர்ந்து ரிம்பாடு, ஜுலா போர்க், வியக் கிரிப்பின், எஸ்ரா பவுண்ட், எலியட் போன்றோர்களும் புதுக்கவிதை கால் கோள் கொள்வதற்கு காலாக இருந்தவர்கள்.

நம் தமிழ் மொழியிலும் புதுக் கவிதையின் வரலாற்றைப் பார்க்கின்ற போது. 1930—45 களில் மணிக்கொடி குழுவினர் பாரதியாரின் வானப்பகுதிளையும் மேனாட்டுக் கவிஞர்களான எஸ்ராபவுண்ட், எலியட், வால்ட், விற்மன் ஆகியோர் எழுதிய யாப்புக்கு ஒவ்வாத கவிதைகள் சிலவற்றையும் ஆதாரமாகக் கொண்டு பரீட்சார்த்தமாக சில

> புதுக் கவிதையின் தன்மை, வடிவம் ஆகியவை குறித்தும் அதன் தற்காலப் போக்குக்குறித்தும் மரபுக் கவிதை பற்றியும் ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாற்றங்கள் சில வாரங்களாக சஞ்சீவியில் வெளிவருவது தெரிந்ததே.
>
> அந்த வரிசையில் டாக்டர் ந. சுப்புரெட்டியார் எழுதிய 'புதுக்கவிதை நோக்கும் போக்கும்' என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு புதுக் கவிதையின் சரிதத்தை சுருக்கமாகத் தருகின்றார் 'திராட்சையூர் றஜன்'.

கவிதைகளை எழுதி வெளியிட்டனர். ஆனால் இந்தக்காலத்தில் செய்யுள் அமைப்பு முறை முற்றாகக் கைவிடப்பட்டது என்பது கேள்விக்குரியதே.

புதுக்கவிதை வரலாற்றின் இரண்டாம் நிலையை ஆய்கின்ற போது (1950—70) - இந்தக் காலகட்டம் புதுக்கவிதையில் ஓர் இருண்ட யுகமாகவே காணப்படுகின்றது. காரணம் ஆங்கிலச் சொற்களின் மிதமிஞ்சிய செல்வாக்கு கவிதைகளில் காணப்பட்டதாகும். இக்காலக் கவிஞர்களது கவிதைப்பொருளாக மனமுறிவு, பாலியல் தடுமாற்றம், நோய்மை போன்றன அமைந்திருந்தன. பாலியல் மோகமே இங்கு முதன்மை பெற்றிருந்தது. இவர்களது கவிதையில் எந்த விதமான அமைதிகளுக்கும் இடமிருக்கவில்லை. (யாப்பமைதி, சொல்லமைதி, பொருளமைதி,) எனவே இந்தக் கவிதைகள் உயிரற்ற பிண்டங்களாக இருந்தன எனலாம். ஆனால் இக் காலத்தின் இறுதிப்பகுதியில் அதாவது 1960களில் அத்துறை புதுமெருகூட்டப்பட்டு ஒளியேற்றப்பட்டது.

புதுக்கவிதை வரலாற்றின் மூன்றாம் நிலைக் காலகட்டம் 1970க்கு பின்பட்டது. இக்காலத்தின் . இக் கவிதைகளின் மையப்பொருளாக அனேகமாக பொதுவுடைமைக் கொள்கைகள் அமைந்திருந்தன. 1970 இல் 'எதையும் செய்யுங்கள்; ஆனால் இலக்கியமாகச் செய்யுங்கள்' என்ற கொள்கையோடு வெளிவந்த 'கசடதபற' என்னும் இலக்கியமலர் புதுக் கவிதையை ஓரளவிற்கு வளர்த்துவிட்டது எனலாம். இதனுடன் சேர்ந்து வெளிவந்த இலக்கிய இதழ்களும், இலவச வெளியீடுகளும் புதுக் கவிதை பயணிப்பதற்கு துணை புரிந்தன. 1971இல் வெளிவந்த 'வானம்பாடி'' புதுக் கவிதை வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரிந்தது. இவர்கள் மானுடம்பாடும் வானம்பாடிகள் என வர்ணிக்கப்பட்டனர். இவர்கள் சமுதாயத்தின் அவலங்களை, அநீதிகளை கண்டு அவற்றிற்காக குரல் கொடுப்பதற்காக தங்கள் பேனா முனைகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இதைத்தொடர்ந்து ஏராளமான இலக்கிய இதழ்களும் புதுக் கவிதை பற்றிய திறனாய்வுகளும் வெளிவந்து கவிதையை விரிவுறச் செய்தன.

வரலாற்றின் இறுதிக்கட்டமான இன்றைய நிலையைப் பார்க்கின்ற போது புதுக்கவிதைக்கு பெருமளவில் வரவேற்பு இருக்கின்ற போதும் சிலரது கவிதைகள் இன்னும் கேள்விக்குறியாகவே இருந்துவருகின்றன. ★

## இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ அதிர்ஷ்ட திகதி:- 19, 20, 21.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், வெள்ளி.

**துலாம்:** உங்களுக்கு சொல்வாக்கால்—செல்வாக்கு அதிகரிக்கும். உங்கள் சாதுரியத்தால் நாலுகாசு தேட முடியும். காற்றுள்ள பொழுதே தூற்றிக்கொள்ளவும். உலக பந்தத்தில் அழுந்தினால் பொருள் வேணும் காணே. பொருள் இல்லாதாருக்கு இவ்வுலகில் எதைச் சாதிக்க முடியும்? தொழில் ஸ்தானத்தில் நாலு மனுஷர்கள் உதவிகள் செய்வார்கள். புதியதிட்டங்கள் போட்டு முன்னேற முயலுங்கள். நீங்கள் ஓடியாடித் திரிவதைப் பார்த்துச் சிலர் மனம் புழுங்கத்தான் செய்வார்கள். அதற்காக அதிகம் சிந்தியாதீர்கள். நியாயமற்ற மனப் புழுக்கத்தால் எதையும் செய்துவிட முடியாது. குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். சமாளித்து விடுங்கள்.

★ அதிர்ஷ்ட திகதி:- 15, 19, 21.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி, புதன், வெள்ளி.

**விருச்சிகம்:** என்னதேன் கொட்டியமாதிரி? சடுபுடு, சடுபுடு என்று ஓயாது செயற்படுவீர்களாமே? ஆவேசப் படாமல் காரியமாற்ற முயலுங்கள். கேட்டைக்காரருக்கு காயங்கள் அல்லது வீண் பிரச்சினைகள் வருமாம். கொஞ்சம் அவதானமாக இருங்கள். பிரேக் இல்லாத சைக்கிளில் ஓடுவது மாதிரி செயற்படாமல் கொஞ்சம் கவனமாக இருக்கவும். அயலவர்கள் புகைவார்கள் எனக்காணப்படுவதனால் அவதானமாக இருக்கவும். கண்ணில் காணாமலும், மற்றவர்களின் காதுகளில் கேட்காமலும் உங்கள் செயற்பாடுகளைச் செய்யுங்கள். அதனால் பல விஷயங்களிலிருந்து தப்பிக்கொள்ளுவீர்கள். ஏன் வீணாக மற்றவர்களை அதிகம்யோசிக்கச் செய்கிறீர்கள்? இடைக்கிடை கை, கால், வயிறு நோ அல்லது தாக்கம் உளைவுகள் கொடுக்கும். கேட்டைக்காரர் அவதானமாக இருக்கவேண்டும்.

★ அதிர்ஷ்டத் திகதி:- 19, 21

★ அதிர்ஷ்ட நாள்:-புதன், வெள்ளி

**தனுசு:** உங்களைத் தேடித்தேடி ஓடிவந்து உதவி கேட்டவர்களெல்லாம் நீங்கள் கஷ்டப்படும் பொழுது திரும்பிப் பார்க்கவும் மாட்டார்கள் உற்றவரானாலும் பெற்றவரானாலும் இப்படித்தான் நடந்து வருகிறார்கள். வந்தஎதிர்ப்பாலரோடு இணங்கி நடக்கப்பாருங்கள். அதனால் நீங்கள் முன்னுக்கு வருவீர்கள். அல்லது உங்கள் பிடிவாதத்தால் நஷ்டமும் கஷ்டமும்தான் மிஞ்சும் தொழில் ஸ்தானத்தில் பெரிதாக எதையும் சாதிக்க மாட்டீர்கள். அலைச்சல், கண்நோ, காலில் வலி தேடி ஓடி வரும். நீங்கள் சென்ற பாதையிலே நாடித் தேடி வந்தவர்கள் வீண்பழி சுமத்தி உங்களை குற்றவாளியாக்கப் பார்ப்பார்கள். நண்பர்களை இக்காலத்தில் நம்பி நடவாமல் இருக்கவும்.

★ அதிர்ஷ்டதிகதி:-17, 19, 21

★ அதிர்ஷ்ட நாள்:-திங்கள் (மத்தியானம்), புதன், வெள்ளி

**மகரம்:** உலகில் எல்லாருக்கும் உதவி செய்வதில் திருப்தி காணும் உங்களுக்கு உங்களால் உதவி பெற்றவர்களே உதவுவார்கள் என்று சொல்லமுடியாது. இருப்பினும் எதிர்ப்பாலாராலோ அல்லது அவர்களின் உறவினர்களாலோ உதவிகள் சில சந்தர்ப்பங்களில் கிடைக்கலாம். தொழில் ஸ்தானத்தில் முயற்சிக்கு ஏற்ப நற்பலன்கள் கொடுக்கும். பிரயாணங்களையோ, இடமாற்றங்களையோ விலக்கி நடவுங்கள். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். ஆயினும் சிலர் உபத்திரவங்களும் கொடுப்பார்கள். கை கால் தாக்கங்கள் வர இடம் உண்டு. அவதானமாக இருக்கவும். திடீரென்று வரவு சிலருக்கு தடுமாற்றங்களையும், குடும்பத்தில் மகிழ்ச்சிகளையும் கொடுக்கும். திருவோணக்காரர் அவதானமாக இருக்கவும்.

★அதிர்ஷ்ட திகதி:- 15, 18.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி, வியாழன்.

**கும்பம்:** உங்களுக்கு ஏழரைக் கடைக் கூறுதான் எல்லோரது உதவிகளும் கிடைக்கும். ஆனால் மனத்திருப்தி இராது. தொழில் ஸ்தானத்தில் எதிர்பாராத திசைதிருப்பங்கள், புதியவர்களின் நட்புக்கள், கிடைக்க இடம் உண்டு எல்லோரும் உங்களை மதிப்பார்கள். ஆயினும் சிலர் தூக்கி எறிவார்கள் பின்பு உங்களிடம் உதவிக்கு வருவார்கள். நீங்கள் பொருளில் அவதானமாக இருக்கவும். அல்லது ஏமாற்றம் தான். குடும்பத்தினருக்காக ஓடியாடித்திரிந்தாலும் அவர்கள் தாம் ஓடியாடித் திரிவதாகச் சொல்லுவார்கள். இடமாற்றங்களை தவிர்க்கவும். கண், கைகால் நோ சர்வசாதாரணம். தகுந்த வைத்தியம் செய்துவரச் சுகம்வரும்.

★ அதிர்ஷ்ட திகதி:-16, 18

★ அதிர்ஷ்ட நாள்:- சனி, ஞாயிறு, வியாழன்.

**மீனம்:** என்ன இருந்தாலும் ஏழரைச் சனியனின் தாக்கம் இருக்கின்றது. இவ்வுலகில் எதிர்த்து நின்று போராடவும் தயங்கக்கூடாது. தொழில் ஸ்தானத்தில் பணவரவு, அளவுக்கு மீறிய செலவுகள் இருக்கும். விதிவசப்பட்ட பலன்கள் இருக்கும். பொருள் கொடுக்கல் வாங்கலில் அவதானமாகஇருக்கவும். அலைச்சல், இடமாற்றங்கள், உடல் உபாதைகள் அடிக்கடி கொடுத்தாலும் நிதானமான செயற்பாடுகளால் நன்மைகள் ஏற்படும். குலதெய்வ வழிபாடும்—அம்மன் வழிபாடும் சனீஸ்வரப்பிரீதியும் முக்கியமாகும். காலமறிந்து செயற்படுவதில் கண்ணாக இருக்கவும். சொந்த பந்தக்காரர், அயலவர்கள், நண்பர்கள் என்றுள்ளவர்களால் அதிக செலவுகள் வந்தபடி இருக்கும். நிதானமாகச் செயற்படவும்.

★ அதிர்ஷ்ட திகதி:- 16, 19

★ அதிர்ஷ்ட நாள்:-ஞாயிறு, வியாழன்.

## நீரின்றி ஓரணு...

(V பக்கத் தொடர்ச்சி)

வீட்டிலும் இலகுவாகக் கிடைக்கக்கூடிய சீனி அல்லது குளுக்கோசு நாலு தேக்கரண்டி ½ தேக்கரண்டி கறியுப்பு என்பவற்றை கொதித்தாறிய முக்கால் போத்தல் (1 பைந்து) நீரில் கரைப்பதால் ஜீவனிக்கு ஏறத்தாழ சமமான பானத்தை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இளநீர் போன்ற திரவப் பதார்த்தங்களும் நீரிழப்பை ஈடு செய்ய உதவும்.

குடிக்கமுடியாத நிலையில் அல்லது, மிகவும் சோர்ந்து போன நிலையை நோயாளி அடைந்து விட்டால் உடனடியாக மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல வேண்டும். அங்கு நாளத்தினூடாக நேரடியாக நீர், குளுக்கோசு உப்புக்களை இரத்தத்தில் ஏற்றுவதன் மூலம் நோயாளி காப்பாற்றப்படுவார்.

வயிற்றோட்டத்தினால் மிக விரைவில் நீரை இழந்து இறப்பைத் தழுவுவது குழந்தைகளே, எனவே தாய்மார் உடனடியாகக் குழந்தைகளுக்கு போதியளவு பானங்களைக் கொடுப்பதும், வயிற்றோட்டம் மிகவும் தீவிரமாயின் வைத்தியசாலையில் உடன் அனுமதிப்பதும் குழந்தையின் உயிரைக் காப்பாற்றும். ★

## 'சிறுவர் சுடர்' விடைகள்

VI ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் உள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### கண்டுபிடியுங்கள்

I.
அ) மரம்
ஆ) மகரம்
இ) ரதம்
ஈ) மதம்
உ) மகம்
ஊ) ரகம்
எ) தரம்
ஏ) தகரம்
ஐ) கரம்
ஒ) கமம்
ஓ) மகதம்
ஔ) ரம்

II.
அ) மகா
ஆ) பாரதம்
இ) காரம்
ஈ) பாதம்
உ) ரதம்
ஊ) மதம்
எ) பாரம்
ஏ) காதம்
ஐ) காமம்

III.
அ) துவி
ஆ) கன்
இ) கின்
ஈ) கவி
உ) கரடி
ஊ) சரண்
எ) கண்டி
ஏ) வண்டி
ஐ) துண்டி
ஒ) கரண்டி
ஓ) கவண்
ஔ) ரவி

### 'முயன்று பாருங்கள்'

அ) பூங்காவனம்
ஆ) அத்திவாரம்
இ) அந்தமான்தீவு
ஈ) கடிகாரம்

### திக்குமுக்காட சில கேள்விகள்

அ) மூச்சு.
ஆ) நனைவான்.
இ) நொண்டி மிருகம்.
ஈ) ஓடாத மணிக்கூடு
உ) 1996 டிசம்பர் 31 ஆம் திகதி பின்னிரவில் பார்க்கத் தொடங்கி 1997 ஜனவரி முதலாம் திகதி அதிகாலை வரை படம் பார்த்தால் கண் கெட்டுப் போய்விடுமா?
ஊ) வயது.
எ) எல்லா மாதங்களிலும் வரும்.
ஏ) பஸ்ஸை 'பின்'னினால் தள்ளினால் 'பின்' வளையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

# ஆகாயத்தில் ஓர் அடுக்குமாடி!

முன்பு ஒரு காலத்தில் ஆடம்பரமாகக் கருதப்பட்ட விமானப்பயணம் நவீன உலகில் அத்தியாவசியமான ஒன்றாகி விட்டது.

அதிகரித்துவரும் பயணிகளின் கூட்டத்தைச் சமாளிக்க கூடுதல் சேவைகளை நடத்த வேண்டிய நிலை விமான சேவை நிறுவனங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அடுத்துவரும் 20 ஆண்டுகளில் விமானப் பயணிகளின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந் நிலையில் விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் அதிக அளவில் பயணிகளை ஏற்றக் கூடிய விமானங்களைத் தயாரிப்பதில் முன்னணி விமான நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

''ஏயர் பஸ்'' நிறுவனம் இந்த முயற்சியில் வெற்றி கண்டுள்ளது.

இந்தியாவின் பல மாநிலங்களில் புழக்கத்தில் உள்ள ''டபிள் டெக்கர்'' எனப்படும் இரண்டு தட்டு பஸ் வண்டிகளைப் போன்று ''டபிள் டெக்கர்'' விமானங்களை — இரண்டு அடுக்கு விமானங்களை — இந்நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

இந்த முயற்சியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 19 விமான நிறுவனங்கள் ''ஏயர் பஸ்'' நிறுவனத்துடன் இணைந்து செயற்படவுள்ளன.

இரண்டு அடுக்குகளைக் கொண்ட இந்த விமானத்துக்கு ''ஏ 3, எக்ஸ் எக்ஸ்'' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இரண்டு தளங்களிலும் சேர்த்து மொத்தம் 555 பேர் இவற்றில் பயணம் செய்ய முடியும். பயணிகளின் நலன் கருதிப் பல நவீன வசதிகள் இதில் காணப்படும்.

கீழ் தளத்தில் இருந்து மேல் தளத்துக்குச் செல்லவும், மேல் தளத்தில் இருந்து கீழ் தளத்துக்குச் செல்லவும் தலா இரண்டு படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டிருக்கும்.

இந்த ராட்சத இயந்திரப் பறவையில் பயணம் செய்ய இன்னும் ஆறு ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டும். ★



''டபிள் டெக்கர்'' விமானம் A3XX

# விண்ணில் முதல் இந்தியப் பெண்

விண்வெளியில் பயணம் செய்யும் முதல் இந்தியப் பெண்ணான டாக்டர் கல்பனா செளலாவையும், மற்றும் அவருடன் கூடச் செல்லும் டகாய் டோய் (ஜப்பான்), ஜெவின் கிரகில் (அமெரிக்கா) ஆகியோரையுமே இப் படத்தில் காண்கிறீர்கள். கல்பனா செளலாவும் மற்றும் ஐந்து விண்வெளி வீரர்களும் இவ் வாரம் அமெரிக்காவின் கொலம்பியா விண்வெளி ஓடத்தில் விண்ணுக்குச் செல்கின்றனர்.

அவர்கள் பயிற்சிக்குப் புறப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட படம் இது.

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் உள்ள கர்னால் என்ற இடத்தில் பிறந்தவர் கல்பனா.

இந்தியாவில் விண்வெளிப் பொறியியல்துறையில் பட்டம் பெற்ற பின் கல்பனா அமெரிக்கா சென்று விண்வெளித்துறையில் முதுநிலைப் பட்டம்பெற்றார்.



கல்பனா செளலா சிறுவயதிலிருந்தே வானில் பறக்கும் ஆர்வம் மிக்கவர்; விமானிகளுக்குப் பயிற்சி அளிப்பதில் சான்றிதழ் பெற்றவர்; விண்ணில் விமான வித்தைகளைச் செய்து காட்டுவது இவருக்கு மிகவும் விருப்பமான விடயம்.

## கொடிய சளிக் காய்ச்சல் உலகில் மீண்டும் பரவுமா?

# 79 ஆண்டுகளின் முன் புதைக்கப்பட்ட ஏழு உடல்களில் பரிசோதனை

பூமியின் வடதுருவப் பகுதியான ஆட்டிக் பிரதேசத்தில் பனிப்பாறைகளுக்குக் கீழ் 79 ஆண்டுகளுக்கு முன் புதைக்கப்பட்ட ஏழு மனிதர்களின் உடல்கள் அண்மையில் தோண்டி எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆட்டிக் பிரதேசத்தில் உள்ள ஸ்பிட்சி பேர்க் என்ற இடத்தில் கனடா, அமெரிக்கா, நோர்வே மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு ஒன்றே இந்த மனித உடல்களைத் தோண்டி எடுத்தது.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும், மத்திய பகுதியிலும் லட்சக்கணக்கானோரின் உயிர்களைப் பலிகொண்ட இன்புளுவென்ஸா என்னும் சளிக் காய்ச்சல் நோய் மீண்டும் பூமியைத் தாக்குமா?

இது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு வரும் விஞ்ஞானிகளே இந்த மனித உடல்களை மீட்டு பரிசோதனை மேற்கொண்டுள்ளனர்.

19 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட நோர்வே நாட்டைச் சேர்ந்த இந்த ஏழு பேரும் இன்புளுவென்ஸா நோயினால் 79 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தவர்களாவர்.

கடந்த 400 ஆண்டுகாலப் பகுதியில் பல தடவைகள் இன்புளுவென்ஸா நோய் பரவி அனர்த்தங்களை விளைவித்துள்ளது.

''புளு'' என அழைக்கப்படும் இந்நோய் கடைசியாக 1968—69 ஆம் ஆண்டுகளில் ஹொங்கொங்கில் பரவியபோது சுமார் 35 ஆயிரம் பேர் பலியாகினர். 1918 ஆம் ஆண்டு பரவிய ''புளு'' நோய் படு பயங்கரமானது. அச்சமயம் அதற்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 4 கோடிக்கு மேல்.

முதலாம் உலகப் போரில் இறந்தவர்களின் எண்ணிக்கையை விட இந்நோயினால் இறந்தோரின் எண்ணிக்கை அதிகம். அமெரிக்காவில் 9 லட்சத்து 75 ஆயிரம் பேரும், பிரிட்டனில் 2 லட்சம் பேரும் இந்நோயினால் மாண்டனர்.

உலகில் இந்நோயினால் இறந்தோரில் அரைவாசிப் பேர் இந்தியர்கள் ஆவார்.

உலகை உலுக்கிய இந்நோய் ஏற்படக் காரணம் என்ன என்பதை ஆராயவே 1918 இல் புதைக்கப்பட்ட இந்த உடல்களில் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ★

# யுத்தம் முடிந்த....

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடிகளைப் புதைத்தன. யுத்தம் முடிந்து இன்று இன்னும் அகற்றப்படாமல் இருக்கும் கண்ணிவெடிகளின் எண்ணிக்கை 1 கோடியே 50 லட்சம். இந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட அந்த அந்த நாட்டின் மொத்த ஜனத்தொகைக்குச் சமம்.

உள்நாட்டு யுத்த மேகங்கள் இன்றும் கூட முற்றிலும் விலகாத கம்போடியாவில் பசிய வயல் பரப்பெங்கும் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளின் எண்ணிக்கை ஒரு கோடி. இதன் விளைவு கோடிக்கணக்கான ஏக்கர் வயல்களில் சாகுபடி நடக்கவில்லை. ஆசியாவின் அரிசி உற்பத்திக் கேந்திரங்களில் முக்கிய இடம் வகித்து வந்த அந்த நாட்டில் இன்று உள்நாட்டிலேயே சோற்றுக்குப் பிரச்சினை.

கம்போடியா போலவே கண்ணிவெடி பயங்கரத்துக்கு உள்ளாகியுள்ள வியட்நாம், ஆபிரிக்க நாடான மொஸாம்பிக் ஆகிய இடங்களிலும் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிர் செய்யப்படாமல் தரிசாக உள்ளன.

இன்றும் உள்நாட்டுப்போர் நடந்து வரும் இடம் ஆப்கானிஸ்தானம். 14 ஆண்டுகளாக நடந்து வரும் இப்போரில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளின் எண்ணிக்கை 6 கோடி. காபூல் உள்ளிட்ட மக்கள் புழக்கம் நிறைந்த இடத்திலேயே லட்சக்கணக்கில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. ஐ நா. சபையின் ஆதரவில் இப்பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்ற நடந்த முயற்சி ஓரளவு பயன் தந்துள்ளது. ஆனால் இன்னும் கோடிக்கணக்கான சதுரமைல்களில் பரவிக் கிடக்கும் கண்ணி வெடிகள் அகற்றப்படவில்லை என்பதுதான் பயமுறுத்தும் யதார்த்தம்.

கண்ணி வெடிகளின் உற்பத்திச் செலவு மிக மிகக் குறைவு. ஒரு கிலோ எடையுள்ள ஒரு கண்ணி வெடியின் சந்தை விலை ஒரு டொலர் தான். ஆனால் இதை மண்ணில் புதைத்த பின் கண்டு பிடித்து அகற்ற செலவு ஆயிரம் டொலர்கள் பிடிக்கிறது. ஆகவே யுத்தத்தாலோ, உள்நாட்டு யுத்தத்தாலோ சீரழிந்துள்ள நாடுகளில் கண்ணி வெடிகளை அகற்றும் பணி நடக்கும் என்பதை எதிர் பார்க்க முடியாது.

யுத்தகாலத்தில் வாழ்ந்தது போலவே தங்கள் வாழ்நாள் முழுவதும் மரணத்தை எதிர்பார்த்தபடி வாழ அந்த நாட்டு மக்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது.

இன்று உலகில் புதைக்கப்பட்டுள்ள அனைத்துக் கண்ணி வெடிகளையும் அகற்ற வேண்டுமானால் அதற்கு மிக மிகக் குறைந்த பட்சமாக 8500 கோடி டொலர் தேவைப்படுமென்று ஐ. நா. கணக்கீடு ஒன்று தெரிவிக்கிறது. கண்ணி வெடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மறுவாழ்வுக்கான தொகை இதில் அடங்காது. அந்தக் கணக்கு தனி.

ஒரு புறத்தில் விஞ்ஞான, தொழில் நுட்பத் துணையுடன் மண்ணில் சொர்க்கத்தைப் படைக்க முயலும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள். மறுபுறம் வறுமை, பஞ்சம், நோய்கள் இவற்றுடன் கண்ணிவெடி விதைத்த நரகத்தில் வாழும் ஏழை நாடுகள். கண்ணிவெடிகளுக்கு எதிராக இந்த நாடுகள் எழுப்பும் அபயக்குரல் பணக்கார நாடுகளின் மக்களது ஆன்மாவைத் தொடுமா? காலம் தான் இதற்குப்பதில் சொல்ல வேண்டும். ★

# மக்களின் நலன்நாடி....

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

புச் செய்யப்பட்ட மகிழ், வில்வம், பன்னீர் உட்பட பல்வேறு வகையான பூங்கன்றுகளும் ஆயிரம் ஆயிரமாகும்.

## ஐ. நா. சங்க கௌரவம்

ஒரு சமயம் கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் சரவணமுத்து குகதாசனின் வீட்டுத் தோட்டத்தைப் பார்த்த போது அங்கே பூத்துக் காய்த்துக் குலுங்கிய துவரைச் செடிகள் கனகராசா அவர்களின் அன்பளிப்பு என்பதை என்னால் உணர முடிந்தது.

ஐக்கிய நாடுகள் சங்க இலங்கைக் கிளையால் இவருக்களிக்கப்பட்ட ''பசுமை நண்பன்'' என்ற கௌரவ விருது உண்மையில் கௌரவமான ஒருவரையே சார்ந்து விட்டது. உண்மையில் பசுமைப் புரட்சியிலும் சூழல் பாதுகாப்பிலும் அவர் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த அளவில் ஒரு நிபுணர் என்பதை அவரது உரையாடலின் போது தெரிய வந்தது.

வலது குறைந்தவர்களுக்குத் தொழிலில் வாய்ப்பளிப்பதும் ஓவியர்கள், கலைஞர்களைத் தட்டிக்கொடுப்பதும் கனகராசா அவர்களின் மற்றொரு நற்பண்பென்பதை அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் அறிவர். 1995 ஆம் ஆண்டில் தமிழ்த்தாய் மன்றம் இவருக்கு வழங்கிய விருது 'தேசாபிமானி'' என்பதாகும். அதற்கு முன்னதாக தமிழ் நாடு கிராமராஜ்யம் வெளியீட்டாளர் இவருக்கு ''காந்தீயச் செம்மல்'' என்ற விருதை வழங்கி மகிழ்வெய்தினர்.

கனகராசாவின் பன்முகப்பட்ட சமய, சமூக, சூழல் பேணும் சேவைகளை மெச்சி, மிகச் சிறப்பாக யோகக்கலையில் அவருக்குள்ள ஈடுபாட்டையும் பயிற்சியையும் பாராட்டி அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகம் (Inter American University of Humanistic Studies) 1990 ஆம் ஆண்டில் கலாநிதிப் பட்டம் வழங்கிப் பாராட்டியது.

இவற்றை அவர் கூறிய போது அதனைக் கேட்ட எனக்கும் பெருமகிழ்ச்சியாக இருந்தது.

## மறந்திலர்

தனது பன்னிரண்டாவது வயதில் பாடசாலைப் படிப்பைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்ட கனகராசாவுக்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல பரிச்சயமும், தேவார திருவாசகங்களில் போதிய அறிவும், திருக்குறளில் மிகுந்த ஈடுபாடும், புராண இதிகாசங்களில் தெளிந்த சிந்தனையும், நாட்டுப்பற்றும், சூழல் பாதுகாப்பில் அக்கறையும், பசுமைப் புரட்சியின் பித்தும், தொழில் துறையில் மேன்மையும் வளர்ச்சியும் எப்படி வந்தமைந்தன என்ற கேள்வி எமது அடுத்த சந்ததியினரின் வளமான ஒளிமயமான வாழ்விற்கு விடையளிக்கும் என்பதே எனது முடிவாகும்,

கடந்த நான்கு தசாப்தங்களாக கனகராசா அவர்களை அவதானித்து வரும் எனக்கு அவர் பனைகளின் அரசனாகவே காட்சி அளிக்கிறார். உழைப்பால் உயர்ந்த கனகராசா இன்றும் சவர்க்கார முஹம்மதுவை மறக்கவில்லை. அவர் அவரைப் பற்றிப் பெருமையாகவே கூறி சந்திப்பை நிறைவு செய்தார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளைகுடாவில் மீண்டும் நெருக்கடி ஏற்படுத்தும்

# ஐ. நா. ஆயுத பரிசோதனைக்குழு விவகாரம்

## அமெரிக்க சவாலை எதிர்கொள்ள தயார் என்கிறார் ஈராக் ஜனாதிபதி

ஈராக்கின் யுத்த தள பாடங்கள் வைக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பார்வையிடுவ தற்கு ஐ. நா. ஆயுதப் பரி சோதனைக் குழுவுக்கு ஈராக் விதித்த தடை காரணமாக வளைகுடாவில் மீண்டும் நெருக்கடி உருவாகி இருக்கி றது.

ஈராக் மீது அமெரிக்கா எந்த நேரமும் விமானத் தாக்குதல் நடத்தலாம் என்ற ஊகங்களுக்கு மத்தியில் எந்த ஒரு தாக்குதலையும் எதிர் கொள்ளத் தயாராக இருப்ப தாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேய்ன் அறிவித் துள்ளார்.

### ஆயுத பரிசோதனை குழுவில் அமெரிக்கர்

தற்பொழுது தோன்றி உள்ள நெருக்கடிக்கான பிர தான காரணம் ஐ. நா. ஆயுதப் பரிசோதனைக் குழு வில் அமெரிக்கர்களும் இடம் பெற்றிருப்பதே ஆகும்.

ஆயுதப் பரிசோதனைக் குழுவில் அமெரிக்கர்கள் இடம்பெறக்கூடாது என்று ஈராக் வலியுறுத்தி வருகி றது.

ஆயுத பரிசோதனைக் குழு வினர் என்ற பெயரில் அமெ ரிக்கா, ஈராக்குக்குள் தனது உளவாளிகளை அனுப்புவ தாக ஈராக் குற்றஞ் சாட்டி வருகிறது.

UNSCOM என்று அழைக்கப்படும் "ஈராக்கில் ஆயுதங்களைக் களைவதற் காக ஏற்படுத்தப்பட்ட ஐ. நா. விசேட கமிஷன்" இந்த ஆயுதப் பரிசோதனைக் குழுவை ஈராக்கிற்கு அனுப்பி இருந்தது.

இந்தக் கமிஷனின் தலை வர் ரிச்சர்ட் பட்லர். ஆஸ்தி ரேலியாவைச் சேர்ந்தவர்.

1991 வளைகுடா யுத்தம் முடிவில் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தப் பிர காரம் இக் கமிஷன் நியமிக் கப்பட்டது.

இந்த கமிஷன் அனுப்பிய எண்மர் அடங்கிய ஆயுதப் பரிசோதனைக் குழுவில் இரு அமெரிக்கர்கள் இடம் பெற் றுள்ளனர். இந்த இரு அமெ ரிக்கர்களையும் தவிர்த்து விட்டு ஏனையவர்களை ஆயு தப் பரிசோதனையில் ஈடு படுத்த UNSCOM மறுத்து வருகிறது.

1991 ஆம் ஆண்டிலும் 1992 முற்பகுதியிலும் ஆயு தக் களைவு பூர்த்தி அடைந்து விட்டது என்றும்—

போக்குவரத்துத் தடையை அமுல் செய்யும் தீர்மானம் ஐ. நா. பாதுகாப்புச் சபை யினால் இரு வாரங்களுக்கு முன்னர் நிறைவேற்றப் பட் டது.

பாதுகாப்புச் சபையில் வீட்டோ உரிமை உள்ள ஐந்து நாடுகளில் அமெரிக் காவும் பிரிட்டனும் இத் தீர்மானத்தை ஆதரித்தன.

சீனா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் வாக்கெடுப் பில் கலந்து கொள்ளவில்லை. இந்த ஐந்து நாடுகளில் எந்த

ஈராக் தனது உணவு மற் றும் மருந்துத் தேவைகளுக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு 10 லட்சம் பீப்பாய் எண் ணெயை விற்பனை செய்ய முடியும் என்று ஐ. நா. ஏற் கனவே கட்டுப்பாடு விதித் துள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச்சபை கடைசியாக விதித்துள்ள போக்குவரத்துத் தடையும் அமுலுக்கு வந்தால் சிலஈராக் அதிகாரிகள்வெளிநாடுகளுக்கு செல்வது கட்டுப்படுத்தப் படும்.

யேறுவதற்கு பாதுகாப்புச் சபை காலக்கெடுவும் விதித் தது. இந்தக் காலக்கெடு முடி வடைந்த பின்னர் 1991 ஜன வரி 16 ஆம் திகதி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தலைமையில் கூட் டுப் படைகள் ஈராக்குக்கு எதிராக இராணுவ நடவடிக் கையை ஆரம்பித்தன. பெப்ர வரி 23 ஆம் திகதி இந்த யுத் தம் முடிவடைந்தது. இந்த யுத்தத்தின்போது 85 ஆயிரம் ஈராக்கிய படையினர் கொல் லப்பட்டனர். 1 லட்சத்து 75 ஆயிரம் படையினர் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

### யுத்தநிறுத்த ஒப்பந்தம்

1990 ஆம் ஆண்டு விதிக் கப்பட்ட தடைகள் நீக்கப் படுவதற்கு ஐ. நா. விதித்த நிபந்தனைகளை ஈராக் நிறை வேற்ற வேண்டும் என்று 1991 பெப்ரவரி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஈராக் கோரப்பட்டிருந்தது.

பெரும் அழிவுகளை ஏற் படுத்தக்கூடிய இரசாயன மற்றும் நச்சுவாயு ஆயுதங் களை ஈராக் உற்பத்தி செய் யக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டது.

இதனை அவதானிப் பதற்கே யுத்த நிறுத்த ஒப் பந்தத்தின் பிரகாரம் UNSCOM உருவாக்கப் பட்டு ஐ. நா. ஆயுத பரி சோதனைக்குழுவும் நியமிக் கப்பட்டது.

நிபந்தனைகளை ஈராக் பூர்த்தி செய்யும் பட்சத்தில் ஈராக் மீதான தடைகள் முற்றாக நீக்கப்படும் என் றும் யுத்த நிறுத்த ஒப்பந் தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து விட்டதால் தடைகள் நீக்கப்பட வேண் டும் என்று ஈராக் கோரி வருகிறது. ஆனால் அமெரிக் காவின் செல்வாக்கில் இருந்து வரும் ஐ நா. பாதுகாப்புச்

அல்ஜீரியா, சுவீடன், ஆர் ஜென்ரீனா ஆகிய நாடு களைச் சேர்ந்த மூவர் அடங்கிய குழுவை ஐ. நா. செயலாளர் நாயகம் ஈராக் கின் தலைநகர் பாக்தாத் துக்கு அனுப்பி இருந்தார்.

கடந்த திங்கள் முதல் அமெரிக்க 'யு – 2' உளவு விமானங்கள் ஆயுதப் பரி சோதனைப்பணிக்கு ஐ. நா வினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. UNOSM இனால் ஏற்படுத்தப்பட் டுள்ள இந்த உளவு விமா னங்கள் சவூதி அரேபியாவில் நிலை கொண்டிருந்து தமது உளவுப்பணியை மேற் கொண்டு வருகின்றன.

தமது ஆயுதத் தளபாடங் கள் உள்ள பகுதி மீது பறந் தால் உளவு விமானத்தைச் சுட்டு வீழ்த்தப்போவதாக ஈராக் பயமுறுத்தி வருகிறது.

தனது விமான எதிர்ப்பு ஏவுகணைகளுக்கு எட்டாத தூரத்திலேயே இந்த உளவு விமானங்கள் பறப்பதாகவும் ஈராக் தெரிவிக்கிறது. ஆயு தப் பரிசோதனைக் குழுவின ரின் பணிகளை இந்த உளவு விமானங்களினால் நிறை வேற்ற முடியாது. எனினும் ஒரு பதில் நடவடிக்கை யாகவே ஐ. நா. இதனை மேற்கொண்டு வருகிறது.

இந்த உளவு விமானங்க ளுக்கு பாதுகாப்பு வழங்க அமெரிக்கா தனது யுத்த விமானங்களையும் அனுப்பி வருகிறது.

ஈராக் பெரும் அணு ஆயுத நாடாக உருவெடுத் தால் மத்திய கிழக்கில் அமைதி ஏற்பட மாட்டாது என்பது அமெரிக்காவிற்குத் தெரியும்.

இஸ்ரேலை ஒழித்துக்கட்டு வதில் ஈராக் இன்னும் உறுதியாக இருந்துவருகிறது.

வளைகுடா யுத்தத்தின் போது இஸ்ரேலையும் வலிய யுத்தத்துக்கு இழுக்க ஈராக் மேற்கொண்ட முயற்சிகள் கைகூடவில்லை. ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதல்களை இஸ்ரேல் அப்பொழுது பொறுத்துக் கொண்டது.

ஐ. நா. ஆயுத பரிசோத

---

ஈராக்கின் சனத்தொகை 2 கோடி 65 லட்சம். 75 முதல் 80 சதவீதமானோர் அரபுக்கள். ஏனையோர் குர்டிஷ் இனத்த வர்கள்.

மேற்கில் ஜோர்தானும் லிபியாவும், வடக்கில் துருக்கியும், கிழக்கில் ஈரானும், தெற்கில் குவைத், சவூதி அரேபியா ஆகிய நாடுகளும் ஈராக்கின் எல்லைகள். பாக் தாத் இதன் தலைநகர்.

ஈராக்கின் ஆயுதப் படையினரின் எண்ணிக்கை 3 லட்சத்து 82 ஆயிரம். 1980 – 88 இல் நடைபெற்ற 8 வருட கால ஈரான் – ஈராக் யுத்தத்தில் ஈராக் படைகளின் கையே ஓங்கியது.

ஈராக் முதலாவது உலக மகாயுத்தத் துக்குப் பின்னர் பிரிட்டனின் ஆட்சி அதி காரம் உள்ளநாடாக இருந்து. 1932 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று 1958 ஆம் ஆண்டு புரட்சி வரை மன்னர் ஆட்சி நாடாக இருந்து வந்தது.

---

ஒருநாடாவது வீட்டோ செய் திருந்தால் இத்தீர்மானத்தை நிறைவேற்றி இருக்க முடி யாது

ஈராக் மீது கடும் நடவ டிக்கை எடுக்கவேண்டும் என்பதில் அமெரிக்காவும் பிரிட்டனும் விடாப்பிடியாக இருந்து வருகின்றன,

ஐ. நா. ஆயுதப் பரிசோத னைக் குழுவில் அமெரிக்கர் களும் இடம் பெறுவதை ஈராக் அனுமதிக்க வேண்டும்

### சோவியத் யூனியன் பின்னணியில்

ஈராக் பலம் வாய்ந்த நாடாக உருவெடுப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தது முன்னாள் சோவியத் யூனி யன்தான்.

1972 ஆம் ஆண்டு சோவி யத் யூனியனும் ஈராக்கும் நட் புறவு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டன.

இந்த ஒப்பந்தத்தின் பிர காரம் சோவியத் யூனியன் பெரும் அளவு ஆயுதங்களை ஈராக்குக்கு அனுப்பியது. ஆயிரக்கணக்கான ரஷ்ய இராணுவ ஆலோசகர்களை யும் அனுப்பி வைத்தது. தற் பொழுது ஆட்சியில் இருக்கும் சதாம ஹுசேய்ன் 1979 ஆம் ஆண்டு பதவிக்கு வந்தார். மத்தியகிழக்கில் ஈராக்கை ஒரு பலம் வாய்ந்த நாடாக மாற் றுவதில் அவர் வெற்றி கண் டார்.

இஸ்ரேலுடன் இந்த நாடு எல்லைகளைக் கொண்டிராத போதிலும் இஸ்ரேலுக்கு ஒரு சவாலாக உரு வெடுத்து வந் தது.

### குவைத் மீதான படைஎடுப்பு

குவைத் மீதான ஈராக்கிய படை எடுப்பு 1990 ஒகஸ்ட் 2 ஆம் திகதி இடம் பெற்றது.

குவைத்தை தனது 19 ஆவது மாகாணமாக ஈராக் இணைத்துக் கொண்டது.

ஐ. நா. பாதுகாப்புச்சபை உடனடியாகக்கூடி ஈராக் மீது வர்த்தகத் தடையை விதித் தது. குவைத்தில் இருந்து [illegible] வெளி

---

ஈராக் அணு ஆயுத உற்பத்தி முயற்சி யில் நீண்ட காலமாக ஈடுபட்டு வருகிறது. 1981 ஜுலையில் இஸ்ரேல் விமானங் கள் பாக்தாத்தில் உள்ள ஈராக்கிய அணுசக்தி உலைகள் மீது குண்டு வீச்சு நடத்தி அவற்றை அழித்திருந்தன.

இதே போன்று 1993 ஜுனில் பாக் தாத்தில் உள்ள ஈராக்கிய உளவு நிலை யம் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்கு தல் நடத்தியது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் குவைத்துக்கு விஜயம் செய்த சமயம் அவரைக் கொலை செய்ய ஈராக்கின் உளவுத்துறையினர் முயன்ற னர் என்று அமெரிக்கா அப்பொழுது காரணம் கூறி இருந்தது.

---

சபை இதனை ஏற்கத் தயார் இல்லை.

### கோபி அனானின் சமரசமுயற்சி தோல்வி

ஐ. நா. ஆயுதப் பரிசோத னைக் குழுவுக்கு ஈராக் விதித்த தடை காரணமாக உருவாகி வரும் நெருக் கடிக்கு தீர்வுகாண ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்க வில்லை.

னைக்குழு விவகாரத்தால் தற் பொழுது உருவாகி உள்ள நெருக்கடியிலும் ஈராக் இஸ் ரேல் மீது தாக்குதல் நடத்த லாம் என்ற பீதி நிலவுகிறது.

ஈராக்கின் பலத்தை அழிப் பதற்கு குவைத் பிரச்சினை அமெரிக்காவுக்கு வாய்ப்பாக மாறினாலும் ஐ. நா வின் கட்டுப்பாடுகளின் மத்தியிலும் ஈராக் அடைந்துவரும் பலம் அமெரிக்காவுக்கு ஒரு சவால் தான். ★

## உலக உலா

என்.பி.சீலன்

1990 ஆம் ஆண்டு முதல் அமுலில் உள்ள ஈராக்மீதான ஐ. நா பாதுகாப்புச்சபையின் தடைகளைத் தொடர்ந்து அமுல்செய்வதற்கான கார ணங்களைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடனேயே இந்த ஆயுத பரிசோதனைக் குழுவை அமெரிக்கா பயன் படுத்துவதாகவும்-ஈராக் குற் றஞ் சாட்டிவருகிறது.

அமெரிக்கா 1991 ஆம் ஆண்டு ஈராக் மீது படை யெடுப்பதற்காக ஐ. நா வை எப்படி ஒரு கருவியாகப் பயன்படுத்தியதோ அதே போன்று இந்த ஆயுதப் பரி சோதனை விவகாரத்திலும் பயன்படுத்த முயற்சி எடுத்து வருகிறது.

ஐ. நா. ஆயுதப் பரி சோதனைக் குழுவுக்கு ஈராக் தடை விதித்தால், ஈராக்மீது

என்று ரஷ்யா, சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் கோருகின்றன.

ஆனால் இந்த விவ காரத்தை வைத்து ஈராக் குக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் படு வதை அவை எதிர்க்கின்றன.

1990 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் தடைகளால் ஏற்கனவே ஈராக் மோசமா கப் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் தடைகளைப் போடு வது நியாயமானது அல்ல என்பது இந்த நாடுகளின் கருத்து ஆகும்.

ஈராக் மீது மீண்டும் இராணுவ நடவடிக்கை எடுக் கப்படக் கூடாது என்று ரஷ்யா கோரி வருகிறது.

இந்த 5 நாடுகளில் ஈராக் கிற்கு கூட அனுதாபம் உள்ள நாடு ரஷ்யாதான்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org